


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

**உங்கள் நூலகம்**

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 13 இதழ் - 12 - மார்ச் 2022*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1
**படித்துப் பாருங்களேன்...**
ஆ.சிவசுப்பிரமணியன்........................................ 04

2
**அறிவியல் கலைச்சொல்லாக்கப் பணியில் டாக்டர் இராம சுந்தரத்தின் பங்களிப்பு**
டாக்டர். சு.நரேந்திரன்........................................ 11

3
**கோவலன் கதையும் கேரளக் கண்ணகி கதைகளும்**
அ.கா.பெருமாள்........................................ 19

4
**சோமலெ உள்ளூர் வரலாற்று எழுதியல் முன்னோடி**
இரா.காமராசு........................................ 25

5
**தமிழில் 'தணிக்கை' நூல் மிகமிக முக்கியமானது**
பழனிவேல் தியாகராஜன்........................................ 31

6
**மக்களை அதிகாரப்படுத்துவோம்**
க.பழனித்துரை........................................ 43

7
**தோழர் செஞ்சுடர் எஸ்.துரைராஜ் நினைவலைகள்**
சொ.சாந்தலிங்கம்........................................ 47

8
**சுபாஷ் சந்திரபோஸ் புதினங்களில் பண்ணைத் தொழிலாளர் நிலை**
பி.சா.மாதவி........................................ 51


9
**ஹெலிகாப்டர் பெற்றோர்கள்**
மருத்துவர் ப.வைத்திலிங்கம்........................................ 55

10
**இறையன்பு கவிதைகளில் காதல்**
ப்ரியா.சி........................................ 58

11
**மொழிமுதல் யகரமும் தொழுனையும்**
ஆ. கார்த்திகேயன்........................................ 61

12
**மதம் என்ற நிறுவனம் குறித்து சுயமரியாதை இயக்கத்தினரின் பார்வை**
முனைவர். ச.ஜீவானந்தம்........................................ 65

13
**தமிழ் இலக்கண மொழியியல் ஆளுமை**
ச. சுபாஷ் சந்திரபோஸ்........................................ 69



## படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# சோதனை வழி உண்மை அறிதலும் சித்திரவதை முறைகளும்

தெ.துர்கா தேவி (2019)
(19ஆவது நூற்றாண்டுத் தமிழ்நாட்டை முன்வைத்து)

*T.Durga Devi (2019) Ordeal and Torture (With Special Reference to Nineteenth Century Tamilnadu)*

*New Century Book House (P) Ltd Chennai 600 050*

இன்றைய நீதி அமைப்பில் உரிமையியல் (சிவில்), குற்றவியல் (கிரிமினல்) என்ற இரு பெரும் பிரிவுகளின் கீழ் வழக்குகள் ஆராயப்பட்டுத் தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. சொத்துரிமை, கடன்கோடல், மண உறவு, போன்றவை உரிமையியல் சட்டம் சார்ந்தும் களவு, கொள்ளை, வன்முறை, கொலை, பாலியல் என்பவை குற்றவியல் சட்டம் சார்ந்தும் ஆராயப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படுகின்றது. மன்னர் ஆட்சிக்காலத்திலும் நீதிவழங்கல் என்ற பெயரில் இவை நடந்துள்ளன. குற்றவிசாரணையும் தீர்ப்பு வழங்கலும் தொன்மையான ஒன்றாக வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. இன்று நடைமுறையில் இருப்பது போன்று எழுத்துவடிவிலான சட்டங்கள் மன்னர் ஆட்சியிலும் இருந்துள்ளன. பாபிலோனை ஆண்ட ஹேமுமுராபி என்ற மன்னன் (கி.மு1792-1750) தான் உருவாக்கிய சட்டங்களைக் கல்வெட்டுகளில் பொறித்து வைத்துள்ளான். இந்தியாவில் ஸ்மிருதிகள் என்ற பெயரிலான வடமொழி நூல்கள் பெரும்பாலும் சட்டநூல்களாகவே உள்ளன. வழக்குகளை ஆராயும் அவையத்தார், அவைக்களத்தார் என்போர் குறித்தும் அவை என்ற பெயரிலான நீதி வழங்கும் அமைப்பு குறித்தும் சங்க இலக்கியங்கள் பதிவிட்டுள்ளன.

இருப்பினும் இன்றைய நீதி அமைப்பு கடந்தகால வரலாற்றில் இடம் பெற்றுள்ள நீதி முறையைவிட வளர்ச்சிபெற்ற ஒன்று. எழுத்துவடிவிலான சட்டங்களாக மட்டுமின்றி மனித மாண்பைச் சிதைக்காத தன்மைத்தாய் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பை இவை இன்று கொண்டுள்ளன.(சில நேரங்களில் இவை பொய்த்துப் போவதும் உண்டு).

ஆனால் மன்னர் ஆட்சிக்காலச் சட்டங்கள் மன்னர்களின் விருப்பு வெறுப்பைச் சார்ந்து அமைந்தன. அத்துடன் தனிமனிதனின் மாண்பைச் சிதைக்கும் தன்மையைக் கொண்டிருந்தன. இதில். சோதனை வழி *(ordeal)* ஒருவன் குற்றமிழைத்தவனா என்பதைக் கண்டறிதலும் குற்றம் இழைத்தவன் என்று உறுதி செய்யப்பட்டவனை சித்திரவதைக்கு *(Torture)* ஆளாக்குதலும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. இவை இரண்டும் குற்றச்சாட்டிற்கு ஆளான மனிதனின் உடல் மீதான வன்முறையாக அமைந்ததுடன் அவனை உடல் ஊனமுற்றவனாக்கின. சில நேரங்களில் அவனது உயிரைப் போக்கவும் செய்தன.

**சோதனைவழி உண்மையறிதல்:**


குற்றச் செயல் ஒன்றைச் செய்ததாக ஐயப்பாட்டிற்கு ஆளாகும் ஒருவரோ ஒருத்தியோ கடுமையான துயரை விளைவிக்கும் உடல் வன்முறைக்கு ஆட்படுதலே சோதனைவழி உண்மையறிதலின் போது நிகழும். இது உலகளாவிய நடைமுறையாக இருந்துள்ளது. தர்மசாஸ்திரங்கள் என்ற பெயரில் வடமொழியில் இடம் பெற்றுள்ள அறநூல்கள் இதைக் குறிப்பிட்டுள்ளன. அர்த்தசாஸ்திரம், மனுதர்மசாஸ்திரம் என்பன இது குறித்த பதிவுகளைக் கொண்டுள்ளன. நெருப்பில் மூழ்கி சீதை தன் கற்பை உறுதிப்படுத்திய நிகழ்வு இராமாயணக் காவியத்தில் இடம் பெற்றுள்ளது. சிக்கலானதும் ஐயப்பாட்டிற்கு உரியதுமான வழக்குகளில் இம்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஸ்மிருதி என்ற பெயரிலான வடமொழிச் சட்ட நூல்களிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இவை எல்லாம் இதன் தொன்மையைக் குறிப்பிடுகின்றன.

சோதனை முறைகள் பல திறத்தன. நெருப்பு, நீர், துலாக்கோல், நஞ்சு, கடவுளரின் படிமத்தை நீராட்டிய நீர், தீட்டாத அரிசி, சூடாக்கப்பட்ட துண்டு நாணயம், மற்றும் ஏரின் கொழு, தர்ம அதர்மத்தின் படிமங்கள் என்பனவற்றில் ஒன்றின் துணையுடன் சோதித்தறிதல் நிகழ்த்தப்படும். இது நிகழும் முறை குறித்து நூலசிரியர் விளக்கமாக எழுதியுள்ளார். இதையடுத்து எத்தகைய சூழல்களில் நீதியைக் கண்டறிய சோதித்தறிதல் முறை பின்பற்றப்படும் என்பதனையும், இதைப் பின்பற்றுவது தொடர்பான வரையறைகளையும் நாரதர், பிரகஸ்பதி, விஷ்ணு பிதாமகர் என்போரின் வடமொழி நூல்களின் துணையுடன் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தில் இம்முறை வழக்கில் இருந்தமை குறித்து கல்வெட்டுக்கள், அய்ரோப்பிய நாடுகளில் இருந்து இங்கு வந்த கிறித்தவ சமயப்பணியாளர்களின் பதிவுகளின் துணையுடன் சில நிகழ்வுகளை எடுத்துக்காட்டியுள்ளார். இறுதியாக சோதனைவழி உண்மையறிதல் தொடர்பான சில நடைமுறைகளையும் தொகுத்து வழங்கியுள்ளார். இவரது மதிப்பீட்டின்படி, கடவுள் ஆற்றல் குறித்த நம்பிக்கையும், சாதிவேறுபாடும் சோதனை முறையில் நீதி வழங்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளன. உண்மையைக் கண்டறிவதற்கான ஒரு வகையான சித்திரவதை முறையாகவே சோதனை முறை இருந்துள்ளது.

**சித்திரவதை:**

குற்றச்சாட்டிற்கு ஆளானவர் குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்டால் அவருக்கு விதிக்கப்படும் தண்டனை முறைகளில் ஒன்றே சித்திரவதை *(Torture)*. இது அவரது உடல்மீது நிகழ்த்தப்படும் வன்முறை ஆகும். பணத் தண்டம் விதித்தல், சொத்துப் பறிமுதல், சிறைத் தண்டனை என்பன உடலை வருத்தாத நிலையில் உடலை வருத்தும் தண்டனையாக சித்திரவதை அமைந்தது. இது குறித்த பதிவுகள் வடமொழி தர்ம சாஸ்திரங்களிலும் அர்த்த சாஸ்திரத்திலும் இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களிலும் சில பதிவுகள் காணப்படுகின்றன.

உடல் உறுப்பைத் துண்டித்தல், சாட்டையால் அடித்தல், காய்ச்சிய ஈயம், எண்ணெய் ஆகியனவற்றைக் காதில் அல்லது வாயில் ஊற்றுதல், கல்லைக்



கட்டி நீரில் போடுதல், நெருப்பில் போடுதல் என்பன சித்திரவதை சார்ந்த தண்டனை முறைகளாக இருந்துள்ளன. இத் தண்டனை வழங்குவதற்குக் காரணமாக அமைந்த குற்றச் செயல்கள் சில, சாதியை அடிப்படையாகக் கொண்டிருந்தன என்பதையும், மூக்கு, காது, கைவிரல்கள், கை என்பன துண்டிக்கப்படும் உறுப்புகளாக அமைந்தன என்பதையும் வெளிப்படுத்தி உள்ளார்.

**நூலும் நூலாசிரியரும்:**



சோதனை முறையில் குற்றச் செயலை உறுதிப் படுத்துதல், தண்டனையாக சித்திரவதைக்கு ஆளாக்குதல் என்பன பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத் தமிழகத்தில் ஆங்கிலக் காலனிய ஆட்சியின் போது எவ்வாறு செயற்பட்டன என்பதை இந்நூல் எடுத்துரைக்கிறது, தம் முனைவர் பட்டத்திற்காக இந்நூலாசிரியர் மேற்கொண்ட ஆய்வே தற்போது இந் நூலாக வெளிவந்துள்ளது. இந் நூலின் ஆய்வுக் காலத்தை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிபுரிந்த காலம் (1801-1857) இங்கிலாந்து பாராளுமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் இருந்த காலம் (1858-1900) என ஆசிரியர் இரண்டாகப் பகுத்துக் கொண்டுள்ளார்.

உண்மையான வரலாற்றின் மீது ஆர்வம் கொண்டோர் வருத்தத்துடன் குறிப்பிடுவதற்கேற்ப நமது வரலாற்று வரைவுகள் அரசியல் வரலாறாகவே பெரும்பாலும் அமைகின்றன. இருப்பினும் குற்றச் செயல்கள் மற்றும் காவல்துறை சார்ந்த சமூக வரலாற்று நூல்கள் அவ்வப்போது வெளிவருவதும் நிகழ்கிறது. ஆனந்தி எழுதிய பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் குற்றமும் தண்டனையும், டேவிட் ஆர்னால்டின் காவல்துறையும் காலனிய ஆட்சியும், ஜெகதீசனின் சென்னை மாநிலத்தில் சட்டமும் ஒழுங்கும்(1850-1880) என்ற நூல்கள் இவ் வகையில் குறிப்பிடத் தக்கவை. இவ்வரிசையில் இந்நூலும் இணைந்துள்ளது. மதுரை நகரில் செயல்படும் டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியின் வரலாற்றுத் துறையில் உதவிப் பேராசிரியராக இந்நூலாசிரியர் பணியாற்றி வருகிறார். இச் சுருக்கமான அறிமுகத்துடன் நூல் நுவலும் செய்திகளைக் காண்போம்.

**சென்னை மாநிலம்:**

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொடங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலான காலத்தில் அன்றைய சென்னை மாநிலத்தை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி உருவாக்கியது. தமிழ் நாட்டின் முன்னாள் பாளையக்காரர்களும் திப்பு சுல்தான், ஹைதராபாத் நிஜாம் ஆகிய மன்னர்களும் ஆட்சி புரிந்த நிலப்பகுதிகள் படிப்படியாக ஒன்றிணைக்கப் பட்டு இம்மாநிலம் உருவானது. இதன் பின்னர் வட்டார ஆட்சியாளர்களாக விளங்கியோரிடமிருந்து காவல் உரிமை, நீதிவழங்கும் உரிமை என்பனவற்றைப் பறித்தது. நிலவரி வாங்குதல், காவல், நீதிவழங்கல் என்பனவற்றை மையமாகக்கொண்ட தனித் தனி துறைகளை உருவக்கியது. இவ்வாறு உருவாக்கப்பட்ட இத்துறைகளில் வருவாய்த் துறையும் காவல்துறையும் ஆ.கி. கம்பெனி அரசின் இன்றியமையாத் துறைகளாக விளங்கின. நிலவுடைமையளர்களிடம் இருந்தும் கைவினைஞர்களிடமிருந்தும் வரி வாங்கும் பணியில் வருவாய்த்துறை ஈடுபட்டது. இப்பணியில் சித்திரவதை முறைகளை வெளிப்படையாக மேற்கொள்ளும் உரிமை அதற்கு வழங்கப்பட்டிருந்தது (நிலவரி செலுத்தாமைக்காக ஒரு குடியானவர் மீதான இத்தகைய சித்திரவதை நிகழ்வை காரல் மார்க்ஸ் *On India* என்ற தமது நூலில் மேற்கோளாகக் காட்டியுள்ளார்).

காவல்துறை சட்ட ஒழுங்கைப் பராமரிக்கும் பணியில் ஈடுபடும் போது குற்றம் சாட்டப்பட்டவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற சோதனை முறைகளைப் பயன்படுத்தியது. குற்றவாளிகள் என்று முடிவு செய்யப்பட்டவர் மீது வன்முறையான சித்திரவதைகளைப் பயன்படுத்தியது. நீதி மன்றங்களும் சித்திரவதை சார்ந்த உடலை வருத்தும் தண்டனைகளை வழங்கின. அசைய முடியாது கட்டிவைத்து முதுகில் சவுக்கால் அடித்தல், குனியவைத்து முதுகில் கல்லைச் சுமக்கும்படிச் செய்தல், நீண்டநேரம் வெயிலில் நிற்கும்படிச் செய்தல், தனிமைச் சிறையில் அடைத்தல், நாடு கடத்துதல் என்பன பரவலாக அறியப்பட்ட சித்திரவதை சார்ந்த தண்டனைகளாக இருந்தன. இவை தவிர பல்வேறு சித்திரவதை முறைகள் வழக்கில் இருந்தன. தனிப்பட்ட பகை உணர்வைத் தீர்க்கும் வழிமுறையாகவும் இவை பயன்படுத்தப் பட்டன.

இத்தகைய சோதித்தறிதல் முறைகளும் சித்திரவதை முறைகளும் கி.கம்பெனி ஆட்சியின் மீது மக்களிடையே வெறுப்பை உருவாக்கின. இது இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பார்வைக்கும் சென்றது. இதன் விளைவாக அரசு ஊழியர்களால் நிகழ்த்தப்படும் சித்திரவதைகள் குறித்து ஆராய விசாரணை ஆணையம் ஒன்று நிறுவப்பட்டது.

1854 செப்டம்பர் 19 இல் நிறுவப்பட்ட இந்த ஆணையம் (Torture Commission) சென்னை மாநிலத்தில் வருவாய்த்துறையும் காவல் துறையும் மேற்கொண்ட சித்திரவதைகள் குறித்து ஆராய்வதைத் தன் நோக்கமாகக் கொண்டிருந்தது.

### ஆணையத்தின் பணி:

ஆணையத்தின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டனர். (1)எட்வர்ட் எஃப் எலியட். இவர் இங்கிலாந்து இராணுவத்தில் அதிகாரியாகவும், சென்னையில் செயல்பட்ட சிறு வழக்கு நீதிமன்றத்தில் (Small-Cause Court) நீதிபதியாகவும் பணியாற்றியவர். (2)ஜெ.பி.நாரட்டன். இவர் இங்கிலாந்தில் சட்டம் பயின்ற வழக்கறிஞர்(பாரிஸ்டர்). சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞராகவும், உள்ளூர்ப் பத்திரிகைகளின் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் செயல்பட்டு வந்தார். (3)எச்.ஸடோக்ஸ். சென்னை மாநிலத்தில் அறிமுகமான இரயத்துவாரி நில உரிமை முறையின் தீவிர ஆதரவாளர். சித்திரவதை தொடர்பான நிகழ்வுகளை ஆராய்வது இவர்களின் பணியாக அமைந்தது. சென்னையில் தற்காலிகமாக அமைந்த இதன் அலுவலகத்தில் வாரம் ஒருநாள் சித்திரவதைக்கு ஆளானோரிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டதுடன் விசாரணையும் நடத்தியது.

விசாரணையின் போது சித்திரவதைகளுக்கு ஆளான ஆண்களும் பெண்களும் தாம் அடைந்த கொடுமைகளை சாட்சியமாக ஆணையத்திடம், வழங்கினர். இதனால் எத்தகைய கொடூரமான தண்டனை முறைகளுக்கு மக்கள் ஆளாகி வந்துள்ளார்கள் என்ற உண்மை தெரியவந்தது. சித்திரவதை ஆணையம் இவற்றை எல்லாம் 1855 இல் வெளியிட்ட தன் அறிக்கையில் பதிவு செய்துள்ளது. அவற்றுள் சில வருமாறு:

- செம்மிளகு அல்லது மிளகாயை கண்ணில்,மூக்கில் அல்லது பிறப்புறுப்பில் தேய்த்தல்.
- தொப்புளில் பூச்சி ஒன்றை துணி அல்லது தேங்காய்ச் சிரட்டையால் மூடிக் கட்டிவைத்தல்.
- கழுத்தளவு சேற்றில் புதைத்து வைத்தல். கிணற்றில் நீர் இறைக்கப் பயன்படும் துலாவின் முன்பகுதியில் கட்டி மூக்கிற்கு ஒரு அங்குல இடைவெளி இருக்கும்படி கிணற்றில் முக்குதல்.
- தலை மயிரை அல்லது மீசையில் உள்ள மயிரைக் கையால் பிடுங்கி எடுத்தல்.
- சூடு போடுதல்.
- அமிலத் தன்மை கொண்ட முந்திரிப் பழச்சாறை கண்ணில் ஊற்றுதல்.
- மணல் அல்லது புழுதியின் மீது வெயிலில் நிறுத்திவைத்தல். உணவும் தண்ணீரும் வழங்காமை என்பன வரி செலுத்தாதவர் மீதான தண்டனைகளாக இருந்தன.

இவை தவிர தமிழகத்தில் நிலவிய சாதிவேறுபாட்டையும் உளவியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு பயன்படுத்தியுள்ளார்கள். இதன்படி உயர்சாதியாகக் கருதப்படும் மனிதனைக் குனியவைத்து அவன் முதுகில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவராகக் கருதப்பட்ட ஒருவரை அமரச்செய்வது, அல்லது ஒரே அறையில் அடைத்து வைப்பது என்பதைக் கடைப்பிடித்துள்ளார்கள்.

### கிட்டியும் அண்ணாந்தாளும்:

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் பரவலாக நடைமுறையில் இருந்த சித்திரவதை முறைகள் கிட்டி(கிட்டி போடுதல்) அண்ணாந்தாள் (அண்ணாந்தாள் போடுதல்) என்பனவாகும்.

கிட்டி போடும் தண்டனைக்கு ஒருவரை ஆட்படுத்துவது துணைக் குற்றவியல் நீதிபதியின் ஆணைக்கு உட்பட்டே நிகழும். அவர் ஆணை பிறப்பித்த பின்னர் பணியாற்றும் குற்றவியல் நீதிபதியால் அது உறுதி செய்யப்படவேண்டும். ஏன் எனில் வருவாய்த்துறையில் பணிபுரியும் கீழ்நிலை அதிகாரிகள் முன் அனுமதி பெறாது கிட்டிபோடுதல் வாயிலாக வரி வாங்குதலை மேற்கொள்வதுண்டு. எனவே குரூரமான, மனிதத் தன்மையற்ற இத் தண்டனையை குற்றவியல் நீதிபதிகள் ஆராயவேண்டிய அவசியம் இருந்தது.

கிட்டி என்பது மரத்தால் செய்யப்பட்ட இடுக்கி போன்ற ஒரு தண்டனைக் கருவி. எலுமிச்சையில் இருந்து சாறு பிழியப் பயன்படுத்தும் கருவியை ஒத்தது. முறுக்குக்கோல் என்றும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் லெக்சிகன் (volume II part I) குறிப்பிடுகிறது. 'Clamps used to press hands feet , etc in torture' என்றும் விளக்கம் தருகிறது. அத்துடன் 'கையுந் தாள்களும் கிட்டியார்த்தார்' என்ற திருவிளையாடல் புராண வரிகளையும் மேற்கோளாகச் (நரிபரியாக்கிய படலம் செய்யுள்: 9) சுட்டுகிறது. எனவே ஆங்கிலேயர் வருகைக்கு முன்பே வழக்கில் இருந்த கருவி என்று கருதமுடியும். இத்தண்டனை முறையானது தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பெரிதும் வழக்கில் இருந்ததாக இவ் ஆணையத்தின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இதை வருவாய்த்துறையின் கடைநிலை ஊழியர்கள் கையாள்வர். இக் கருவியின் துணையால் கைவிரல்கள் பின்னோக்கி வளைக்கப்படும். காவிரிச்சமவெளியின் பெருநிலக்கிழார்கள் தம்மிடம் பணிபுரியும் பெண் பண்ணையாட்களின் மார்பகங்களை இக் கருவியால் நசுக்கும் தண்டனையை வழங்கியுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் பாரம்பரியச் சித்திரவதைகளில் ஒன்று அண்ணாந்தாள். இதை ஆங்கிலேயர்களும் பின்பற்றியுள்ளனர். இத் தண்டனை வழங்க கயிறு மட்டும் போதும். மேலே குறிப்பிட்ட சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் லெக்சிகனில் இது குறித்தக் குறிப்பு இடம் பெற்றுள்ளது. தண்டனைக்கு ஆட்படுபவரைக் குனியவைத்து அவரது கழுத்தைக் கயிறால் தளர்ச்சியாகச் சுற்றி கயிறின்

இரு முனைகளில் ஒரு முனையை ஒருகாலின் கட்டைவிரலிலும் மற்றொரு முனையை மற்றொரு காலின் கட்டைவிரலிலும் கட்டிவிடுவர். இதனால் அவரால் நிமிரமுடியாது. குனிந்த நிலையிலேயே இருக்க வேண்டும். நிமிர முயன்றால் கழுத்தைச் சுற்றியுள்ள கயிறு கழுத்தை இறுக்கும். குனிந்த நிலையில் இருக்கும் அவரது முதுகில் ஒரு கல் வைக்கப்படும் என்று உ.வே.சாமிநாதையர்(1991:146) தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு தண்டனை முறைகளையும் குறிப்பிடும் நூலாசிரியர் மரத்தால் செய்யப்பட்ட சட்டகத்திற்குள் கால், கை ஆகிய உறுப்புக்களை வைத்து சட்டகத்தை இறுக்குதல் என்ற தண்டனை முறை இருந்ததையும் குறிப்பிட்டுள்ளார் (மதுரை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் இது 'குட்டையில் போடுதல்' என்ற பெயரில் வழக்கில் இருந்துள்ளதை முக்கூடற் பள்ளு என்ற சிற்றிலக்கியம் குறிப்பிடுகிறது). அத்துடன் பல்வேறு வகையான சித்திரவதைகளுக்கு ஆளானவர்கள் அளித்த வாக்குமூலங்களையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

1855 செப்டம்பரில் வெளியான இந்த அறிக்கை சித்திரவதைகளைக் குறிப்பிட்டாலும் இதற்குக் காரணமான வரிக் கொடுமை குறித்தும் அதைத் தடுப்பது குறித்தும் குறிப்பிடவில்லை. சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த ஹாரிஸ் சித்திரவதைகள் குறித்த கவலையை வெளிப்படுத்தினார்.வருவாய்த்துறையின் அதிகாரத்தையும் காவல் துறையின் அதிகாரத்தையும் தனித் தனியாகப் பிரிக்கவேண்டும் என்ற ஆணையத்தின் பரிந்துரையை மாநில அரசு ஏற்றுக் கொண்டது. வேலைப்பளு போதுமான கண்காணிப்பு இல்லாமை என்பன இதற்குக் காரணம் என்ற முடிவுக்கு கம்பெனியின் இயக்குநர் குழு வந்தது.

கிளர்ச்சிகளை அடக்குதலும், வரி செலுத்துதலை முறைப்படுத்தலும் கம்பெனியின் நோக்கமாக இருந்தமையால் சோதித்தறிதல் வழிக் குற்றங்களைக் கண்டறிதல், சித்திரவதைகள் என்பனவற்றின் துணையுடன் அதை நிறைவேற்றிக் கொண்டார்கள் என்பது நூலாசிரியரின் கருத்தாக உள்ளது. இவற்றை நடைமுறைப்படுத்துவதில் சாதி ஒரு தடையாக இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அதே நேரத்தில் அப்பாவிகள் மீதான துன்புறுத்தலில் கீழ் நிலை மக்களுடன் ஒப்பிடும் போது மேல்நிலை சாதியினர் மீதான பாதிப்பு குறைவானது என்றும் குறிப்பிடுகிறார். வரி வாங்குதல் அவர்கள் கையில் இருந்ததே இதற்குக் காரணம் என்பது அவரது கருத்தாக உள்ளது.அத்துடன் கல்வியறிவு பெற்றவர்களாகவும் சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றவர்களாக இருந்ததையும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

**இங்கிலாந்தின் நேரடி ஆட்சி:**

1857 இல் வட இந்தியாவில் நிகழ்ந்த சிப்பாய் எழுச்சியை அடுத்து கிழக்கிந்தியக் கம்பெனியின் பொறுப்பில் இருந்த இந்திய ஆட்சி உரிமை பறிக்கப்பட்டு இங்கிலாந்து பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குள் சென்றது. 1858 நவம்பர் ஒன்றாம் நாளன்று அப்போதைய இங்கிலாந்தின் பேரரசியாக இருந்த விக்டோரியா ராணி அறிக்கை ஒன்றின் வழி இதை வெளிப்படுத்தினார். இந்திய அரசுச் சட்டம் என்ற பெயரில் சட்டம் ஒன்று இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் இதன் பொருட்டு நிறைவேற்றப்பட்டது. இந் நிகழ்வில் இருந்து தொடங்கி இந் நூற்றாண்டு முடிவு வரையிலான காலத்தில்(1858-1900) சோதித்தறிதல் முறையில் குற்றம் கண்டறிதலும், சித்திரவதை முறையும் இந்தியாவில் எவ்வாறு செயல்பட்டன என்பதையும் அடுத்து ஆராய்ந்துள்ளார்.

புதிய ஆட்சியில் குற்றத்தடுப்பை நோக்கமாகக் கொண்டு சில சட்டங்கள் அறிமுகமாயின. இவற்றை உருவாக்கும் போது சித்திரவதை தொடர்பான முந்தைய ஆணையத்தின் கருத்துக்கள் உள்வாங்கிக் கொள்ளப்பட்டன. இந்திய காவல் துறைச் சட்டம் ஒன்றும் 1861 இல் உருவானது. இதன்படி நிர்வாகப் பொறுப்புகளில் இருந்து இந்தியர்கள் விடுவிக்கப்பட்டு ஐரோப்பிய அதிகாரிகளின் மேற்பார்வை வலுப்பெற்றது.

**குற்றப்பரம்பரையினர் பட்டியல் உருவாக்கம்**

குற்றச் செயல்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கில் ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட முயற்சியில் ஒன்றாக குற்றப்பரம்பரையினர் பட்டியல் ஒன்றை உருவாக்கி அதில் மக்கள் பிரிவினர் சிலரை இணைத்தமை அமைந்தது. அரசின் புள்ளிவிவரக்கணக்கின் அடிப்படையில் அப்போதைய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் குற்றச் செயல்கள் அதிகமாக நிகழும் மாவட்டங்களாகக் கருதப்பட்டன. காட்டுப் பகுதியில் வாழும் சில சாதியினர், வீடுகளை உடைத்தல், கொள்ளை, கால்நடைகளைக் கவர்தல், திருட்டு, வழிப்பறி அகிய குற்றச் செயல்களில் தொடர்ச்சியாக ஈடுபடுவோராக இருந்தனர். இவர்கள் மீது தவறான எண்ணம் கொண்டிருந்த ஆதிக்கசாதி நிலக்கிழார்களும் ஆங்கிலேயர்களும் குற்றச் செயல்களில் ஈடுபடுதலே இவர்களின் தொழில் என்ற தவறான முடிவுக்கு வந்தனர். இச்செயல்களில் இவர்கள் ஈடுபடுவதற்கான சமூகக்காரணங்களைக் கண்டறிவதில் அவர்கள் அக்கறை காட்டவில்லை. இச் சமூகங்களின் பின்னடைவுக்கான உண்மையான சமூக வரலாற்றுக் காரணங்களை இந்நூலாசிரியர் விரிவாகப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. ஆனால் ஆங்கில அரசோ இவற்றைப் பற்றியெல்லாம் ஆராயாது குற்றச்செயல் இவர்களது பிறவிக்குணம் என்று அடையாளப்படுத்தியதுடன் கடுமையாக நடத்தியது.

**பிற தண்டனைகள்**

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி மறைந்தாலும் அவர்கள் ஆட்சியில் நிலவிய தண்டனை முறைகள் புதிய ஆட்சியிலும் தொடர்ந்தன. சான்றாக பிரம்படி அல்லது சவுக்கடி எத்தகைய சூழல்களில் ஒருவருக்குத் தரப்படவேண்டும் என்ற விதிமுறைகள் நடைமுறையில் இருந்தன. காவல் துறையின் உயர் அதிகாரிகள் சவுக்கடியை ஆதரிப்பவர்களாகவே விளங்கினர். இத்தண்டனை வழங்கப்பட்டது தொடர்பான பத்திரிகைச் செய்திகளையும் ஆவணப் பதிவுகளையும் நூலாசிரியர் எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார்.

சிறைச் சாலைகளில் கடின உழைப்பிற்கு ஆளாகும் தண்டனைகள் கைதிகளுக்கு வழங்கப்பட்டன. இதன்படி மரம் அறுத்தல், தேங்காய் நார் உரித்தல், கேழ்வரகு, கோதுமை மாவு திரித்தல், சிறிய அளவிலான கொத்து வேலைகள் செய்தல், தண்ணீர் இறைத்தல், சமையல் செய்தல் போன்ற வேலைகளைச் சிறைக்குள் செய்யவேண்டும். சிறைக்கு வெளியே கல்லுடைத்தல், மண்தோண்டுதல். எண்ணெய் பிழிதல் போன்ற கடின வேலைகளை மேற்கொள்ளவேண்டும். இவை எல்லாம் ஆண்களுக்குரியன. பெண் கைதிகளுக்கென்றும் சில தண்டனைகள் உண்டு. அவற்றையும் இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். மொத்தத்தில் சிறைவாசிகள் மேற்கொள்ளவேண்டிய வேலைகள் அனைத்தையும் விரிவாகப் பட்டியலிட்டுள்ளார்.

இவற்றின் தொடர்ச்சியாக காவல் துறையின் ஒடுக்குமுறைகள் குறித்த விரிவான செய்திகள் இடம் பெற்றுள்ளன. வழிப்போக்கர்களிடம் கொள்ளையடித்தல். அவர்களுடன் வரும் பெண் பயணிகள் மீது நடத்தும் பாலியல் வல்லுறவு, கொலை, ஆட்கடத்தல், கையூட்டு, உடல் மீதான வன்முறை, பொய்வழக்குப் போடுதல் எனப் பல்வேறு குற்றச் செயல்களுடன் காவல் துறையினரைத் தொடர்பு படுத்தும் செய்திகளை அரசு ஆவணங்களில் இருந்தும் அக்காலத்தியப் பத்திரிகைச் செய்திகளில் இருந்தும் நூலாசிரியர் சேகரித்துள்ளார்(பக்:135-139).இச் செய்திகளின் அடிப்படையில் ஆங்கில மன்னராட்சியில் காவல் நிலையக் கொடுமைகளும் சிறை வாழ்வும் கடினமானவையாக இருந்துள்ளன என்ற முடிவுக்கு வந்துள்ளார். மொத்தத்தில் கி.கம்பெனியிடம் இருந்து இங்கிலாந்துப் பேரரசுக்கு ஆட்சி மாறினாலும் தமிழ்நாட்டில் நிகழ்ந்துவந்த உடல் மீதான தண்டனைகளில் மாற்றம் எதையும் அது ஏற்படுத்தவில்லை என்பதே நூலாசிரியரின் கருத்தாகவுள்ளது.

நம்மவர்களின் மீதான இழிவான எண்ணமும் கூட ஆங்கிலேயர்களின் வன்முறைச் செயல்களுக்குக் காரணமாக இருந்துள்ளது என்ற கருத்து இந் நூலில் இடம்பெற்றுள்ளது. ஓர் ஆட்டை விடக் கீழானவர்களாகவே அவர்கள் நம்மவர்களைக் கருதி உள்ளார்கள். பிரிட்டிஷ் படைவீரர்களால் தமிழர்கள் கொல்லப்படுவதென்பது இயல்பான ஒன்றாகத் தமிழ்நாட்டில் இருந்துள்ளது.தமிழ்நாட்டின் குடிமக்கள் குரூரமானவர்கள் என்றும் எனவே குரூரமான தண்டனைகளால் அவர்களை ஒடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கருதியுள்ளார்கள். சமூகத்தில் கண்ணியமான மனிதனாக வாழும் எந்த ஒரு மனிதனின் நெஞ்சைப் பிளக்கச் செய்யும் சித்திரவதைத் தண்டனைகளை அவர்கள் தமிழர்களுக்கு வழங்கினார்கள். இதற்குச் சான்றாக எடுத்துக்காட்டுகள் சிலவும் நூலில் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு:

'சல்யூட்' அடிக்காமைக்காக ஆங்கில அதிகாரிகள் ஒருவரை அடித்துக் கொன்றுவிட்டார்கள். இச் செயலுக்காக சிறிதளவு பணத் தண்டம் மட்டுமே விதிக்கப்பட்டது. *(8 மார்ச்1900)*

கிருஷ்ணரின் லீலைகளைப் படமாக வரைந்த ஒரு ஓவியருக்குக் குரூரமான தண்டனை ஆங்கில நீதிபதியால் வழங்கப்பட்டது. *(15 ஏப்ரல் 1892).*


இறுதியாக இத்தகைய தண்டனை முறைகளுக்கு ஆளானவர்கள் தமிழ்ச் சமூகத்தின் எப்பிரிவைச் சார்ந்தவர்கள் என்று அடையாளம் காண முயற்சி செய்துள்ளார். பக்கம் 110 இல் சாதிப் பாகுபாடு இன்றி அனைத்துச் சாதியினரும் கி.கம்பெனியின் உடல் சார்ந்த துன்புறுத்தலுக்கு ஆளாயினர் என்று கூறியுள்ளார் *(Caste was not a barrier for infliction of Ordeal and Torture under the rule of the English East India Company,Without discrimination, members of all Caste suffered at the hands of the Company rule in Tamilnadu'.)* நூலின் இறுதிப் பகுதியில்(பக்கம்162) சாதியப் படிநிலையில் அல்லது பொருளியல் நிலையில் கீழ் நிலையில் இருப்போர் மீதே இது நிகழ்த்தப்பட்டது என்கிறார்.

அவர் பயன்படுத்தியுள்ள சான்றுகளின் அடிப்படையில் பார்க்கும்போது கையூட்டும் இதில் பங்கு வகித்துள்ளது என்பதை அறிய முடிகிறது. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் சாதி. பொருளாதாரம் என்ற இரண்டின் தாக்கமும் இதில் இருந்துள்ளமை வெளிப்படுகிறது. எந்த சாதியினர் என்றாலும் கையூட்டு வழங்கி தப்பித்துள்ளனர் அல்லது வழங்க இயலாமையால் சித்திரவதைக்கு ஆட்பட்டுள்ளனர் என்ற முடிவுக்கு வர இயலும்.


இந்நூலில் இடம்பெற்றுள்ள சித்திரவதை முறைகள் ஆ.கி. கம்பெனி புதிதாக அறிமுகம் செய்தவை அல்ல. இங்கு அவர்களின் வருகைக்கு முன்னர் ஆட்சி புரிந்தோரால் நடைமுறைப்படுத்தப்பட்டவை என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

●

# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





₹ 250/-




₹ 210/-




₹ 350/-





₹ 210/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

டாக்டர் சு. நரேந்திரன்



# அறிவியல் கலைச்சொல்லாக்கப் பணியில் டாக்டர் இராம சுந்தரத்தின் பங்களிப்பு

1980-81ஆம் காலகட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் – பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகத் தொடங்கிய போராட்டம் மிகப்பெரும் கிளர்ச்சியாக மாறியது. போராட்டம் சில மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றது. அப்பல்கலைக்கழகத்தை அரசுடைமை ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. ஆசிரியர்களும்-பணியாளர்களும் மறியல் செய்தும், 144 தடை உத்தரவை மீறியும் சிறைக்குச் சென்றார்கள். கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. மாறாகக் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்ட ஆசிரியர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையில் நிர்வாகம் இறங்கியது. அந்தப் போராட்டத்தில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த பேராசிரியர் டாக்டர் இராம.சுந்தரம், அந்தக் காரணத்திற்காக, தம் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

**அறிவியல் தமிழுக்கு மடைமாற்றம்**

அதன்பிறகு என்ன நடந்தது என்பதை ‘புதிய புத்தகம் பேசுது’ திங்கள் இதழின் நேர்காணலில் அவரே கூறுவது “நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியே வந்தவுடன், சங்க இலக்கிய பொருளடைவு ஒன்றைக் கொண்டுவர நினைத்தேன். அத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட வ.அய்.சுப்பிரமணியம் சங்க இலக்கியக் களஞ்சியம் செய்யலாம். நான் திருவனந்தபுரத்திற்கு உன்னைக் கூட்டிப் போகிறேன்” என்றார். இது நடந்த பிறகு தான் அவர் துணைவேந்தராகப் பதவியேற்றார். என்னை வரச்சொல்லிக் கடிதம் அனுப்பினார். நான் சென்று சங்க இலக்கியக் களஞ்சியம் பற்றி அவரிடம் வினவினேன்.

அதற்கு அவர் “நான் இங்கு மூன்று ஆண்டுகள் இருப்பேன். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு திருவனந்தபுரம் சென்றுவிடுவேன். நீ அங்கு வந்து சங்க இலக்கியக் களஞ்சியத்தைத் தொடங்கலாம். இங்கு முக்கியமான வேறு பொறுப்பை உன்னிடம் தரப் போகிறேன். தமிழக முதல்வர் என்னிடம் இதை ஒப்படைத்திருக்கிறார். ம.பொ.சியிடம் நான் கூறிவிட்டேன் அதை நீ தான் செய்தாக வேண்டும். ஏன் இதை உன்னிடம் கொடுக்கிறேன் என்றால்

நீ அனைவரிடமும் நன்றாகப் பழகுவாய். உனது பலம் என்ன? என்பது எனக்குத் தெரியும். நீ அதைச் செய்ய வேண்டும் எனக் கூறிவிட்டு, நீ பொறியியல், மருத்துவம் முதலானவற்றைப் படிக்க வேண்டும் என்று நினைக்காதே. உனது வேலை நீ அடுத்தவரிடம் வேலை வாங்குவதுதான். அந்த வேலையைச் செய்யக் கூடியவர் யார்? யார்? என்று தேர்ந்தெடுத்து அவர்களுக்கான பாடத்திட்டம் என்ன? என்பதைப் பார்க்க வேண்டும்.

அதே போன்று தஞ்சாவூரில் மருத்துவக்கல்லூரி இருக்கின்றது. உனக்குத் தெரிந்த மருத்துவர்கள் இருப்பார்கள். அவர்களைச் சென்று பார்! திருச்சியில் பொறியியல் கல்லூரி ஒன்று உண்டு. அங்கு உள்ளவர்களிடம் பேசிவிட்டு வா" என்றார்.

இக்காலகட்டத்தில் தான் தமிழ் மாணவர்கள், அறிவியலைக் குறிப்பாகப் பொறியியல், தொழில் நுட்பவியல், மருத்துவவியல் பாடங்களைத் தமிழ்வழி கற்றுப் புதிய சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்றும் தமிழ் மக்கள் அறிவியல் வளர்ச்சிப் போக்குகளைத் தமிழ்மொழி மூலம் அறிந்து அறிவியல் விழிப்புணர்வு பெற்று அவரவர் வாழ்வை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ஆகிய இரு குறிக்கோளையும் செயல்படுத்த, திட்டம் - தமிழ் வளர்ச்சி இயக்ககம் ஒன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்டு, அதன் இயக்குனராக இராம சுந்தரம் அவர்கள் 5.11.1981இல் நியமிக்கப்பட்டார். இப்பின்னணியில் தான் ஒரு மொழியியலாளர் அறிவியல் தமிழை வளர்த்தெடுக்க இல்லை வார்த்தெடுக்க தன்னை மடை மாற்றம் செய்து கொண்டார். அல்லது தமிழ் இவரை அறிவியல் தமிழ் தாத்தா என போற்றும்படித் தடுத்தாட்கொண்டது என்றும் சொல்லலாம்.

### அறிவுசார் துறையை வளர்த்தெடுத்தவர்

இதன்பின் அறிவியலைத் தமிழில் சொல்லுவது, அறிவியல் துறையில் தமிழை வளர்ப்பது என இரு குறிக்கோளுடன் ஓர் அறிவுசார் துறையாக, அத்துறையை வளர்த்தெடுத்தார்.

மருத்துவவியல், பொறியியல், தொழில் நுட்பவியல் வளர்ச்சி ஒரு நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் பெருந்துணை புரிகிறது. இத்துறைகளின் வளர்ச்சியை தமிழ்மொழி வாயிலாகப் புரிந்து செயல்படுவதே எதிர்பார்த்த பலனைத் தரும். இதனைக் கருத்திற்கொண்டு பொறியியல், மருத்துவவியல் மாணவர்கட்குப் பயன்படும் விதத்தில் பாடநூல்களைத் தமிழில் உருவாக்குதலை முதன்மைப் பணியாகத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மேற்கொண்டது. இதன் பயனாக 13 பொறியியல் நூல்களும் 14 மருத்துவ நூல்களும் உருவாக டாக்டர் இராம சுந்தரம் துணை புரிந்தார். இது 166 ஆண்டுகளுக்குப் பின் அமெரிக்கத் தமிழரான டாக்டர் கிறீனுக்குப் பிறகு நிகழ்ந்த அற்புதச் செயலாகும்.

மேலும், தொழில்நுட்ப நூலாக்கத்துடன் கலைச் சொல் தொகுப்பும் துணைப்பணியாக இவர் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வெளியாகியுள்ள பொறியியல் மருத்துவவியல் நூல்களிலுள்ள கலைச்சொல் பட்டியல்களிலிருந்து, கலைச்சொல் தொகுக்கும் பணி 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

### கலைச்சொல் உருவாக்கம் – கட்டுரைகள் புதிய முயற்சிகள்

முதுநிலை ஆய்வாளர்களான இராதா செல்லப்பன் பொறியியல் கலைச் சொற்களையும், நே.ஜோசப் அவர்கள் மருத்துவக் கலைச் சொற்களையும், டாக்டர் இராம சுந்தரம் மேற்பார்வையில் தொகுத்தளித்தனர். இவற்றில் 140 மூலங்கள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்பட்ட மூலங்கள் கலைச்சொல் பட்டியலில் எண்ணிட்டுக் காட்டப்பட்டன. பொதுவியல், எந்திரவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறைச் சொற்கள் 13,000 தொகுக்கப்பட்டன. மருத்துவச் சொற்கள் 12,000 தொகுக்கப்பட்டன. இக்காலகட்டத்திலேயே டாக்டர் இராம சுந்தரத்தின் கலைச் சொல்லாக்கம் குறித்த பல ஆய்வுக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன.

*1983* - தமிழில் கலைச்சொல்லாக்க முயற்சிகள் (தமிழ்க்கலை), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

*1984* - தமிழ் வளர்ச்சி கலைச்சொல்லாக்கப்பணிகள் (தமிழ்க்கலை), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

*1986* - அறிவியல் கலைச்சொல்லாக்கம் ஒரு கண்ணோட்டம் (களஞ்சியம்), அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

*1988* - கலைச்சொற்களைத் தரப்படுத்துதல் (களஞ்சியம்), அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

*1993* - தமிழ்க் கலைச் சொல்லாக்கம் தொடர்பால் – மொழி நவீனத்துவம், பதி:நுஃமான், கொழும்பு, இலங்கை.

- கலைச்சொல்லாக்கத்தில் சமுதாய உணர்வு, அறிவியல் கல்வி கலைச் சொல்லாக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

- தமிழில் மருத்துவக் கலைச்சொற்களைத்

தரப்படுத்துதல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

- எழுத்துப் பெயர்ப்புச் சீர்மை (ஆசிரியர் பேரவை), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

1995 - தமிழில் கலைச்சொல்வளம் (தாமரை), எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், சென்னை.

2000 - அறிவியல் கலைச்சொற்கள் தமிழ்வளர்ச்சி, தேசிய குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டம், விருதுநகர்

2002 - உள்ள உவப்பே பிரதானம் கலைச்சொல்லாக்கம் குறித்த ஒரு கருத்தாடல், தமிழர் கண்ணோட்டம், தஞ்சாவூர்

2003 - கலைச்சொற்கள், பன்னாட்டு நோக்கில் தரப்படுத்தம், இணையாசிரியர் செ.வை.சண்முகம், இராதா செல்லப்பன், நிலைக்கதிர், கோவை.

மேலும் 'தமிழில் கலைச்சொற்கள்' என்ற மிகச் சிறந்த முனைவர் பட்ட ஆய்வும் இவரது நெறிகாட்டுதலின்படி பாவேந்தன் (2001) என்ற மாணவரால் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் இயக்குனர் பதவியிலிருந்து அறிவியல் தமிழ் துறைக்குத் தலைவரான பிறகு பொறியியல், மருத்துவப் பாடநூல்களைத் தயாரித்ததோடு 1,50,000 கலைச்சொற்களைத் திரட்டித் தொகுத்து வகைப்படுத்தித் தக்க அறிஞர்களைக் கொண்டு தரப்படுத்தி 80,000 சொற்களை 6 தொகுதிகளாகப் பல்கலைக்கழகத்தின் மூலம் வெளியிட்டார்.

கலைச்சொற்களைத் திரட்டும் காலகட்டத்தில் தன்னுடைய ஆய்வுகளின் முடிவுகளை தமிழ்மொழி வளர்ச்சியை மையமாகக் கொண்டு அதிலும் குறிப்பாக உயர்கல்வியில் தமிழைப் பாடமொழியாகப் பயன்படுத்தும்போது எதிர் கொள்ளும் சிக்கல்களையும் சிந்தித்து அதற்கான தீர்வையும் இதற்கான காரணத்தைக் கூறும்போது பல இதழ்களில் வெளிக் கொணர்ந்தார்.

'பொருள் புதிது வளம் புதிது' எனும் நூலின் முன்னுரையில் "இந்நூல் சொல்புதிது சுவை புதிது என்ற நூலை அடுத்து வருகிறது. இரண்டுக்குமிடையே 21 ஆண்டுகள் இக்காலகட்டத்தில் நான் கவனம் செலுத்திய துறைகளில் ஒன்று அறிவியல் தமிழ்த்துறை அதிலும் குறிப்பாகக் கலைச்சொல்லியல் பற்றியது" என்று ஆர்.எம்.எஸ் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கதாகும்.

**தொடக்கக்கால சொல்லாக்க செயல்பாடுகளை ஆராய்தல்**

கலைச் சொல்லாக்க முயற்சிகளைப் பற்றிக் கூறும்போது "கலைச் சொற்களை உருவாக்கும் போக்கு 160 ஆண்டுகளுக்கு முன் மேலைநாட்டுக் கல்வியைத் தமிழர்களுக்குக் கற்றுத் தரவேண்டும் என்பதைப் பெரு நோக்காகக் கொண்டு கலைச் சொற்கள் படைக்கப்பட்டன. அறிவியல் பரப்பில் பரப்புதல் முதல்நிலையிலும், மொழி உணர்வு இரண்டாம் நிலையிலும் இருந்தன. எனவே, அறிவுப் பரப்புதலில் ஈடுபட்டோரின் மொழிப் பயன்பாட்டுக்கேற்ப ஆங்கிலமும், சமஸ்கிருதமும் கூடுதலாகப் பயன்பட்டன.

1932இல் வெளிவந்த அரசு கலைச் சொல் பட்டியலுக்கு எதிராக சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் மேற்கொண்ட முயற்சி மொழி உணர்விற்கு முதன்மை தருவதாயிற்று. 1946இல் அமைக்கப்பட்ட சாஸ்திரியார் குழுவுக்கு எதிரான கண்டனமும் இதன் அடிப்படையில் எழுந்ததேயாகும். இந்த காலகட்டத்தில் தான் இந்தி எதிர்ப்புப் போராட்டமும் தலை எடுக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆங்கிலம், பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குவதில் ஏற்கனவே உள்ள சமஸ்கிருதச் சொல்லுக்கிணையான தமிழ்ச் சொல்லே எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் மூலம் தமிழில் அறிவு பரப்பும் பணி தொடங்கியது எனலாம்.

1960ஆம் ஆண்டிற்குப் பின் பல அறிவியல் துறைகளின் வளர்ச்சி பொறியியல், தொழில்நுட்பவியல் முன்னேற்றம் உலகத் தொடர்பு முதலியவை கருத்திற் கொள்ளப்பட்டு அதற்கேற்ப கலைச் சொல்லாக்கம் ஆங்கிலம், சமஸ்கிருதம் நீக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டது. இங்குக் கருத்துத் தெளிவுதான் முதன்மை பெறுகிறது. இயன்றளவு தமிழ் மொழி வழக்கு பேணப்படுகிறது. காலப்போக்கில் ஆங்கிலத்தின் தாக்கம் குறையக்கூடும் என்று இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**கலைச்சொல்லாக்க கோட்பாடு உருவாக்கம்**

இதற்கடுத்தபடியாக கலைச்சொல்லாக்கக் கோட்பாடுகளைப் பற்றிக் கூறும்போது "தமிழ் மக்களோடு தொடர்புடைய வாழ்வியல், அறிவியல் தொழில் நுட்பவியல் துறைகளில் தேவையான கலைச்சொல் உருவாக்கம் 1500, 2000 ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்துள்ளது. அப்பொழுது தாமே சொற்களை ஆக்கிக் கொள்ள இயலாவிடத்து, பிராகிருதம், பாலி, சமஸ்கிருதச் சொற்களைக்

கடன் பெற்றோ மொழி பெயர்த்தோ வழங்கினர். இதற்கென விதிகள் வகுக்கப்பட்டன. தற்சமம், தற்பவம் என்ற இரண்டின் அடிப்படையில் இந்தப் பிறமொழிச் சொற்கள் தமிழ்ப் படுத்தப்பட்டன. இன்று ஐரோப்பிய மொழிச் சொற்கள் ஏராளமாகத் தமிழில் இடம்பெற்றுள்ளன. அவற்றைத் தமிழாக்குவதற்குச் சரியான எழுத்துப் பெயர்ப்பு விதிகள் உருவாக்கப்படவில்லை.

எ.கா

*Hydrogen* - ஹைட்ரஜன், ஐட்ரசன்

*Oxygen* - ஆக்ஸிஜன், ஆக்சிசன், ஆக்ஸிசன்

*Stalin* - ஸ்டாலின், இசுடாலின்

என பலவாறு எழுதப்படுவதால் குழப்பம் ஏற்படும். இலக்கியத் தமிழில் பங்கஜம், கஜம் ஆகியன பங்கயம், கயம் என்றே 1000 ஆண்டுகளாக எழுதப் படுகின்றன. மாற்று எழுத்து வடிவம் இல்லை. அறிவியல் சொற்களைத் தமிழ் படுத்தும் போதும் தரப்படுத்தப்பட்ட எழுத்துப் பெயர்ப்பு விதிகள் தேவை. *(A Standard system of Transiliteration)* இந்த எழுத்துப் பெயர்ப்பு குறித்து முதலில் குறிப்பிடக் காரணம், இன்றும் பல துறைசார்ந்த அயல்மொழிச் சொற்களைத் தமிழ்ப் படுத்தாது அப்படியே எழுத வேண்டியிருப்பது தான்.

லேசர், ரேடார் ஆகியன இலேசர், இரேடார் என்றும் எழுதப்படுகின்றன. ஆனால் ஒலிக்கும் போது இகரம் ஒலிக்கப்படுவதில்லை. இங்கு ஒலிப்புமுறையும் எழுத்துமுறையும் (இணையாமல்) உள்ளன. எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு எழுத்துப் பெயர்ப்பு விதிகள் உருவாக்கப்படவேண்டும். அவ்வாறு உருவாகும்போது பல ஐரோப்பியச் சொற்களைத் தமிழ் படுத்துதல் சீர்மைப்படும்.

அறிவியல்மொழி எனக் கூறும்போது மொழி சாராக் கூறுகளான வாய்பாடு *(Formula)*, சமன்பாடு *(Equation)* குறியீடு *(Symbol)* என்பன. அவற்றைத் தமிழ்ப்படுத்த வேண்டியதில்லை; அப்படியே எழுதலாம். அதே போல தலைப்பெழுத்துச் சொற்களை *(Acronym)* நாம் தமிழ்ப் படுத்தி பின்னர் சுருக்கி எழுத வேண்டியதில்லை. *University Grants Commission* என்பதைப் பல்கலைக்கழக மானியக்குழு எனத் தமிழில் எழுதினாலும் *U.G.C* என்று தான் சுருக்கி எழுதுகிறார்கள். இதை ப.மா.கு என எழுதவில்லை.

ஆனால் *UNO* என்பதை ஐ.நா.சபை என எழுதுகின்றனர். இருந்தாலும் *UNESCO* யுனெஸ்கோ என்றுதான் எழுதப்படுகிறது. இங்கும் ஒருமைப்பாடு இல்லை. இந்த வகைச் சொற்களை, தொடர்களை மொழி பெயர்த்தாலும் அனைத்துலகக் குறியீட்டையே பயன்படுத்தலாம். ஆகவே மேற்கூறியவைகளின்படி எழுத்துப்பெயர்ப்பு செய்து வழங்குவதையும் ஏற்றுக் கொண்டால் எஞ்சிய கலைச்சொற்களை எப்படி ஆக்கிக் கொள்வது? என்பது பற்றி மட்டுமே சிந்திக்கத் தோன்றும்.

இன்று நாம் படித்துக் கொண்டிருக்கின்ற அறிவியல், வாழ்வியல் படிப்பு பிரிட்டிஷாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1830ஆம் ஆண்டில் இதற்கான தொடக்கம் தமிழகத்திலும் இலங்கையிலும் ஏற்பட்டது. இரேனியுசு பாதிரியார் பூமிசாஸ்திரம் என்கிற நூலை தமிழர்கள் அறிவு பெறுவதற்காக எழுதி 1832இல் வெளியிட்டார். இதன்பிறகு அறிவியல் தமிழ் தந்தையான டாக்டர் ஃபிஷ்கிறீன் ஐரோப்பிய மருத்துவநூல்களைத் தமிழ்ப்படுத்தி, தமிழ்வழி அதனைக் கற்பித்து, கலைச்சொல்லாக்கம் பற்றிய சில விதிமுறைகளையும் வகுத்தார். இது தமிழில் வெளியான ஐரோப்பிய மருத்துவம் குறித்த முதல் நூல். இதில் சமஸ்கிருத செல்வாக்கு மிகுதி என்றாலும் அது 19ஆம் நூற்றாண்டின் மொழிநிலையைக் காட்ட உதவுகிறது.

**கருத்தமைவுக்கு முதன்மை**

கலைச்சொல்லை ஆக்கும்போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியது அச்சொல் குறித்து நிற்கும் கருத்தமைவுதான். மூலச்சொல்/வேர்ச்சொல் பொருள் முக்கியமன்று.

*History, Historica(La) Histria, history (Gr) "tnowing".* இது *An account of events; The knowledge of the past events* எனப் பலவாறு விளக்கப்படும். இதைத் தொடக்கத்தில் சரித்திரம் எனத் தமிழாக்கினர். தற்போது இது வரலாறு என அழைக்கப்படுகிறது. வரலாறு என்பது பழைய தமிழ்ச் சொல்.

இவற்றால் தெரிவது மூலச் சொல்லின் வேர்ப்பொருள் அறிந்து கலைச் சொல்லைத் தமிழில் உருவாக்குவதைவிட அதன் கருத்தமைவை அறிந்து உருவாக்குவதே சிறந்தது என்பதாகும்.

1983 ஆம் ஆண்டில் மருத்துவ கலைச்சொல் தரப்படுத்துதல் செயலரங்கில் 5000 சொற்களும், 1984, 85ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற செயலரங்கில் 38,000 கலைச்சொற்களும் தரப்படுத்தப்பட்டு 3 தொகுதிகளாக வெளிவந்தன.

**கலைச்சொல்லாக்கத்தில் கவனிக்க வேண்டியவை**

இதில் இராம சுந்தரம் அவர்களின் வழிகாட்டுதலில் கடைபிடித்த கோட்பாடுகள் பல.

**1. பொருத்தமுடைமை / திறனுடைமை**

*(Apprpriateness / Efficiency)*

ஒரு கருத்தமைவுக்குப் பல கலைச்சொற்கள் இருக்கும்போது அவற்றுள் பொருத்தமான சொல்லைத் தரப்படுத்துதல். *Anotomy*-சரீர இயல்,

2. உடலமைப்பியல், உடலியல், உடற்கூறு இயல் இவற்றுள் பொருட்பொருத்தம் அல்லது பொருள் திறன் நேர்த்தி உடல்கூறு இயல் எனத் தரப்படுத்தப்பட்டது.

**3. ஏற்புடைமை** *(Adoptability)*

ஒரு கலைச்சொல் பெருவழக்கினதாகவும் மற்றொன்று அருகிய வழக்கினதாகவும் இருக்கும்போது பெருவழக்கிலுள்ளதை எடுத்துக் கொள்ளுதல். பெருவழக்கு என்பது சமூகத்தில் பொது இசைவு பெற்றதற்கு அடையாளமாகும். எனவே, அதற்கு ஏற்பளித்தல் தேவை.

**4. சொற்செட்டு/எளிமை**

மின்சாரவாரியம், மின்சாரத்தடை என வழங்கப்பட்டு வந்தமை தற்போது சொற்கட்டு கருதி மின்வாரியம், மின்தடை என வழங்கப்பட்டு வருவது எடுத்தாளப்பட்டன.

**5. ஒருமைப்பாடு**

கூடுமான வரை ஒரு துறை சார்ந்த கலைச்சொற்களைத் தரப்படுத்தும் போது ஒருமைப்பாடு குலையாது தரப்படுத்துதல் நல்லது.

**6. பலதுறைநோக்கு**

கலைச்சொற்களில் பலவும் ஒரு குறிப்பிட்ட துறைக்கென இல்லாது தொடர்புடைய பிற துறைகளிலும் பயின்று வரக் காணலாம். எனவே, கலைச்சொல்லாக்கும் போதும், தரப்படுத்தும் போதும், அவ்வத்துறை வழக்கையும் கவனத்தில் கொண்டு தரப்படுத்துதல் பயனுடையதாகும்.

**7. மொழித் தூய்மை**

ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் மொழித் தூய்மை வாதம் இப்போது அரசோச்சுவதில்லை. காரணம் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன வாகும். ஆனால் தமிழ் சமஸ்கிருத வேறுபாடு நமது வரலாற்றோடு சம்பந்தப்பட்டது. எனவே, தமிழில் கலைச் சொற்களைத் தரப்படுத்தும் போது சமஸ்கிருதச் சொல்லை நீக்குதலை ஒரு கோட்பாடாக சொல்லுவர். சீன, ஜப்பானிய, கொரிய, மங்கோலிய மொழிகளில் பிறமொழிச் சொற்கள் நீக்கும் போக்குப் பெருகிவருகிறது.

மேற்கண்ட கோட்பாடுகள் அடிப்படையில் தரப்படுத்துதல் நிகழும் போது நமது எதிர்பார்ப்பு நிறைவேறும். சிறுசிறு தொகுதிகளாக 2 லட்சம் கலைச்சொற்கள் தொகுக்கப்பட்டு, இலங்கையிலும் தமிழகத்திலும் வெளிவந்துள்ளன. இவற்றையெல்லாம் சேகரித்து ஆவணப்படுத்த வேண்டும். தமிழகத்திலுள்ள மரபு வழித் தொழிலாளர்களிடமிருந்தும் கலைச்சொற்களைத் திரட்ட வேண்டும். புதுச் சொற்களை ஆக்க வேண்டும்.

**8. கலைச்சொல்லாக்கத் தீர்வகம்**

இப்பணிகளை மேற்கொள்ள தமிழ்க் கலைச்சொல் தரப்படுத்தக் குழு ஒன்று உடனே அமைக்கவேண்டும். இதில் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் சார்பாளர்கள் இடம்பெறவேண்டும். இது ஓர் தீர்வகமாக *Clearing House)* இருந்து செயல்பட வேண்டும். இக்குழு துறைவாரியாகவும், பொதுவாகவும், கலைச்சொல் அகராதிகளை வெளியிட வேண்டும்.

இத்துடன் அறிவியல் மொழி பெயர்ப்பு மையம் *(Centre for Translating Science literature)* ஒன்று நிறுவப்படவேண்டும். இந்த மையம் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும், பயன்படக்கூடிய விதத்தில் மூல அறிவியல் நூல்களைத் தமிழில் வெளியிடும் பணியை மேற்கொள்ளவேண்டும்.

கலைச்சொல்லாக்கத்தில் காணப்படும் மொழி உணர்வைத் தொடர்ந்து சமுதாய உணர்வும் இடம்பெறக் காண்கிறோம்.

எ.கா. அரசினர் குருடர், செவிடர் பள்ளி என்பது 'அரசினர் பார்வை இழந்தோர்', 'காது கேளாதோர் பள்ளி' என அழைக்கப்படுவது சமுதாய உணர்வு சார்ந்ததாகும். குருடு, செவிடு என்பன சொற்சுருக்கம், பொருள் திட்பம் உடையன என்றாலும் அவற்றை அன்றாட வழக்கில் இழித்தும் பழித்தும் பேசுவதற்குப் பயன்படுத்துவதால் அவற்றை மாற்றி, அவை சுட்டும் பொருளைக் கலைசொல்லாகக் கொண்டு வழங்கும் நிலை தோன்றியது எனத் தன் ஆய்வின் பல கூறுகளை விளக்குகிறார்.

**9. பழந்தமிழில் கலைச்சொல்வளம்**

தமிழில் கலைச்சொல்வளம் பற்றி எழுதும்போது 'தமிழில் கலைச்சொற்கள் இல்லை' என்பது தமிழ் கலைச்சொல் வரலாறு அறியாதோர் கூற்றாகும் எனக் கூறும் டாக்டர் இராம சுந்தரம் இலக்கண இலக்கியக் கல்வி தமிழ்வழி நடைபெற்ற காலத்து அதற்கான கலைச்சொற்கள் தமிழில் உருவாக்கப்பட்டன எனக்கூறி, தொல்காப்பியம் தரும் சில இளமைப் பெயர்களைச் சுட்டுகிறார்.

பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி ஆகியவைகள். இதே போல பிங்கல நிகண்டில் உறுப்புப் பெயர்கள் வரிசைப்படுத்தப்படுகிறது. தோல், இரத்தம், குருதி, ஈரல், விழுக்கு, குடல், குண்டி, நரம்பு, எலும்பு என

70க்கும் மேற்பட்ட சொற்கள் உள்ளன. இதே போல போகர் வைத்தியம் 700 என்ற நூல் 464 நோய்களையும் 778 வகை மூலிகைகளையும் கூறுகிறது.

எனவே, தமிழில் கலைச்சொற்கள் இல்லை என்பதோ கலைச் சொல்லாக்கம் இயலாததென்பதோ தமிழ் மொழியின் ஆற்றலையும் திறனையும் அறியாதோர் கூற்றாகும் என்பதே இராம சுந்தரம் அவர்களின் முடிவு. இதனைத் தொடர்ந்து இராம சுந்தரம் அவர்கள் தமிழ் சொல்வளத்தோடு சான்று என்று உணவு உட்கொள்ளும் வகை சார்ந்த சொற்கள் என "அசைத்தல், அதுக்குதல், அரித்தல், அருந்துதல், உண்ணுதல் என 33 சொற்கள் பாவாணர் சொல்லாராய்ச்சிக் கட்டுரையில் உள்ளன" என்று கூறுகிறார்.

இடைக்காலத்தில் கலைச்சொல்லாக்கத்தில் தொய்வு ஏற்பட்டதற்கான காரணத்தைக் கூறும்போது இலங்கையும், இந்தியாவும் விடுதலை பெற்றதும் தமிழ்ப் பயிற்றுமொழிக் கோட்பாடும் விடைபெற்றது என்று கூறி, 150 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்ப் பல்கலைக்கழகம் 14 பாடநூல்களைத் தயாரித்த பின்பு அவற்றில் 40ஆயிரம் கலைச்சொற்கள் சுட்டப்பட்டுள்ளன. ஆனால் வகுப்பறையில் தமிழ் நுழையாததால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை எனக் குமுறுகிறார்.

கிரந்த எழுத்துகளைப் பற்றிக் கூறும்போது கிரந்த எழுத்துக்களை, சமஸ்கிருத மொழி எழுத்துக்கள் என்பது தவறு. கி.பி.5,6 ஆம் நூற்றாண்டில் தமிழர்கள் தேவை கருதி உருவாக்கிக் கொண்ட எழுத்துக்களே இவை. ஆகஸ்டு, ஆஸ்திரேலியா போன்ற சொற்களை ஆகசுடு/ஆகஃசுடு, ஆசுதிரேலியா என எழுதும்போது ஒலி பெயர்ப்பு சிதைந்து போகிறது. ஆகவே இன்றைய தமிழில் குறிப்பாக எழுத்துப் பெயர்ப்பு முறையில் ஸ, ஷ, ஜ, ஹ ஆகிய கிரந்த எழுத்துக்கள் தவிர்க்க இயலாதவை. ஆனால் இதற்கு ஒரு ஒழுங்கு தேவை எனக்கூறி தமிழில் எழுத்துப் பெயர்ப்புக்கு உள்ளாகும் சொற்கள் பெரும்பாலும் பெயர்ச் சொற்களே. வினைச் சொற்களும் இடைச்சொற்களும் மிகக் குறைவே என்கிறார்.

### 10.கலைச்சொல்லாக்கம் உருவாக்கம்: உலக அனுபவம்

கிராமப்புறம் என்ன செய்யவேண்டும் என்று இராம சுந்தரம் அவர்கள் கூறும்போது "பாரதி, மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ் சொல் கிடைக்காத நிலையைக் குறிப்பிட்ட பின் இன்று மெம்பர் என்பது உறுப்பினர் என ஆக்கம் பெற்று புழக்கத்தில் உள்ளது. காரணம் இக்கலைச் சொற்கள் புழக்கத்தில் வந்து பயிலப்பயில அதன் கருத்தமைவு (Concept) விளக்கம் பெறுகிறது. அதற்கேற்ப கலைச்சொற்கள் சீராக்கப்படுகின்றன. வெறும் அகராதியில் மட்டும் சொற்கள் இருப்பின் அவற்றுக்கு வாழ்வு இல்லை" என்று கூறியபின் தொடர்ந்து உலகநாடுகள் எப்படி சொற்களை உருவாக்க முனைந்து வருகின்றனர் என்பதை ஆஸ்திரியாவின் வியன்னாவிலுள்ள பன்னாட்டுக் கலைச்சொல் தரப்படுத்த அமைப்பு செயல்பட்டு வருகிறது. இதன் சார்பில் Into term, Termnet, Standard Term என்ற இதழ்கள் வெளிவருகின்றன. இத்துடன், பன்மொழி அகராதியும் வெளியிடப் படுகிறது" என்பதைச் சுட்டிக்காட்டி பிறமொழிக் கலைச்சொற்களைக் கடன் வாங்கும் போக்கை எல்லா மொழிகளும் இரண்டாம் நிலையில்தான் வைக்கின்றன. தன் மொழியில் கலைச்சொற்களை உருவாக்குவதை முதல் கோட்பாடாகவும் பிறமொழிச் சொற்களை இரண்டாவது கோட்பாடாகவும் ஏற்றுச் செயல்படுகின்றன என்று கூறுகிறார்.

மேலும் பிறமொழிச் செல்வாக்கு/ஆதிக்கத்துக்கு உட்பட்ட மொழிகள் கூட தம் மொழிக் கலைச்சொற்களையே வழங்குகின்றன. ஜெர்மன், ரஷ்யமொழிகளின் செல்வாக்கிலிருந்த போலிஷ் மொழி ஆயிரக்கணக்கில் கலைச் சொற்களை உருவாக்கிக் கொண்டுள்ளது என்று கூறி தமிழில் கலைச்சொல் வளர்ச்சி பற்றி ஆராய்வதோடு, உலக மொழிகளிலுள்ள கலைச்சொல் ஒப்பாய்வும் தேவைப்படுகிறது என்கிறார்.

### 11. தமிழுக்கு கலைச்சொல் மையம்


மேலும் நடைபெற்று வரும் கலைச்சொல் பணிகளை ஒருங்கிணைக்கும் வண்ணம் தமிழ்க் கலைச்சொல் மையம் ஒன்று அமைய வேண்டும். முதல் உலகத் தமிழ் மாநாட்டில் இவ்வேண்டுகோள் வைக்கப்பட்டது. ஆனால் இன்று வரை இது செயல்வடிவம் பெறவில்லை என்று ஆதங்கப்பட்டு உலகளவில் பிரான்சில் பிரெஞ்சு அகதமியில் (academy) கலைச்சொல்லாக்கப் பணியில் 300க்கும் அதிகமான அறிஞர்கள் பணியாற்றுவதைக் குறிப்பிடுகிறார். இதே போல் ரஷ்யாவிலும், சீனாவிலும் பல்லாண்டுகளாக இவ்வகை அமைப்புகள் செயலாற்றி வருகின்றன. எனவே, தமிழ் வளர தமிழ் கலைச்சொல் அமைப்பு ஒன்று நிறுவித் தரமான கலைச்சொல் அகராதிகள் வெளிவர உதவவேண்டும் என்று கூறுகிறார். இத்துடன் "நமது கலைச்சொல்லாக்கப் பணி மேலும் சிறப்புற வேண்டுமெனில் தமிழைப் பயிற்று மொழியாக அனைத்து துறைகளிலும் செயல்படுத்த வேண்டும். அப்பொழுது தமிழில் கலைச்சொல் இல்லை, தமிழுக்குச் சொல்லுந் திறன் இல்லை என்று கூறுவது வெற்றுரை என்பது

புலப்படும் என்று கூறி, பயிற்றுமொழியாகத் தமிழ் இடம்பெறாத வரை புதிய, புதிய அறிவியல் தொழில்நுட்பத்துறை சார்ந்த நூல்கள் பெருமளவில் வெளிவரும் என்று எதிர்பார்க்க முடியாது. ஒரு மொழி ஒரு துறையில் இடம்பெறவில்லை என்றால் அதில் நூல் வருதல் சாத்தியம் இல்லை. எனவே மொழியின் பயன்பாட்டைக் குறைத்துவிட்டு நூல் இல்லை சொல் இல்லை என்பது பொருத்தமற்ற வாதமாகும் என்று கூறுகிறார். இதனால் நாம் தமிழ் பயிற்றுமொழி அவசியத்தை நன்றாகப் புரிந்து கொள்ளமுடிகிறது.

**முடிவுரை**


- பேரா.இராம.சுந்தரம் மொழியியல் துறையிலே தொடர்ந்திருந்தால் அறிவியல் தமிழுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கும். அவரை மடை மாற்றம் செய்து புதிய துறைக்கு அறிமுகம் செய்த பெருமை துணைவேந்தர் வ.அய்.சுப்பிரமணியத்தைச் சாரும்.
- ஆர்.எம்.எஸ் பல அறிவியல் நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட முதற்காரணமாக, தூண்டுகோலாக இருந்தார். எண்ணற்ற கலைச் சொற்களைத் தொகுத்து வெளியிடவும் செய்தார்.
- கலைச்சொல் உருவாக்கக் கோட்பாடுகளை உருவாக்கித் தந்துள்ளார். எளிமை, சுருக்கம், கருத்தமைவு ஆகியவற்றை மனதிற்கொண்டு கலைச் சொற்களைப் படைக்க வேண்டும் என்று வழிப்படுத்தியுள்ளார்.
- நமது இலக்கண, இலக்கியங்கள், தத்துவங்கள் ஆகிய இவற்றில் கையாண்டுள்ள கலைச்சொல் வளம் குறித்து புலப்படுத்தியுள்ளார்.
- பன்னாட்டு அனுபவங்களையும் கலைச்சொல் உருவாக்கத்தில் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.
- மொத்தத்தில் எதிர்கால அறிவியல் மொழி திட்டமிடலில் அவர் நமக்கு ஒரு முன்னோடி என்று கூறலாம்.

*(டில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் டாக்டர் இராம.சுந்தரம் அவர்களது நினைவு நாளை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்க உரையின் சுருக்கம்)*




05.03.22 அன்று சென்னை புத்தகக் கண்காட்சி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அரங்கில் இரா.செல்வம் ஐ.ஏ.எஸ். அவர்களின் பனையடி நாவல் அறிமுக விழா நடைபெற்றது. இதில் மாண்புமிகு நீதியரசர் டாக்டர் ஜெயசந்திரன், முதன்மை வரிமானவரி ஆணையர் கோ.குருசாமி இ.வ.ப., தென்னக ரெயில்வே தணிக்கைத் துறை தலைமை இயக்குநர் சி.நெடுஞ்செழியன் ஐ.ஏ.ஏ.எஸ்., நூலாசிரியர் இரா.செல்வம் ஐ.ஏ.எஸ். ஆகியோர் கலந்துகொண்டர்


# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





₹ 365/-




₹ 325/-




₹ 110/-




₹ 60/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



கட்டுரை

# கோவலன் கதையும் கேரளக் கண்ணகி கதைகளும்

அ.கா.பெருமாள்

தமிழகத்திலும் கேரளத்திலும் கண்ணகி தொடர்பாகக் கிடைக்கின்ற கதைகளில் பொதுவான தன்மை உண்டு. இந்தக் கதைகள் வாய்மொழியாகவும் அச்சுப்புத்தகமாகவும் ஏட்டுவடிவாகவும் உள்ளன. இவற்றில் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் கதையின் மூலக்கூறுகளைக் காணமுடியும். இவை இவற்றின் பொதுத்தன்மை. இதைக் கருதுகோளாகவும் எடுத்துக்கொள்ளலாம். இதுவே கேரளக் கண்ணகி வழிபாட்டு பழமையைக் காட்டும்.

### புகழேந்தி

தமிழகத்திலும் கேரளத்திலும் காணப்படும், வழக்கில் உள்ளதும், வாய் மொழியாகப் பேசப்பட்டதுமான கண்ணகி கதைகளில் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தது புகழேந்திப் புலவரின் பேரில் உள்ள கோவலன் கதை. இக்கதையின் செல்வாக்கு ஆழமாய் உடுருவி இருக்கிறது.

தமிழ் அம்மானைப் பாடல்களில் புகழேந்திப் புலவரின் பேரில் உள்ளவை அதிகம். இந்தப் புகழேந்தி நளவெண்பா பாடிய புகழேந்தி அல்லர். இவர் பேரில் மகாபாரதக்கதை தொடர்பாக 13 அம்மானைப் பாடல்கள் உள்ளன. இவை தவிர கோவிலன் கதை உட்பட 12க்கு மேற்பட்ட வேறு அம்மானைகளும் உள்ளன.

தமிழகக் கதைப் பாடல்கள் பற்றி விரிவான நூல் எழுதிய மு.அருணாசலம், அட்டாவதானம் வீராசாமிச் செட்டியாரே அம்மானைப் பதிப்புகளில் புகழேந்திப் புலவரின் பெயர்வரக் காரணமாய் இருந்திருக்கிறார் என்கிறார். வீராசாமிச் செட்டியார் தம் காலத்தில் வழங்கிய வாய்மொழிக் கதைகளைப் புகழேந்திப் புலவரின் பெயரில் சேர்த்துச் சொன்ன தகவலை BRN Sons போன்ற பதிப்பாளர்கள் ஆதாரமாக ஏற்றுக் கொண்டனர்.

### கோவிலன் கதையின் காலம்

புகழேந்திப்புலவர் பேரில் உள்ள அம்மானை வரிசைப் பாடல்களில் கோவிலன் கதை காலத்தால் முற்பட்டது. இது 3184 வரிகளைக் கொண்டது. 1894ஆம் ஆண்டு முதல் பதிப்பு வந்தது. பின் எத்தனையோ பதிப்புகள் வந்துவிட்டன. (பி.இ.எண் 7) ப.எண். 152 பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை இக்கதைப் பாடலின் ஓலைச் சுவடியைத் தென்திருவிதாங்கூரிலிருந்து பெற்றிருக்கிறார். இந்த ஏடு-1700 அளவில் பிரதி செய்யப்பட்டிருக்கலாம் என்பது அவரது ஊகம். எனவே புகழேந்திப் புலவர் பேரில் உள்ள கோவிலன் கதை 1700க்கு முன்பே வழக்கில் இருந்தது என்று கொள்ளலாம், (எஸ். வையாபுரிப் பிள்ளை இலக்கிய மணிமாலை 1964 - ப168).

### புகழேந்தியின் செல்வாக்கு

தமிழில் 17க்கும் மேற்பட்ட கூத்து நாடகவடிவங்கள் உள்ளன. இவை படிப்பதற்கும்

*நடிப்பதற்கும் எழுதப்பட்டவை. உரைநடை நாடகங்கள் 1933ல் திரைப்படமாகி விட்டது. அதன் பின் 3 திரைப்படங்கள் வந்துவிட்டன. கண்ணகி கதையைக் கதைப் பாடல் வடிவில் 12 பேர்கள் எழுதியுள்ளனர். இவை பிற்காலத்தவை (பி.இ.எண் 8) ப.எண் 153. கேரளத்தில் தமிழ் மொழியிலமைந்த 5 கோவிலன் கதைகள் கிடைத்துள்ளன. மலையாளத்தில் அமைந்த 11 கதைகளைச் சேகரித்துள்ளனர் (பி.இ.எண் 9) ப.எண்.154.*

*இந்த வடிவங்கள் எல்லாவற்றையும் ஒரே போக்கில் வைத்து ஆராய்ந்தால் இவற்றின் மூலம் புகழேந்திப் புலவரின் கோவிலன் கதை என்பதை ஊசிக்க முடியும்.*

**கோவிலன் கதை பதிப்பு**

*புகழேந்திப் புலவர் பேரில் உள்ள கோவிலன் கதைப்பாடலை எட்டுக்கும் மேற்பட்ட பதிப்பாளர்கள் பதிப்பித்துள்ளனர். இவற்றின் மொத்தக் கதையமைப்பில் வேறுபாடில்லை. ஆனை கண்ணியப்ப நாயக்கர் பதிப்பில் (1908) பின்இணைப்பில் வட்டபுரியம்மன் என்னும் காளி பாட்டு (பி.இ.எண் 10) ப.எண் 155 என்ற பாடலும் உள்ளது.*

*இந்த அம்மானைப் பாடலில் காளி கண்ணகியாகப் பிறந்தாள் என்றும் அவள் பாண்டியனைப் பழிவாங்கிய பின் உலகெங்கும் கோவில் கொள்ளப்போனாள் என்றும் அவள் மாரியம்மன் பகவதி எனப்பெயர் பெற்றாள் என்றும் உள்ளது. அம்மானைப் பாடல்களும் பழைய பாடல்களும் கண்ணகியைக் காளி, பகவதி என்னும் சொற்களால் குறிக்கின்றன. ஒரு கூத்து நாடகம் பகவதியை மலையாள பகவதி எனக் குறிப்பிடுகிறது.*

**நாட்டார் தெய்வ நிலைப்பாடு**

*கண்ணகி வழிபாடு பெற்றலின் அவள் தொடர்பான செய்திகள் வாய் மொழியாகப் பரவி-யிருக்கலாம். ஒரு நாட்டார் தெய்வம் ஏதோ காரணத்தில் குறிப்பிட்ட இடத்தில் வழிபாடு பெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. வெப்புநோய், செழிப்பு காரணமாக வழிபாடு பெறும் பெண் தெய்வங்கள் பற்றிய செய்திகள் பயணிகளாலும். குடிபெயர்ந்து செல்பவராலும், வணிகர்களாலும் பரவும்; இப்படிப் பரவும் தெய்வங்கள் கோவில் கொள்ளுவதற்கும் காரணங்கள் உண்டு. இதை பேரா.தெ.லூர்து ஒரு கருதுகோளாகவே கூறுகிறார். (1986 ப.24).*

**கதாபாத்திரங்கள்**

*சிலப்பதிகாரத்தில் இல்லாத கதாபாத்திரங்கள் புகழேந்திப் புலவரின் அம்மானையில் வருகின்றன. சில பெயர் மாற்றங்களுடன் உள்ளன. இவை ஏற்கெனவே வாய்மொழி மரபில் வழக்கில் இருந்திருக்கலாம். வஞ்சிக்காண்ட நிகழ்வு புகழேந்திப் புலவர் அம்மானையில் இல்லை; கேரள மரபுக் கண்ணகிக் கதைகளிலும் இல்லை. மேலும் கவுந்தியடிகளின் பாத்திரமும் அம்மானையிலும் வாய்மொழி மரபிலும் இல்லை. அம்மானையில் உள்ள பாத்திரங்கள் வருமாறு:*

| | |
|---|---|
| மாசாத்துவான் | மாச்சோட்டன் |
| மாதவி | மாதகி |
| மாதவி | ஆச்சி |
| சித்திராவதி | வசந்தமாலை |
| கோவலனின் தாய் | வர்ணமாலை |
| பாண்டியனின் மனைவி | கோவிலங்கி |
| கண்ணகி | கர்ணகி (கோவிலங்கியின் மகள், மாநாய்க்கனின் வளர்ப்பு மகள்) |
| பொற்கொல்லன் | வஞ்சிப்பத்தன் |
| கோவலனைக்கொலை செய்யும் ஆள் | மழுவரசன் |
| பொற்கொல்லனின் மக்கள் | சுந்தரலிங்கம் சோமலிங்கம் |

*சிலப்பதிகாரம் உவேசாவின் காலத்திலேயே தமிழ்ப் புலவர்களிடம் நன்கு அறியப்பட்ட காப்பியமாய் இருக்கவில்லை, அம்பாசமுத்திரம் அருகே உள்ள ஒரு ஊரில் சைவகுரு ஒருவர், சிலப்பதிகாரத்தை சிறப்பதிகாரம் என்று உச்சரித்தார். 1880ல் அச்சிடப்பட்ட சிலப்பதிகாரம் புகார்காண்டத்தில் முன் அட்டையில் சேரமான் பெருமாணாயனார் இயற்றிய சிலப்பதிகாரம் என்றிருந்தது.*

*உவேசா தமிழகமெங்கும் தேடி அலைந்து 22 சிலப்பதிகார ஏட்டுப் பிரதிகளே சேகரித்திருக்கிறார். இவற்றில் உரையுடன் கூடிய பிரதிகள் 14 மட்டும்தான் ஆக 19 ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலும் கேரளத்திலும் அறியப்பட்ட கண்ணகி கதையின் மூலப்பனுவல் தமிழ்ப்புலவர்களாலேயே அறியப்படவில்லை என்பது முக்கியமான விஷயம். இக்கதை பல்வேறு வடிவங்களைப் பெறுவதற்கு இதுவும் ஒரு காரணம்.*

**கேரளத்துக்கதைகள்**

*கேரளத்தில் கண்ணகி கதை தொடர்பான கதைகளில் கோவலன் கர்ணகி கதை 1979ல் வந்தது. (நடராஜன் பதிப்பு பி.இ. 11) மன்னான் சாதியிடம் வழக்கில் உள்ள கதையை டாக்டர் நகீம்தீன் பதிப்பித்துள்ளார் (1992 பி.இ.12). நிர்மலா தேவி கோவிலன் கதை என்ற ஒரு வடிவத்தை வெளி-யிட்டுள்ளார் (2003 பி.இ.13). கண்ணகி கதை என்றும் பேரில் ஏட்டுப் பிரதி ஒன்று கேரளப் பல்கலைக்கழகக் சுவடிப்புலத்தில் உள்ளது. கன்னியாகுமரி கேரள எல்லையில் உள்ள குலசேகரம் ஊரை அடுத்த மங்கலம் என்னும் குக்கிராமத்தில் உள்ள காளி*

கோவில் விழாவில் கண்ணகி கதை பாடப்படும் வழக்கம் 70களில் இருந்தது. இது வாய் மொழி வடிவம்.

கேரளத்தில் மலையாளத்தில் தோற்றம் பாட்டு (பி.இ.14) ப.எண்.192 சிலம்பு கதை (பி.இ.15) ப.எண்.194 கோயிலாண்டி கதை (பி.இ.எண் 16) ப.எண்.195 ஸ்ரீ குறும்பா கதை (பி.இ. 17) ப.எண். 197) ஆவியர் பாட்டு மரக்கால் பாட்டு, ஏட்டப்பாடி இருளரின் கதை, நல்லம்மா கதை, பாலக்காடு சித்தூர் வண்ணாரிடம் வழங்கும் கதை கொடுங்கல்லூரில் வழங்கும் கதை திருவனந்தபுரம் ஆற்றுக்கால் பகவதி கோவிலில் பாடப்படும் வில்லுப்பாட்டு கதை மணிமங்கலம், தோற்றப்பாட்டு கதை என 12க்குமேல் கதை வடிவங்கள் உள்ளன.

### சில செய்திகள்

புகழேந்திப் புலவரின் கோவிலன் கதையில் வரும் சில செய்திகள் கேரள மரபிலும் வருகின்றன. இவற்றில் குறிப்பாக,

*கோவிலன் குடும்பத்தார் செட்டி சாதியினர் காளி பாண்டியனின் மகள் பாண்யள். காளி கோவில்களின் கதவை அடைக்கக்கூறுதல் பாண்டிமாதேவியும் குற்றவாளி கண்ணகி வட்டபுரி அம்மானாக அவதாரம் பெறுதல்*

ஆக இப்படியான செய்திகள்-வாய்மொழி மரபிலிருந்து கேரளத்திற்கும் புகழேந்திப்புலவர் அம்மாளைக்கும் சென்றன என்று தெரிகிறது.

### கோவலன் செட்டியார்

புகழேந்திப்புலவர் அம்மானையில் கோவிலன் குடும்பத்தார் செட்டி சாதியினர் என்று குறிக்கப்படுகின்றனர். இவர்கள் பூர்வீகமாய் காவிரிப்பூம்பட்டிணத்தினர். தமிழக வாய்மொழி மரபிலும் கோவலன் செட்டியார் எனவே குறிக்கப்படுகிறான்.

மாச்சோட்டன் மரபில் வந்த முத்துச்செட்டி (மாநாய்க்கன்) இவனது மகன் (கோவலன் செட்டி) 16 வயதில் கொலைப்பட வேண்டும் என்ற காமதேனுவின் சாபம் உண்டு. திருவனத்தபுரம் ஆற்றுக்கால் கோவில் சுற்று மதில் சிற்பங்கள் கண்ணகி கதை தொடர்பானவை. இவற்றில் செட்டி சமூகத் தொடர்புச் சிற்பங்கள் உண்டு. வட மலபார் கண்ணகிக் கோவில்களுடன் செட்டியார்களுக்குத் தொடர்பு உண்டு என்பதும் கேரளக் தோல் பாவைக் கூத்தை நிகழ்த்திய ஆரம்பகாலக் கலைஞர்கள் செட்டிசாதியினர் என்பதும் குறிப்பிடத்தகுந்தது. (பி.இ.எண் 18) ப.எண் 199.

செட்டி சாதியினர் பூம்புகாரிலிருந்து குடிபெயர்ந்த போது கண்ணகி கதையையும் கூடவே கொண்டு சென்றிருக்கிறார்கள். இது பற்றிய செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இப்படி இவர்கள் குடிபெயர்ந்ததற்கு பூவந்திச் சோழனுடன் மணவுறவு காரணமாக ஏற்பட்ட பூசல் என்ற ஒரு கதை உண்டு. (பி.இ.எண் 11 ப.எண் 520).

காவிரிப்பூம் பட்டிணத்திலிருந்து குடிபெயர்ந்த செட்டிகள் அரியூர் பட்டிணத்தில் குடியேறினர். இவர்களில் சிலர் மலையாள தேசத்திற்குச் சென்றனர். இவர்கள் கண்ணகியையும் உறவினர்களாகச் சொல்லிக் கொண்டனர்.[2] கேரளத்துக்குச் சென்ற நகரத்தார் செட்டிகளுடன் தமிழகச் செட்டிகள் உறவை முறித்துக் கொண்டனர். (ராமநாதன் செட்டியார் 2013, ப.9) இப்படியாக கண்ணகி கதை கேரளத்துக்குச் சென்றது.

### கண்ணகி பாண்டியனின் மகள்

சிலப்பதிகாரம் தவிர தமிழகத்திலும் கேரளத்திலும் வழங்கும் வாய்மொழி மரபிலும் எழுத்து மரபிலும் கண்ணகி பாண்டியனின் மகள் என்னும் கதை பொதுவாக வழங்குகிறது. கண்ணகி பாண்டியனின் மகளாகப் பிறப்பதற்கும் ஒரு காரணக்கதை உண்டு.

பாண்டியன் ஒருவன் ஏதோ காரணத்தால் தன் தலைநகர் மதுரையின் எல்லையில் உள்ள காளிகோவிலின் கதவை அடைக்கச் சொல்லுகிறான். அக்கோவிலில் வழிபாடு செய்து விளக்கேற்றுபவர் தண்டிக்கப்படுவார் என்று ஆணை இடுகிறான். இந்த வழமை தெரியாத எண்ணெய் வாணியன் ஒருவன் காளி கோவிலில் விளக்கேற்றுகிறான், இதை அறிந்த பாண்டியன் வாணியனைக் கொல்ல உத்திரவு இடுகிறான்.

வாணியன் கொலைப்படுகிறான். அப்போது காளி வாணியனிடம் பாண்டியனின் மகளாக நான் பிறந்து உன் கொலைக்குப் பழிவாங்குவேன் என்கிறான்.

பாண்டியன் பிள்ளைவரம் வேண்டும் என்று காட்டில் தவம் செய்கிறான். அவன் மனைவி கோவிலாங்கி தவமிருந்தாள். மதுரை சொக்கலிங்கம் காளியின் உயிரை எலுமிச்சம் பழமாக மாற்றி பாண்டியன் மனைவியிடம் கொடுத்தான். அவள் அதை உண்டு கர்ப்பமானாள், பத்தாம் மாதத்தில் கண்ணகி வலது காலில் செஞ்சிலம்பும் இடது கையில் செப்பேடுமாகப் பாண்டிமாதேவியின் கன்னம் வழிப்பிறக்கிறாள். (புகழேந்திப்புலவர் கோவிலன் கதை பக் 10).

பிறந்த குழந்தை கொடி சுத்திப் பிறந்ததால் வீட்டிற்கு ஆகாதென்று சோதிடர் கூறினார்[3] அதனால் குழந்தையைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விடுகின்றனர். ஆற்றில் மிதந்து செல்லும் குழந்தையை மாநாய்க்கன் எடுத்து வளர்க்கிறான். அவளைக் கோவலனுக்கு மணம் செய்து வைக்கிறான். கண்ணகி

காளியின் அம்சம் ஆதலால் கோவலனுடன் உடலுறவு வைக்கவில்லை.

**மன்னான் கதையில்**

பாண்டியன் காளிகோவிலின் கதவை அடைத்தது. காளி பாண்டியனுக்கு பிறந்தது ஆகிய செய்திகள் கேரளப் பழங்குடியினரான மன்னான் என்பவர்களின் வாய்மொழி மரபுகதையிலும் உள்ளது. (டாக்டர் நசீம்தீன் பதிப்பு கோவலன் சரித்திரம் 1992) வர்ணமாலை என்பவள் தவமிருந்து ஒரு பெண் குழந்தை பெறுகிறாள். இதே நேரம் பாண்டியன் குழந்தைக்காகத் தவமிருக்கிறான். குழந்தை பிறக்காததால் காளி கோவிலில் விளக்கேற்ற தடை விதிக்கிறான். இதை மீறி கம்மாளன் ஒருவன் காளி கோவிலில் விளக்கேற்றுகிறான். அதனால் பாண்டியனின் காவலன் கம்மாளனை வெட்டுகிறான்.[4] இதனால் காளி பாண்டியனின் மகனாகப் பிறந்து அரசனைப் பழி வாங்குகிறான் (டாக்டர் நசீம்தீன் 1992 ப.59).

**கேரள வாய்மொழி மரபில்**

கண்ணகி தோற்றம் பாட்டில், தென் கொல்லத்தில் நாராயணன் என்னும் அரசன் இருந்தான் என்றும். இவன் பாண்டிய வம்சத்தினன் என்றும், இவனது மகன் காளியின் அம்சமுடையவன் என்றும் செய்திகள் வருகின்றன. ஸ்ரீ குறும்பா கதையிலும் இதே செய்தி வருகிறது. தென் கேரளத்தில் கிடைத்துள்ள கண்ணகி ஏடு பாண்டியனின் மனைவி கோப்புளாங்கியின் வயிற்றில் காளியின் அம்சமாக கண்ணகி பிறந்தாள் எனக் கூறும். கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் மங்கலம் கோவில் கல்வெட்டு “பாண்டியனார் பெற்றெடுத்த கண்ணகியே தாலேலோ” எனக்கூறும்.

**அம்பாப்பாட்டில்**

நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் கண்ணகி கதை பற்றிய செய்திகள் வாய்மொழியாகவும், பாடல் வடிவிலும் உள்ளன. இவற்றில் கண்ணகி மாரியம்மனாகக் கொள்ளப்படுகிறாள். கடல் மக்களின் அம்பாப்பாடலில் கண்ணகி மாதாவே காப்பாற்று தாயே என வரம் கேட்பதுண்டு. இங்கும் கண்ணகி பாண்டியர் குலத்தவளாகக் கருதப்படுகிறாள். காளி கோவிலில் கதவடைத்த செய்தி அம்பாப்பாடலிலும் வருகிறது.

**சிலம்பின் மூலம்**

கண்ணகி கதை தொடர்பான,

1. காளி கோவில் கதவைப் பாண்டியன் அடைக்குமாறு உத்தரவு இடுதல்
2. பாண்டியன் மகளாகக் காளி பிறத்தல் அல்லது அம்சமாக இருத்தல்
3. கண்ணகி காளியாக/துர்க்கையாக உருவகிக்கப்படுதல்

என்னும் செய்திகள் தமிழ். மலையாள மரபில் உள்ளன. இச்செய்திகள் சிலப்பதிகார மூலத்திலிருந்து உருவாயின என ஊகிக்க முடியும்.

பாண்டியன் காளிகோவிலின் கதவை அடைக்கச் செய்த செயலுக்கு சிலப்பதிகாரம் கட்டுரைக்காதையில் வரும் (54-125-107-112) ஒரு நிகழ்வு காரணம். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் இப்பகுதியில் வரும் ஐயை என்ற தெய்வத்தை துர்க்கை, கொற்றவை என்று கூறுகின்றனர். (சோமசுந்தரனார், மதுரைக் காண்டம் ப.323, வேங்கட சாமிநாட்டார் 1943 ப.481).

ஐயை கோவில் மதுரையில் உள்ள துர்க்கை கோவில் என்றும் சிவன் கலையமர் செல்வி என்றும் வரும் அரும்பத உரையாசிரியர் கூறுகிறார். (உ.வே. சா. 1960 ப.502, 311)

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் எடுக்கிறான். இக்கோவிலுக்கு தேவந்தி முதலியோர் வருகின்றனர். கண்ணகி தெய்வமாக வந்து எல்லோரையும் வாழ்த்துகிறாள். (சிலப்பதிகாரம் வாழ்த்துக்கதை பாடல் 10).

**தென்னவன் தீதிலன்; தேவர்கோன் தன் கோவில்
நல்விருந்து ஆயினான்; ஞானவள்தன் மகள்
வெள்வேலன் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடும் தொழியிர் எல்லோரும் வம்மெலாம்**

என்பது அப்பகுதி.

இப்பகுதிக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் “முன் மானிட யாக்கையில் கொண்ட சிவப்பறித் தெய்வ யாக்கை கொண்ட சிலப்பதிகாரத் தெய்வ யாக்கை பெறுதற்குக் காரணமாயினான் என்பது பற்றி நான் அவன் மகள் என்றாள்” என்கிறார். (உ.வே. சா 1960 ப.573) பெருமழைப் புலவரும் “... யான் இப்போது அப்பாண்டியன் காரணமாக தெய்வப் பிறப்பு எய்தினமையால் அவனுடைய மகளாவேன்.” என்கிறார் (சிலப்.வஞ்சி.ப.169).

**சாபம் கொடுத்தல் முதலியன**

முன் குறித்த இரு செய்திகள் தவிர புகழேந்திப் புலவரின் அம்மானையில் உள்ள வேறு செய்திகளும் கேரள வாய்மொழி மரபிலும் எழுத்து வடிவிலும் உள்ளன. இவை

1. கண்ணகி திருடர்களுக்குச் சாபம் கொடுத்தல்
2. பாண்டிமாதேவி குற்றவாளி

*3.* கோவலன் தானே மாய்த்துக்கொள்ளுதல்

*4.* மாதரியின் வீட்டை எழுப்பியது

*5.* பொற்கொல்லன் குடலை உருவியது

*6.* வட்டபுரியம்மனாக மாறுதல் ஆகியவற்றைக் கூறலாம்.

புகழேந்திப் புலவர் அம்மானையில் கண்ணகி சாபம் கொடுக்கும் நிகழ்ச்சி வருகிறது. கோவலனும் கண்ணகியும் காட்டுவழி மதுரைக்குச் செல்லுகின்றனர். ஒரு இடத்தில் கோவலன் அவளைத் தனியே விட்டுவிட்டு தண்ணீர் கொண்டுவரச் செல்லுகிறான். அப்போது ஏழு திருடர்கள் அவளை வழிமறிக்கின்றனர். அவளது மங்கலநாணைக் கழற்றுமாறு கட்டாயப்படுத்துகின்றனர். கண்ணகி அவர்களைக் குத்துக்கல்லாகுமாறு சாபமிடுகிறாள். இந்த நேரத்தில் அங்குவந்த கோவலன் நடந்ததை அறிந்து அவர்களை மன்னித்து மறுபடியும் மனிதர்களாக்கி விமோசனம் அளிக்கக் கேட்கிறான். அவளும் அப்படியே செய்கிறாள். இது புகழேந்திப்புலவர் அம்மானையில் ஒரு நிகழ்ச்சி (பக் 5,5,56)[5]

இதே நிகழ்ச்சி தென் திருவிதாங்கூர் குலசேகரம் மங்கலம் காளி கோவில் விழாவில் பாடப்படும் வில்லுப் பாட்டு கதையிலும் வருகிறது.[6] வடகேரளக் கதைகளில் இந்த நிகழ்ச்சி இல்லை.

சிலப்பதிகாரத்தில் நாடுகாண் கதையில் (வரி 2:14-215) கண்ணகியையும் கோவலனையும் பார்த்து வம்பப்பரத்தனும் வறுமொழியானனும் கிண்டலாகப் பேசுவது கண்டு கவுந்தியடிகள் சாபம் கொடுப்பதான நிகழ்ச்சி வருகிறது. இதே செய்தி புகழேந்தியிடம் நாட்டார் தன்மையுடன் மாறுதல் பெற்றிருக்கவேண்டும்.

பாண்டிமாதேவி கோவலனுக்காக இரங்குவதும். அதனால் பாண்டியன் அவளைச் சந்தேகப்படுவதுமான நிகழ்ச்சி சிலப்பதிகாரத்தில் இல்லாதது, புகழேந்திப்புலவர் அம்மானையில் வருகிறது. கோவலன் அநீதியாகக் கொல்லப்படப் போகிறான் என உணர்ந்த கோவலனின் மனைவி கோவிலங்கி, கோவலன் ராஜ வீதியில் கைதியாய் செல்லப்படுவதைக் கண்டு "பார்த்து அழலுற்றாள் ராஜகன்னி" இதனால் பாண்டியன் கோபப்படுகிறான்(பக் 74-76). இதே நிகழ்ச்சி தென்கேரளத்தில் கிடைத்த கதைப்பாடலிலும் வருகிறது (நடராஜன் 1970 ப.64).

கேரள மன்னான் பழங்குடி மக்களிடம் வழங்கும் கோவலன் கதையிலும் இந்த நிகழ்ச்சி வருகிறது. டாக்டர் நசீம்தீன் 1992 பக் 60-67) ஸ்ரீ குறும்பா கதையில் தட்டான் கோவலனின் அழகில் பாண்டிமாதேவி மயங்கிவிட்டாள் என்கிறான். இது போன்ற செய்தி வடகேரளக் கதைகளில் வருகிறது.

**பொதுவான சில செய்திகள்**

புகழேந்தி தன் சமகால நாட்டார் வழக்காற்றுக் கதைகளுக்கேற்ப கோவிலன் கதையை மாற்றி இருக்கிறார். இவை கேரளக் கதைகளில் சில மாறுபாடுகளுடன் வருகின்றன.

கோவலனைக் கொலையாளிகள் வெட்டுகின்றனர். ஆனால் அவன் கழுத்தில் பூமாலை விழுகிறது. கொலையாளிகள் அஞ்சி ஓடுகின்றனர். உடனே கோவலன் வாளை எடுத்துத் தன் மீது பாய்ச்சிக்கொள்ளுகிறான். இது நாட்டார் கதைப் பண்பின் ஒரு கூறு. தன்னேரில்லாத காவியத் தலைவனை யாரும் அழிக்க முடியாது. அவனே விரும்பினால் மட்டுமே அது முடியும், இது போன்ற நிகழ்ச்சி கான்சாகிப் சண்டை, மதுரை வீரன் கதை, தேவசகாயம் பிள்ளை கதை போன்றவற்றில் வருகிறது.

கோவலன் இறந்த செய்தியைக் கண்ணகியிடம் சொல்லாமல் மறைக்கிறாள் இடைக்குலப்பெண். இதனால் கண்ணகி அவள் வீட்டை எரிக்கிறாள். பின் இடைச்சி கண்ணகியைப் பணிந்து தான் அப்படி மறைத்ததன் காரணம் என்ன என்பதை விளக்கியபின் அவளது வீட்டை எழுப்பிக் கொடுக்கிறாள். (கோவிலன் கதை ப.83). இது போன்ற நிகழ்ச்சி மத்திய கேரளக் கண்ணகி கதையிலும் குலசேகரம் வில்லுப்பாட்டிலும் வருகிறது.

கண்ணகி பொற்கொல்லனைக் கொன்று அவனது குடலை உருவி மாலையாகப் போடுவதான நிகழ்ச்சியைப் புகழேந்திப் புலவரின் அம்மானை வருணிக்கிறது. (கோவிலன் கதை பக்.98, 99) இதைத் தென் கேரளத் தமிழ் கதைப் பாடல் ஒன்று கூறும் (நடராஜன் ப.ஆ.1979 ப 144).

**வட்டபுரியம்மன்**

புகழேந்திப் புலவர் பேரில் உள்ள கோவிலன் கதையில் கண்ணகி வட்டபுரி அம்மனாக மாறிய செய்தி வருகிறது. (ப. 103) கோவலன், மாதவி ஆசிய இருவரின் உடல்களை எரித்துக் கங்கையில் கரைத்த பிறகு கண்ணகி திருவொற்றியூர் வருகிறாள். அங்கே தியாகராஜனைக் (சிவன்) காண்கிறாள். குடிக்க நீர் கேட்கிறாள். அவர் ஒரு சுனையைக் காட்டுகிறார். அவள் சுனையில் இறங்குகிறாள். சிவன் சுனையை மூடுகிறார். அவள் வேறு இடத்தில் முளைக்கிறாள். அங்கும் மூடுகிறார் சிவன், அவள் வேறு இடத்தில் தோன்றி வட்டபுரி அம்மனாகப் பெயர் பெறுகிறாள்.

திருவொற்றியூர் சிவன் கோவிலில் துர்காதேவியாக இவள் வழிபாடு பெறுகிறாள். என்றாலும் பழைய சடங்கின் எச்சம் உண்டு. 15 நாள் விழாவின் இறுதியில் ஓலைப்பந்தலை எரிக்கும் நிகழ்ச்சி உண்டு. இது மதுரையை எரித்ததன் அடையாளம்.

முந்திய காலங்களில் கம்மாள சாதி இளைஞன் ஒருவனை இங்கு பலி கொடுத்தார்களாம். பின் மிருகபலி வந்தது. இக்கோவில் சாசனம் ஒன்று இந்தத் துர்க்கையை ‘திருவட்டப்பிளை பிடாளியார்’ எனக்கூறும் (மு.ராகவையங்கார் ஆராய்ச்சித் தொகுதி 1960 ப.239)[7]

தமிழக நாட்டார் மரபில் கண்ணகியைப் பகவதி என்று கூறும் மரபு உண்டு. கண்ணகி பசும்பாலை தெளித்து மதுரையை எரித்துவிட்டு கேரளத்தில் பகவதியாக நிலைபெற்றாள். (இராமசாமிக் கோன் கண்ணகி பகவதி கூத்து நாடகம் மதுரை, 1932).

### அடிக்குறிப்புகள்

1. இந்தக் கூத்து நாடகத்தை உடையார்பிள்ளை என்பவர் பதிப்பித்திருக்கிறார் (1925) பதிப்பாளர் ராமசாமிக்கோன் இதே பதிப்பு 1928ல் இரண்டு பாகங்களாக வந்திருக்கிறது. இரண்டிலும் வேறுபாடில்லை. 1929ஆம் பதிப்பில் திருவிதாங்கூரில் நிலைகொண்ட மலையாள பகவதி கொடுங்கொல்லூரில் கோவில் கொண்ட மலையாளத்துக் காளி என்ற வர்ணனை இறுதிப் பகுதியில் வருகிறது. இது தனிப் பாடலாகப் பிரசுரமாயிருக்கிறது. (எம்.இ.எம். முத்துமலையம்மன் தெரு 1929 மதுரை) இச்சிறு பிரசுரத்தில் கண்ணகி கேரளத்தில் பரவலாகக் குடிகொண்டவள் என்றும் வருகிறது.

இந்நூலைப் பதிப்பித்த உடையார்பிள்ளை கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் கடுக்கரை ஊரினர். (1875-1962) இவர் நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியில் இருந்தவர். இவர் கோவலன் கூத்து உட்பட 16க்கு மேற்பட்ட கூத்து நாடகங்களை வெளியிட்டிருக்கிறார்.

2. சிலப்பதிகாரம் குறிப்பிடும் பொலந்தெரி மாக்கள் (செட்டி) 14-20 அரட்டன் செட்டி என்ற பெயரும் மணிமேகலை குறிப்பிடும் சந்திதத்தன் செட்டி என்ற பெயரும் செட்டி சமூகம் பழமையானது என்பதைக் காட்டும்.
3. இது நாட்டார் நம்பிக்கை கர்ணன், வள்ளுவன், மதுரைவீரன் ஆகியோர் இப்படிப் பிறந்தவர்கள் என்பதைக் கதைப்பாடல்கள் கூறுகின்றன.
4. காளிகோயிலில் போற சனங்களை வீசிப்போடணும் பாண்டியராசனே அப்படியே ஆகட்டும் பாண்டியராசன்சாமி பாண்டியராசன் ஏழுபேர் சாலவாணிய ஊர்த்தலைவர் எல்லாம் கன்னிக் காவுந்திமாய்க வைத்துவிட்டோ

   -டாக்டர் நசீம்தீன் 1992 கோவலன் சரித்திரம் ப.55
5. இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நல்லதங்காள் கதையிலும் வருகிறது. நல்லதங்காள் ஒரு குழந்தைகளுடன் காட்டு வழிச் செல்லும்போது ஏழு திருடர்கள் அவளை வழிமறிக்கின்றனர். அவளது மாங்கல்யத்தைக் கேட்கின்றனர். நல்லதங்காள் அவர்களைக் குத்துக்கல்லாக்குமாறு சபிக்கிறாள். அவளது மூத்த மகளின் வேண்டுகோள்படி திருடன்களுக்குச் சாபவிமோசனம் கொடுக்கிறாள்.
6. கண்ணகி திருடர்களை உப்பு பரதவர்களாகவும் ஒட்டகர்களாகவும் ஆகுமாறு சாபங்கொடுத்தாள் என்றும் கதை குலசேகரம் வில்லுப்பாட்டில் பாடப்பட்டது.
7. தமிழக நாட்டார் மரபில் கண்ணகியை மலையாள பகவதியாகக் கூறுவது உண்டு.

   மலையாளத்து எல்லையிலே

   மயிலளையள் வந்திருந்து
   பகவதியாள் என்று சொல்ல
   பட்சமுடன் பேரும் பெற்று
   வட்டபுரி அம்ம என்று
   வடக்குவாய் செல்வி என்றும்
   கண்ணகி தேவி என்றும்
   காச்சக்கார நீல என்றும்
   கூடலைமாடன் கதை ஏடு

### உதவிய நூல்கள்


1. வையாபுரி பிள்ளை (1968) இலக்கியமணி மாலை, தமிழ்ப்புத்தகாலயம் சென்னை
2. புகழேந்திப்புலவர் (1962) கோவிலன் கதை, ஸ்ரீ மகள் கம்பெனி, சென்னை
3. நடராஜன் தி(1979) கோவலன் கண்ணகி கதை, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை
4. இராகலையங்கார் மு (1964) ஆராய்ச்சித் தொகுதி, பாரி நிலையம், சென்னை
5. டாக்டர் நசீம்தீன் (1992) கோவலன் சரித்திரம், அன்னம், சிவகங்கை.
6. சாமிநாத அய்யர் உ.வே. (1960) சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், சென்னை.
7. சோமசுந்தரனார் (1977) சிலப்பதிகாரம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.



# சோமலெ
## உள்ளூர் வரலாற்று எழுதியல் முன்னோடி

இரா.காமராசு

**'சோமலெ'** என அறியப்படும் சோம.லெ. இலக்குமணன் *(11.02.1921-04.11.1986)* அவர்களின் நூற்றாண்டு இது. வணிகக் குடும்பத்தில் பிறந்த அவர் உலக நாடுகளுக்கு மேற்கொண்ட பயணங்களின் ஊடாக எழுத்தாளராக உருவானவர். அவரின் முதல் உலகச் சுற்றுப் பயணத்தின் முடிவில் "வணிகனாகச் சென்றேன், எழுத்தாளனாகத் திரும்பி வந்தேன்" என்று அவரே பதிவு செய்கிறார்.

'உலகம் சுற்றிய தமிழர்' ஏ.கே. செட்டியாரின் பாதிப்பால், தன் தனிப் பயணங்களை தகவல் பயணங்களாக மாற்றிக் கொள்கிறார். உலகின் பல பகுதிகளுக்கும் - வளர்ச்சி அடைந்த அமெரிக்க, அய்ரோப்பிய நாடுகளுக்கும் வளரும் ஆஸ்திரேலிய நாடுகளுக்கும், பின் தங்கிய ஆப்பிரிக்க நாடுகளுக்கும் பயணம் செய்வதையே தன் வாழ்நாள் இலட்சியமாக்கிக் கொண்டார். அதுவரை 'பயண இலக்கியம்' என்பது அயலகப் பயணம் மேற்கொண்டவர்கள் தங்கள் அனுபவங்களை எழுதுவதாக அமைய, சோமலெ பயண இலக்கியம் படைப்பதற்காகவே பயணங்களை மேற்கொண்டார் எனலாம்.

நாடுகளை, இடங்களை, மக்களை, நிகழ்வுகளை, பழக்க வழக்கங்களைக் கண்டு கேட்டு உய்த்து எழுதும் பயண இலக்கிய முன்னோடியாக அவர் தன்னை நிறுவிக் கொண்டார்.

கடும் உழைப்பும், தகவல்களைச் சேகரிக்கும் பாங்கும், பயண மனப்பாங்கும் அவரை பயண, வரலாற்று எழுத்தாளராக உருவாக்கின. பயண இலக்கியங்கள் ஒரு வகையில் சமகால வரலாற்றின் ஒரு பகுதியாகவே அமையும். சோமலெயின் தேடல், சேகரித்தல், பதிவு செய்தல், தொகுத்தல், எழுதுதல் ஆகிய பண்புகள் ஓர் ஆய்வாளரின் இயல்புகளாக அமைவதை அவரின் வாழ்வும் படைப்பும் அடையாளப்படுத்தி நிற்கின்றன.

### சோமலெயின் வரலாற்றுப் பங்களிப்பு

சோமலெயின் பயண இலக்கியங்களின் தொடர்ச்சியாக அவரின் வரலாறு குறித்த ஆக்கங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவரின் வரலாறு குறித்த நூல்களை 1. வாழ்க்கை வரலாறுகள், 2. இலக்கிய வரலாறுகள், 3. தல வரலாறுகள்,

*4.* நிறுவன வரலாறுகள், *5.* மாவட்ட வரலாற்று வரிசை என வகைப்படுத்தலாம். அவர் வரலாற்றை எப்படி புரிந்துகொண்டார் என்பதைத் தாண்டி சம கால கலை, இலக்கிய, சமூக வரலாற்றுத் தரவுகளைத் தொகுத்தளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வாழ்க்கை வரலாறுகள்**

சமூக வளர்ச்சிக்குத் தனி நபர் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. அப்படிப்பட்ட ஆளுமைகளின் வாழ்வும் பணியும் வருங்காலத் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் தன்மை கொண்டவை. இவை தனிநபர்களின் புகழ்பாடுகையாக அல்லாமல் சமூகம் சார்ந்து அமையும்போது சிறப்பு பெறுகின்றன. “பெரும்பாலும், வாழ்க்கை வரலாறுகள் அனைத்தும் ஒரே உயர்வு நவிற்சியாக - வெறும் பாராட்டாக அமைந்துள்ளன. எந்தப் பெரியவரைப் பற்றியும், கருத்து வேற்றுமைக்கு இடமுண்டு. ஆகையால் வாழ்க்கை வரலாறுகளை எழுதுபவர்கள் தாம் சிறப்பிக்க எடுத்துக்கொள்ளும் அறிஞரின் குறைபாடுகள் இரண்டொன்றைச் சுட்டிக் காட்டுவது நலம்” *(வளரும் தமிழ், ப.306)* என வாழ்க்கை வரலாறு பற்றிய தன் கண்ணோட்டத்தைக் குறிப்பிடும் சோமலெ அதே மாதிரி தன் நூல்களை அமைத்துக் கொண்டுள்ளார்.

சோமலெ எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் மூன்று *1.* பண்டிதமணி *(1955)*, *2.* விவசாய முதலமைச்சர் *(1979)*, *3.* தமிழ்நாட்டில் ஒரு சர்தார் *(2002)* ஆகியவை.

இம்மூன்று நூல்களும் தனித்தன்மை வாய்ந்தவை. பண்டிதமணி எனச் சிறப்பிக்கப்பட்ட மு.கதிரேசன் செட்டியார், இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் தானே கற்று தமிழ், வடமொழி, ஆங்கிலம் இவற்றில் தேர்ந்து பேராசிரியராக, அறிஞராக உயர்ந்தவர். விவசாய முதமைச்சர் என அழைக்கப்பட்ட ஓமந்தூர் பி. இராமசாமிரெட்டியார், தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவியில் இருந்தவர். தூய்மை, நேர்மை, வாய்மை எனும் அருங்குணம் கொண்ட, வேளாண் மரபில் இருந்து அரசியல் அரங்கில் சுடர்விட்டப் பெரியவர். சர்தார் வேதரத்தினம், சர்தார் பட்டேலுக்கு நிகரானவர். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், தன் சொத்துக்களையெல்லாம் மக்கள் நலனுக்கு அளித்தவர். காந்தியவாதி. இம்மூவரும் உழைப்பால் உயர்ந்தவர்கள். தத்தம் துறை, தொண்டு, பங்களிப்பு சார்ந்து பிறருக்கு வழிகாட்டும் முன் மாதிரிகள். இவர்களைப் பற்றிய இந்த வாழ்க்கை வரலாறுகள் விரிவாகவும், சுவையாகவும் அமைகின்றன.

“வாழ்க்கை வரலாறு எழுத விரும்புபவர்க்குப் பயன்படும் குறிப்பு ஒன்றையும் ஈண்டுத் தரலாம். இந்நூல்களில் மிகுதியான செய்திகள் இருக்கலாம். அவை சுவைபடக் கூறப்பட வேண்டும். உண்மையான நிகழ்ச்சிகளைக் கூறுவது மட்டும் போதியதாகாது; தாம் எடுத்துக்கொண்ட அறிஞரைப் பற்றி ஆசிரியர் உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் எழுத வேண்டும். ஏராளமான விவரங்களிலிருந்து, பயன்படும் சில குறிப்புக்களை மட்டும் பொறுக்குவதிலேயே அவர் தம்முடைய திறமையைப் பயன்படுத்த வேண்டும்” *(வளரும் தமிழ், ப.307)* என வாழ்க்கை வரலாறு எழுதியலுக்கு வரையறை தரும் சோமலெ தான் எழுதிய மூன்று நூல்களிலும் இவற்றைப் பின்பற்றக் காணலாம்.

**வாழ்க்கை வரலாற்று நூல்களின் எடுத்துரைப்புக்கு சில சான்றுகள்:**

“சிறிது தொலைவிலுள்ள இடங்களுக்கும் பண்டிதமணி அவர்கள் மாட்டு வண்டியிலேயே செல்ல நேர்ந்தது. எனவே அண்ணாமலை நகரிலிருந்தபோது, அவரிடம் ஓர் ஒற்றைமாட்டு வண்டி இருந்தது அதில் அவர் ஏறிக்கொண்டு நாள்தோறும் மாலை நேரத்தில் உலாவிவரச் செல்வார். ஒரு நாள் நண்பர் ஒருவரையும் வண்டியில் உடனழைத்துச் சென்றார். வண்டி போகும்போது, முன்பக்கமாக உட்கார்ந்து கொண்டு, ‘இப்படிப் போ, அப்படிப் போ’ என்று கூறி வண்டிக்காரனுக்கு வழிகாட்டிக் கொண்டே சென்றார். உடன் வந்தவரோடு ஒரு சிறிதும் பேசவில்லை. அதனால் அந்த நண்பரின் மனம் புன்பட்டது. அப்போது பண்டிதமணி, வண்டியில் பூட்டப்பெற்றிருக்கும் மாடு புதிது; வண்டிக்காரனும் புதிய ஆள். அவன் மாட்டை ஓட்டுகிறான்; நான் அவனை ஓட்டுகிறேன். எனவே என் கருத்தனைத்தும் அப்பக்கமே திரும்பிவிட்டது என்றார்.” *(பண்டிதமணி, ப.23)*

"ஓமந்தூராரின் உறவினர்கள் மணப்புத்தூரிலும் திருவாமூரிலும் இன்னும் வாழ்கின்றனர். இந்த உறவினர் வீடுகளுக்கு இவர் இளமையில் அடிக்கடி சென்று வந்தார்.

மணப்புத்தூர் என்பது மணம் தவிர்த்த புத்தூர் என்ற சொற்றொடரின் சிதைவு. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இவ்வூரில் திருமணம் நிகழ்வதாக இருந்தது. ஆனால் அந்தத் திருமணம் நடைபெறவிடாமல் இறைவன் தவிர்த்து விட்டார்.

இத்தேவார நாயன்மார் தொடர்புள்ள இவ்வூரிலிருக்கும் தன் உறவினர் வீடுகளுக்கு அடிக்கடி சென்றதால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றைத் தெரிந்துகொள்ளவும் அவரிடம் ஈடுபாடு காட்டவும் ஓமந்தூராருக்கு வாய்ப்புகள் கிடைத்தன. இதனால் சுந்தரர் தேவாரத்தை நெஞ்சுருகப் பாடினார். தன் மகனுக்கு சுந்தரம் என்று பெயரிட்டார்”. *(விவசாய முதலமைச்சர்)*

நிகழ்வுகளைச் சுவை படச் சொல்வதுடன் நூலைப் படிப்போரின் சிந்தனையைத் தூண்டி அறிவூட்டும் வகையிலும் எழுதுவது அவர் வழக்கம்.



சோமலெ

பொது வாழ்வில் ஈடுபடுவோர் மூவகையினர். சுயநலமி, அரசியல்வாதி, நாட்டை உருவாக்கும் சான்றோர்.

சுயநலமி, தன் குடும்பத்திற்குப் பணம் சேர்ப்பதிலும், தன் உறவினர்களுக்கு வேலை கொடுப்பதிலும், தன் புகழைப் பரப்புவதிலும், தனக்குச் சிலைகள் முதலியன வைத்துக் கொள்வதிலும், தனக்குப் பிறகு தன் உறவினர்களை அரியாசனத்தில் அமர்த்துவதிலும் கவனம் செலுத்துவான்.

அரசியல்வாதி, அடுத்த தேர்தலில் தானும் தன் கட்சியும் வெற்றிபெற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளை நிறைவேற்ற எதையும் துணிந்து செய்வான்.

நாட்டை உருவாக்கும் சான்றோர்கள் (Statesmen) அடுத்த தலைமுறையினரைப் பற்றியும் நாட்டு நலனைப் பற்றியும் மட்டுமே சிந்திப்பார்கள்.

ஓமந்தூரார் மூன்றாவது வகையினர் (விவசாய முதலமைச்சர், பக்.2-3)

இம்மூன்று வாழ்க்கை வரலாறுகளும் விரிவானவை; ஆழமானவை; இந்த வகைமைக்கு இலக்கணமாகக் கருதத்தக்கவை.

**இலக்கிய வரலாறுகள்**

சோமலெ இலக்கிய வரலாறு என்ற பெயரில் நூல் எதுவும் எழுதவில்லை. ஆனால் இலக்கிய வரலாறாக அமையும் இரு முக்கிய நூல்களைப் படைத்துள்ளார். 1. வளரும் தமிழ், 2. தமிழ் இதழ்கள். இவை இரு நூல்களும் முறையே உரைநடை வளர்ச்சி வரலாற்றையும், இதழியல் வளர்ச்சி வரலாற்றையும் சுட்டி நிற்பவை.

**வளரும் தமிழ்**

இந்நூல் எழுத 1950ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் அறிவிக்கப்பட்ட ஒரு கட்டுரைப் போட்டி பின்புலமாக அமைகின்றது. அதனைத் தொடர்ந்து சாகித்திய அகாதெமிக்காக இருபதாம் நூற்றாண்டு இலக்கிய நூல்களின் பட்டியல் தயாரிப்புப் பணியில் உதவிய அனுபவமும் சேர்ந்து பல்லாண்டு உழைப்பில் இந்நூல் உருவானதாக சோமலெ குறிப்பிடுகிறார்.

1. உரைநடையின் தோற்றம், 2. கல்வெட்டுக்கள், 3. ஐரோப்பியர் காலத்தின் உரைநடை, 4. செந்தமிழ் நடை, 5. தனித்தமிழ், 6. மறுமலர்ச்சி நடை, 7. சொற்பொழிவு, 8. நாடகம், 9. திரைப்படங்கள், 10. செய்தித்தாள்கள், 11.வானொலி, 12. விளம்பரம், 13. சமயமும் தமிழும், 14. உரைநடை நூல்கள், 15. விஞ்ஞான நூல்களும் கலைச் சொற்களும், 16. மொழிபெயர்ப்பு, 17. ஆராய்ச்சி நூல்கள், 18. அகராதி, 19. கடிதங்கள், 20. பேச்சுவழக்கில் தமிழ், 21. கவிதை, 22. வெளிநாடுகளில் தமிழ், 23. பல்கலைக்கழகங்கள், 24. அரசினரும் தமிழும், 25. தமிழ் வளர்ச்சிக்கழகம் என இருபத்தைந்து உட்கூறுகளில் 462 பக்கங்களில் அமைந்த நூல் இது. நூலின் இறுதியில் பெயர்க் குறிப்பு அகராதியும் இடம் பெறுகின்றது. இந்தத் தலைப்புகளே இந்நூலின் நுட்பத்தை, முழுமையை உணர்த்த வல்லவை. கல்விப் புலத்தினரே அஞ்சும் இப்பணியை தனியொரு மனிதராக இவர் சாதித்துள்ளார் என்றே கூற வேண்டும். இருபதாம் நூற்றாண்டு தமிழ் உரைநடை குறித்த இந்த அறிமுக நூல் ஏன் தமிழ் இலக்கிய வரலாற்றில் கவனப்படவில்லை என்பது கவலையே.

**தமிழ் இதழ்கள்**

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தப்பெற்ற கல்கி அறக்கட்டளைச் சொற்பொழிவுகளின் (1973-74) தொகுப்பு ‘தமிழ் இதழ்கள்’ எனும் நூல். “தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், அப்பத்திரிகைகள் எந்த அளவிற்குத் தமிழ் நடையை உருவாக்கியுள்ளன, காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ற அளவில் தமிழ் நடையில் எத்தகைய மாற்றங்களை அவை மேற்கொண்டுள்ளன என்பன போன்றவற்றை விரிவுரையாளர் அவர்கள் வகைப்படுத்திச் சுவையுடன் பேசியுள்ளார்கள். குறிப்பாக, கட்டுரை, கவிதை ஆகிய பல்வேறு துறைகளிலும் பலரை எழுதத் தூண்டிப் பல இலக்கிய கர்த்தாக்கள் தோன்றுவதற்கு எந்த அளவிற்குப் பத்திரிகைகள் உதவியிருக்கின்றன என்பதையும், பொதுமக்களிடம் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டி அரசியல் பொருளாதார நுணுக்கங்களை அவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் பத்திரிகைகள் ஆற்றிய தொண்டு எவ்வளவு அருமையானது என்பதையும் இவ்வுரைகளில் விளக்கியிருப்பதைக் காண்கிறோம்” என முன்னுரையில் நெ.து.சுந்தரவடிவேலு கூறுவது சரியான மதிப்பீடு.

1. முக்கிய நிகழ்வுகள்
2. பத்திரிகை இயக்கத்தின் தலைவர்கள்
3. பத்திரிகையின் தரம்
4. பத்திரிகைகளின் நடை
5. அந்த நடை காலத்துக்கு காலம் மாறுவது எவ்வாறு? ஏன்?
6. தமிழாசிரியர்கள் அந்த நடையை எவ்வாறு மாற்றியிருக்கிறார்கள்?
7. பத்திரிகைகளின் நடை எந்த அளவில் தமிழாசிரியர்களுடைய நடையை மாற்றியுள்ளது? அதாவது, தமிழ் இதழ்களால் உருவாக்கப்பட்டுள்ள நடையைத் தமிழாசிரியர்கள் எந்த அளவு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்?

8. தமிழ் இதழ்களால் மக்களுடைய பொது அறிவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி எத்தகையது?
9. புது எழுத்தாளர்கள் எந்த அளவு உருவாக்கப்பெற்றிருக்கிறார்கள்?
10. எழுத்தாளருக்கு கொடுக்கப்படும் ஊதியம் எவ்வளவு?
11. பல துறைகளில் நூல்கள் வெளிவர, தமிழ்ப் பத்திரிகைகள் எந்த அளவில் உதவியுள்ளன?
12. தமிழ் நூல்கள் வெளியீட்டிலும், விற்பனையிலும் காணப்படும் தேக்கத்திற்கு, தமிழ்ப் பத்திரிகைகளுக்கு எந்த அளவு பொறுப்பு உண்டு?
13. தமிழ் இதழ்களில் நூல் மதிப்புரைப் பகுதியின் நிலை என்ன?
14. சில குறிப்பிட்ட இதழ்களைப் பற்றிய சில விவரங்கள்
15. இலக்கியத் திரட்டு
16. மொழிபெயர்ப்புப் பிரச்சினை.

தமிழ் இதழ்களும் தமிழும் என்பதை மையமாகக் கொண்ட இவ்வுரைகளில் இடம் பெறும் பகுதிகள் இவை (தமிழ் இதழ்கள், ப.5). பிற்சேர்க்கை பகுதியில் தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் பல இடம்பெறுவது கூடுதல் சிறப்பு. சோமலெ இதழியல் கற்றவர். இதழியல் நோக்கில் தம் நூல்களை எழுதியவர். அவ்வகையில் தமிழில் இதழியல் கலை குறித்த முன்னோடி நூல்களுள் ஒன்றாக இது திகழும். தமிழ் இதழியல் வரலாறு, இலக்கிய வரலாறு ஆகிய இரு தளங்களிலும் கவனம் பெற வேண்டிய நூல் இது.

## தல வரலாறுகள்

சோமலெ அவர்களுக்குப் பதிப்புலகில் 'மலர்மன்னர்' என்ற அடைமொழி உண்டு. அந்த அளவுக்கு பலவித மலர்களை அவர் உருவாக்கி அளித்துள்ளார். கோயில் குடநீராட்டு மலர்கள், நூற்றாண்டு மலர்கள், சிறப்பு மலர்கள், விழா மலர்கள் என்ற வகைமைகளில் அவை அடங்குவன.

இவற்றில் தல வரலாறுகள், தனிநபர் வரலாறுகள், நிறுவன வரலாறுகள் பல குறிப்புகளாக அமைகின்றன. சோமலெ தொகுத்துப் பதிப்பித்த மலர்களின் விவரம்:

1. நெற்குப்பை வைகாசி விசாப் பொன்விழா மலர் (7.6.1971)
2. காசி விசாலாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு மலர் (1.11.1971)
3. நாசிக் - பஞ்சவடி கார்த்திக் சுவாமி கோயில் குடமுழுக்கு மலர் (28.1.1972)
4. இராமநாதசுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக மலர் (1975)
5. அருள்மிக அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் (1976)
6. காஞ்சிபுரம் மலர் (மார்ச்சு, 1979)
7. கோவிலூர் திருக்குட நீராட்டு மலர் (ஜுன், 1978)
8. நெற்குப்பை நகரத்தார் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா மலர் (14.9.1978)
9. பெங்களூர் கெஞ்சனஹவள்ளி அருள்மிகு அன்னை இராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழாச் சிறப்பு மலர் (6.7.1979)
10. கோட்டையூர் அருள்மிகு மீனாட்சி அம்மை உடனாய அருள்மிகு சோமசுந்தரரேசுவரர் திருக்கோவில் திருக்குட நீராட்டு மலர் (17.1.1980)
11. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு (1863-1963) விழா மலர் (14.09.1963)
12. சென்னை நகரத்தார் மாணவர் சங்கம் சிறப்பு மலர் (12.7.1964)
13. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழா மலர் (1955)
14. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழா மலர் (டிசம்பர், 6.1979)
15. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்ச்சி மலர் (1979)

## நிறுவன வரலாறுகள்

சோமலெ வரலாற்று எழுதியலின் பல்வேறு வகைமைகளிலும் முயற்சி செய்து பார்த்துள்ளார். தனது மகன் லெ.சோமசுந்தரத்தோடு அவர் சேர்ந்து எழுதிய நூல் 'வேளாண்மைப் பல்கலைக்கழகம்' (1985). அதே போல நிலக்கரிச்சுரங்கம் அமைந்துள்ள 'நெய்வேலி' (1960) ஆகிய இரு நூல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

சோமலெ தனது மகன் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற வேளாண் அறிவியலாளர் லெ.சோமசுந்தரம் அவர்களுடன் இணைந்து சுமார் 250 பக்கங்களில் எழுதிய நூல் வேளாண்மைப் பல்கலைக்கழகம். ஒரு நிறுவனத்தைப் பற்றி இந்த அளவு விரிவாகவும், முழுமையாகவும் எழுத முடியுமா என்பது அய்யமே. அன்றைய வேளாண் அமைச்சர் கா.காளிமுத்து "எப்பொருளையும் அடி முதல் நுனி வரை ஆய்தறிந்து தெளிவாகவும் விளக்கமாகவும், தென்றல் நடையிலும் வரைந்து தரும் ஆற்றலாளர் அவர் (சோமலெ). தமிழகத்தின் வேளாண்மைப் பல்கலைக்கழகம் பற்றி - துல்லியமாகவும் எல்லாத் தகவல்களும் உள்ளடங்கும் வகையிலும் அவரும் அந்தப் பல்கலைக்கழக மாணவ நன்மணியாம் அவர்தம் புதல்வரும் இந்நூலை நல்கியுள்ளனர்". எனப் பாராட்டுவது பொருத்தமானது.

'நெய்வேலி' நூல் பழுப்பு நிலக்கரிச் சுரங்கமும், அனல்மின் நிலையமும் அமைந்திருக்கும் நெய்வேலி நகரியத்தைப் பற்றிய முதல் நூலாக அமைகிறது. நெய்வேலியின் அமைப்பு, பழுப்பு நிலக்கரியின் வரலாறு, அதன் பயன்கள், மின்சார உற்பத்தி, கரிக்கட்டி மூலம் அச்சு தயாரிப்பு, யூரியா உற்பத்தி,




எஃகு ஆலை, நிலக்கரித் தோண்டும் போது கிடைக்கும் களிமண்ணின் பயன்பாடு, பொருள்கள், இச்சுரங்கம் சார்ந்த துணைத் தொழில்கள் ஆகியவை பற்றி பதினாறு இயல்களில் விளக்குகிறார்.

"நெய்வேலி இருக்கும்போது வருங்காலத்தைப் பற்றி நினைக்கிறோம். கி.பி.2000 இல் தமிழ்நாடு தொழில் துறையில் அடையக்கூடிய முன்னேற்றத்தை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விடுகிறோம். பழமையைப் பாராட்டும் தமிழர்களுக்கு வருங்காலத்தை நினைவூட்டுகிறது நெய்வேலி. இது தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு திருப்பம், நல்ல திருப்பம், வரவேற்கத்தக்கத் திருப்பம்..." (ப.137) என்ற அவரின் வாக்கு இந்த அறுபது ஆண்டுகளில் மெய்யாகி இருப்பதே அவரது எழுத்தின் வெற்றி எனலாம்.

இன்று புழங்கு பொருள் பண்பாடு, உள்ளூர் வரலாறுகள் பற்றிய அக்கறை மிகுந்துள்ளது. இந்த வகைமைகளில் அடங்கும் சோமலெயின் ஆக்கங்கள் காலம் அறிந்து கூவிய சேவல் என்றால் அது மிகை-யில்லை.

### மாவட்ட வரலாறுகள் வரிசை

சோமலெயின் தனித்துவமானப் பங்களிப்பு என்பது அவரின் மாவட்ட வரலாறுகள் நூல் வரிசை. ஆங்கில அரசின் நிதி, நிர்வாக நடவடிக்கைகளின் ஒருபகுதியாக அந்தந்தப் பகுதிகள் குறித்த தரவுகள் சேகரித்து ஆவணப்படுத்தப்பட்டன. நிலவியல் சார்ந்தும் மக்கள் வாழ்வியல் சார்ந்தும் பருவநிலை, தொழில்கள், இயற்கை நிலைகள், சாதி, சமயம், வழிபாடு உள்ளிட்ட வழக்காறுகள் சார்ந்தும் அவை அமைந்தன. 'மானுவல்' 'கெசட்டியர்' எனும் நிலைகளில் மாவட்ட நிர்வாகிகளுக்குப் பயன்பட்டன. இவை ஆங்கில மொழியில் இருந்தன. உலக நாடுகளுக்குச் சென்று அந்தந்த நாடுகளையும், மக்களையும் பற்றி எழுதிய சோமலெ நம் செந்தமிழ்நாட்டைப் பற்றி எழுத முனைந்ததன் விளைவே இந்த மாவட்ட வரலாறுகள் நூல்வரிசை. ஏறக்குறைய தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளைப் பற்றியும் (அப்பொழுது 10 மாவட்டங்கள்) அவர் எழுதினார். சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர், வடஆற்காடு (1961), தென்ஆற்காடு, செங்கல்பட்டு (1963) திருநெல்வேலி (1965), இராமநாதபுரம் (1972), மதுரை (1980).

"ஏறத்தாழ ஐம்பதாண்டுக்காலம் நான் கண்டும் கேட்டும் படித்தும் திரட்டிய குறிப்புகளின் தொகுப்பே இது" எனத் தான் கடைசியாக எழுதிய மதுரை மாவட்ட வரலாற்றில் குறிப்பிடுவார்.

"மாவட்டங்களின் பல பகுதிகளுக்குச் சென்றேன். அறிஞர் பலருடன் உரையாடினேன். எண்ணற்ற நூல் நிலையங்களுக்கும் சென்றேன், பழைய புத்தகக் கடைகளையும், பல்லாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த மாநாடுகளின் அறிக்கைகளையும் சங்கங்களின் வெளியீடுகளையும் கல்லூரிகளின் இதழ்களையும் 1925 இல் வெளியிடப்பெற்ற இரயில்வே அட்டவணையையும் கூடப் புரட்டினேன். ஏறத்தாழ ஓராயிரம் பேருக்குக் கடிதங்கள் எழுதினேன். நகராண்மைக் கழகங்களின் ஆணையர்கள், சட்டசபை உறுப்பினர்கள், நெடுங்காலமாக ஓர் ஊரிலேயே இருந்துவரும் தலைமையாசிரியர்கள், அரசாங்க அலுவலர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் துணையையெல்லாம் நாடினேன்" என தன் முதல் மாவட்ட வரலாறு, சேலம் மாவட்டம் நூலில் குறிப்பிடுகிறார்.

கள ஆய்வு, தகவல்கள் திரட்டு, பகுத்து தொகுத்து எழுதுதல் என்ற நிலையில் அவரின் பணி பிரமிப்புத் தருவது. இன்று போல கணினி, இணையம், கூகுள் சேவை (?) எதுவும் இல்லாமல் சொந்தக் காலில் (கையில்) அவர் நின்று சாதித்தது வியப்பைத் தருகிறது. இந்த மாவட்ட வரலாறுகளை ஒரு பத்திரிகையாளரின் தொடர் போல தகவல்களை அள்ளித் தந்துப் படைத்துள்ளார். வரலாறு, வாழும் மக்கள், நிலவளம், நீர்வளம், நாட்டு வளம், கனிவளம், காட்டுவளம், புவியியல் வளம், மலை வளம் போன்ற பல்வேறு வளங்களை வரிசைப்படுத்துவார். பருவநிலை, பாசன வசதி, வேளாண்மை, வணிகம், தொழில்கள், ஆட்சிமுறை, அரசியல் நிலை, போக்குவரத்து, வணிகம், மருத்துவம், கல்வி, கலை வளர்ச்சி, தமிழ்ப்பணி, சமய நிறுவனங்கள், இதழ்கள், திரைப்படங்கள், நாட்டுப் பாடல்கள், விடுதலைப் போரில் பங்கு, காண வேண்டிய இடங்கள், குறிப்பிடத்தக்க நிகழ்வுகள், மக்கள் பழக்க வழக்கங்கள், வழிபாடு, பேச்சு வழக்கு ஆகிய எல்லாவற்றையும் தொகுத்துத் தருகிறார். இவை ஒரு கலைக்களஞ்சியம் போல அமைந்துவிடுகிறது.

இவரின் எழுதும் பாங்கும் எடுத்துரைப்பும் கலைத்தன்மையுடன் காட்சிப்படுத்தலாக அமைகின்றது. எனவே வரலாறு, புவியியல் போன்ற தகவல் திரட்டை அவரால் வாசகரைக் கவரும் விதத்தில் எழுத முடிந்துள்ளது.

இந்த மாவட்ட வரலாறுகளை எழுதும் முயற்சி தமிழில் புதிது. இன்று வரலாற்றின் ஒரு பகுதியாக உள்ளூர் வரலாறுகளை எழுதுதல் என்பது அமைகின்றது. அதே போல வாய்மொழி வரலாறுகளும் கவனப்படுத்தப் படுகின்றன.

உள்ளூர் வரலாறுகள் பண்பாட்டோடு தொடர்புடையவை என்பதை வ.கீதா, “மக்கள் வாழ்வையும் ஊர் வரலாற்றையும் அறிந்துகொள்ள பண்பாடு பற்றிய புரிதல் நமக்குத் தேவை. பொதுவாக, பண்பாடு என்பதை குறிப்பிட்ட சமுதாயத்தில் வழங்கும் உற்பத்தி முறை, உற்பத்தி உறவுகள் முதலியவற்றுடன் தொடர்புடையதாக நாம் புரிந்துகொள்வது வழக்கம்” (உள்ளூர் வரலாறுகள், ப.15) என குறிப்பிடுவர்.

இந்த அடிப்படையில் சோமலெயின் வரலாறு குறித்த ஆக்கங்களில் பண்பாடு என்பது தவிர்க்க இயலாதக் கூறாக அமைந்துள்ளது.


“இந்திய வரலாற்று வரைவுகள் அனைத்திலும் காணப்படும் பொதுப்பண்பு அதன் மேட்டிமை (Elitism) சார்புதான். ஒடுக்கப்பட்டோர் மற்றும் விளிம்புநிலையினர் இவ்வரலாற்று வரைவிற்குள் அனுமதிக்கப்படவில்லை. அவர்களது குரல் அதில் இடம்பெறாது போய்விட்டது. பணிக்கர் கூறியது போல் ‘அதிகாரத்திற்கான போராட்டத்தைப் பிரதிபலிக்கும் தன்மையினால்’ சமூக வாழ்வில் அதிகாரமற்றவர்களுக்கு, வரலாற்று வரைவிலும் இடம் மறுக்கப்பட்டு விட்டது” (வரலாறும் வழக்காறும், ப.22 ) என்ற ஆ. சிவசுப்பிரமணியனின் ஆதங்கத்தைப் புரிந்துகொண்டால் எளிய மக்களுக்கான வரலாற்று வரைவுகளின் அவசியத்தை விளங்கிக்கொள்ள இயலும். அடித்தளம், விளிம்பு, மாற்று... பற்றிய பிரக்ஞை இல்லாமலேயே சோமலெ மக்களிடமிருந்து ஒரு வரலாற்றைக் கட்டமைக்க முயல்கிறார்.

சோமலெ படைத்தளித்த வாழ்க்கை வரலாறுகளும், தல வரலாறுகளும், இலக்கிய வரலாறுகள், நிறுவன வரலாறுகள், மாவட்ட வரலாறுகள் ஆகிய யாவும் தமிழ்ச்சமூக வரலாற்று எழுதியலுக்கு அவரின் ஆகச் சிறந்தப் பங்களிப்புகளாக அமைகின்றன. அவரின் கடைசி நூலான ‘செட்டிநாடும் செந்தமிழும்’ கூட இவ்வகையில் கருதத்தக்கதே. இந்நூல்களில் அவர் தரும் வழக்காறுகள் குறித்து தனியே எழுதலாம்.

வரலாறு குறித்தும், வரலாறு எழுதுதல், வரலாற்றுப் பார்வை குறித்தும் சோமலெக்கு எந்த அளவு புரிதல் இருந்தது என்பது விவாதத்துக்கு உரியதே. ஆங்கில அறிவும், பரந்த வாசிப்பும், உலகின் பிற பகுதிகளில் நடந்துள்ள இப்பணிகள் பற்றிய அறிமுகமும், இதழியல் கல்வியும் இவரை இத்திசை வழியில் செலுத்தியிருக்கலாம். தமிழ் மக்கள், தமிழ்நிலம், தமிழர் வாழ்க்கை குறித்த அவரின் அக்கறையின் வெளிப்பாடாகவே இந்த வரலாற்று முயற்சிகளை மதிப்பிட வேண்டும். சோமலெ - உள்ளூர் வரலாற்று எழுதுகையின் முன்னோடி என்பது அவரைச் சிறப்பாக்கும். ●



25.02.22 அன்று நாமக்கல்லில் 37வது தேசிய புத்தகக் கண்காட்சியை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பி.மகேஷ்வரி அவர்கள் திறந்துவைத்தார். இதில் மாவட்டக் கல்வி அலுவலர் டி.ராமன், ப.நவலடி, கை.பெரியசாமி, மாவட்ட நூலக அலுவலர் கோ.ரவி, என்சிபிஎச் மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் மற்றும் சேலம் கிளை மேலாளர் டி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# தமிழில் ‘தணிக்கை’ நூல் மிகமிக முக்கியமானது

மாண்புமிகு நிதியமைச்சர்

## பழனிவேல் தியாகராஜன்

***4-3-2022*** அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் இரா.திருப்பதி வெங்கடசாமி *IAAS* அவர்கள் எழுதிய ‘தணிக்கை தெளிவாக்கமும் செயல்முறைகளும்‘ (என்சிபிஎச்) நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. நியூ செஞ்சுரி புத்தக நிறுவன மேலாண்மை இயக்குனர் திரு. சண்முகம் சரவணன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் பொது மேலாளர் தி.ரெத்தினசபாபதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கணக்காயர் இரா.அம்பலவாணன் *IAAS*, மண்டல பயிற்சி மைய தலைமை இயக்குனர் திருமதி ச.ரஜனி *IAAS*, தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராஜேந்திரன், இரயில்வே தணிக்கைத் துறை தலைமை இயக்குனர் சி.நெடுஞ்செழியன், சுங்கத்துறை ஆணையர் க.பாலமுருகன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். ‘பனையடி‘ நாவலாசிரியரான இரா.செல்வம் ஐஏஎஸ் அவர்கள் தணிக்கை நூல் குறித்த திறனாய்வை வழங்கினார். நிறைவாக நூலாசிரியர் திருப்பதி வெங்கடசாமி நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று நூலை வெளியிட்டுப் பேசிய மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தணிக்கை நூலின் அவசியத்தைப் பற்றி நிகழ்த்திய உரை வருமாறு.

இளநிலைப் பொறியாளர் பட்டம் பெற்றவுடன் எனது தந்தையாரிடம் போய்ச் சொன்னேன். எனக்குப் படிப்பு போதும். நமது பாரம்பரிய சொத்துகளைப் பார்க்க விரும்புகிறேன். கடந்த நூறாண்டாக யாருமே திரும்பிப் பார்க்கவில்லை. நீங்களும் தாத்தாவும் பொது வாழ்க்கையிலேயே இருந்துவிட்டீர்கள். எல்லாம் பாழடைந்து போய்க்கொண்டிருக்கிறது. யார் யாரோ திருடிக் கொண்டிருக்கிறார்கள். என்ன கணக்கு என்றே தெரியவில்லை. அதனால் நான் இனி படிக்கத் தேவையில்லை என்று சொன்னேன்.

ஆனால் எனது தந்தையார் அதற்கு சம்மதிக்கவில்லை. நீ வெளிநாடு போய் படித்தே ஆகவேண்டும். இந்த வயதில் உன்னுடைய பார்வையை விரிவாக்காமல் இருப்பது சரியல்ல. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் வெளிநாட்டுக்கு விரட்டிவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் இன்றைக்கு நான் திரும்பிப் பார்த்தேனென்றால் அன்றைக்கு எனது தந்தையார் எடுத்த முடிவு எனது திசையை மாற்றி என்னுடைய உலகப் பார்வையையும் மாற்றியமைத்ததை உணரமுடிகிறது.

அதன்பின் நிறைய படித்தேன் வளர்ந்தேன் என்றாலும் அந்தத் தொடக்கம் இல்லையென்றால் இன்றைய அரசியல் பார்வையை வந்தடைந்திருக்க முடியாது.

அன்றைக்கு எனக்கும் என் தந்தைக்குமேகூட தெரியாது. எங்கு போய் படிப்பது? எப்படி படிப்பது என்று. அமெரிக்கா என்றால் அது மிகப் பெரிய நாடு, அன்றைக்கு இன்டர்நெட், ஈமெயில் எதுவும் கிடையாது. நான் கல்லூரியில் நல்ல மதிப்பெண் வாங்குவேனே தவிர சிறந்த மாணவன் என்று சொல்லமுடியாது. நான் விளையாடுவேன், பயணத்தில் ஆர்வமுண்டு. என்னுடைய நண்பர்கள் எங்கெங்கெல்லாம் விண்ணப்பம் செய்தார்களோ அங்கு விண்ணப்பித்தேன். உண்மையாகப் பார்த்தால் என்னுடைய மதிப்பெண்ணுக்கு பெரிய பல்கலைக்கழகங்களில் இடம் கிடைத்திருக்கும். ஆனால் அப்போது அது எங்களுக்குத் தெரியவில்லை. *The lack of awareness* தகவல் இல்லாததால் கிடைத்த மோசமான அனுபவம் எனக்கே இருக்கிறது என்பதை எனது அனுபவத்திலேயே பார்த்திருக்கிறேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் எல்லா பள்ளிகளுக்கும் அங்குள்ள நூலகங்களுக்கு நியூஸ் பேப்பர், வார, மாத இதழ்கள் எல்லாம் வாங்கி கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பாகக் கொடுக்கச் சொன்னேன். நேஷனல் ஜியாகரபிக், எகானமிஸ்ட் இதெல்லாம் கொஞ்சம் விலை அதிகம். என்னிடம் சிலர் கேட்டார்கள் இதெல்லாம் இவர்களுக்கு எங்கே புரியப் போகிறது? நாம் தமிழ் புத்தகங்கள், தேர்வுக்கான புத்தகங்கள், உள்ளூர் செய்திகள் இவற்றைக் கொடுத்தால் போதும். இந்தப் புத்தகங்களெல்லாம் அவர்களைப் போய்ச் சேருமா என்று கேட்டார்கள். நான் அதற்காகத்தானே அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னேன்.

தெரிந்தவற்றை அவர்களாகவே படித்துக் கொள்வார்கள் அல்லவா? அவர்கள் இதுவரைப் படிக்காதவற்றை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கொடுத்தாகவேண்டும். இந்த சிறிய வயதிலேயே உலகம் எவ்வளவு வியப்புடையதாக இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். சுயமாக முடிவெடுக்கிற நிலையை அவர்கள் அடையவேண்டும் என்று சொன்னேன்.

என்னைப் போல் இருட்டில் முடிவெடுக்கிற நிலை இல்லாமல் வெளிச்சத்தில் முடிவெடுக்கிற நிலைக்கு அவர்கள் வரவேண்டும் என்று கூறினேன்.

இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு ஆசிரியர் என்னை அழைத்தபோது உறுதியாக நான் பங்கேற்கிறேன் ஏனென்றால் இது மிக முக்கியமான தலைப்பு முக்கியமான நூல் என்பதால் விருப்பத்துடன் உறுதியாக நான் பங்கேற்கிறேன் என்று கூறினேன். ஆனால் சரியாக நேரம் ஒதுக்கமுடியாமல் இரண்டுமுறை மாற்ற வேண்டியதாகிவிட்டது. தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தல் அறிவித்ததாலும் முதலமைச்சர் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டதாலும் சில மாற்றங்கள் செய்யவேண்டியிருந்தது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நூலாசிரியர் அவர்கள் எனக்கு பல ஆண்டுகளாகப் பழக்கமுள்ளவர். 2016ஆம் ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினரானபோது என்னை சட்டமன்றத்தின் பொதுக் கணக்குக்குழு உறுப்பினராக அன்றைய எதிர்க்கட்சித் தலைவர், இன்றைய முதல்வர் அவர்கள் நியமித்தபோது அத்ற்கான கூட்டங்களில் தணிக்கை குறித்து நூலாசிரியருடன் அவ்வப்போது ஆலோசித்து செயல்பட்டிருக்கிறேன். ஐந்து வருடங்கள் பொதுக் கணக்குக்குழுவில் இருந்தது அரசாங்கத்தைப் பற்றி முனைவர் பட்டம் பெற்றது மாதிரி என்று பல இடங்களில் சொல்லுவேன், ஏனென்றால் எது சரி எது தவறு என்று கண்டுபிடிக்கும் மிகப் பெரும் வாய்ப்பு அது. அதிலும் இப்போது நிதியமைச்சராக இருக்கிறபோது அந்தக்குழுக்களை இன்னும் சிறப்பிப்பதற்கு மேலும் பல முயற்சிகள் எடுக்கிறபோது நிதி சார்ந்த குழுக்கள் பொதுக் கணக்குக்குழு, பொது நிறுவனக்குழு, மதிப்பீட்டுக் குழு இம் மூன்றையும் உட்கட்டமைப்பிலிருந்து தொழில்நுட்பம், விதிமுறைகள், செயல்முறைகள் ஆகியவற்றை சிறப்பாக செய்வதற்கு பல்வேறு முயற்சிகள் எடுத்து



வருகிறோம். அந்த முயற்சிகளில் திரு ஜெய்சங்கர், திரு. அம்பலவாணன் ஆகியோர் ஈடுபட்டு வருகிறார்கள்

எப்போதும் மாநில அரசாங்கத்திற்கும் தணிக்கைத் துறைக்கும் ஒரு இடைவெளி இருக்கும். ஆனால் நான் எதிர்க்கட்சியாக இருக்கும்போதே சொன்னேன். அரசாங்கத்தோடு மிக நெருக்கத்தோடு செயல்பட வேண்டும். ஒவ்வொன்றிலும் அவர்களுடைய கருத்து கேட்கவேண்டும் அவர்களின் பணி மிக முக்கியமானது. ஏனென்றால் பல திருத்தங்கள் அரசாங்கத்திற்குத் தேவையானதாக இருக்கிறது. அவர்கள் கூறுவதை உள்வாங்கிக்கொண்டு செயல்படுவது அரசுக்குத் தேவையானதாக இருக்கிறது. அதனை செயல்படுத்துவது எங்களது கடமை. அதற்குத்தான் மக்கள் எங்களைப் பொறுப்பில் அமர்த்தியிருக்கிறார்கள் என்றேன்.

இந்த நூலினுடைய முக்கியத்துவத்தை நான் அடிப்படையிலிருந்து கூறவேண்டுமென்றால் சில படிகள் வேறு திசையில் நான் நடக்கவேண்டும். குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஒரு புள்ளிவிவரம் கூறவேண்டும். வேறு எந்த மாநிலமும் அடையாத உயர்கல்விப் படிப்பு 52 சதவீதம் என்பதை முதல்முறையாகத் தமிழகம் தொட்டிருக்கிறது.

இதற்கு நூறு வருடம் திரும்பிப் பார்க்கவேண்டும். நீதிக்கட்சிக் காலத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயக் கல்வி என்று சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து இதன் தொடக்கத்தைக் காணமுடியும். இது காங்கிரஸ், திமுக அதிமுக என எல்லா கட்சி அரசாங்கங்களும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து இதனை வழிநடத்தியிருக்கின்றன.

ஆனால் தகுதியான திறமையான பணியாளர்கள் பல நிறுவனங்களுக்குக் கிடைப்பதில்லை. இதற்கான மாற்றாகத்தான் ஒரு படியாக முதலமைச்சர் அவர்கள் தனது பிறந்தநாளில் 'நான் முதல்வன்' என்றொரு பயிற்சித் திட்டத்தைத் தொடக்கி வைத்துள்ளார்.

நான் 1987ல் ரீஜினல் இஞ்சினியரிங் கல்லூரியில் பொறியியல் படித்து வெளியேறியபோது அந்த ஆண்டில் சுமார் நாலாயிரம் பேர் தமிழ்நாடு முழுமைக்குமாகப் படித்து வெளியேறியிருப்பார்கள். ஆனால் இன்றைக்கு சுமார் ஒன்றரை லட்சம் பேராக இருக்கிறார்கள். சுமார் இரண்டு மூன்று தலைமுறைகளுக்குள் இத்தனை மாற்றம் நடந்துள்ளது.

என் காலத்தில் என் அப்பா, தாத்தா எல்லாம் படித்தவர்கள். எங்களுக்கு ஆலோசனை சொல்ல நிறைய பேர் இருந்தார்கள். ஆனால் இப்போது இந்த ஒன்றரை லட்சம் பேரில் பலர் முதல் தலைமுறைப் பட்டதாரிகள். அவர்களுக்கு யார் ஆலோசனையோ அறிவுரையோ சொல்வது? அவர்கள் எந்தத் துறையை தேர்வு செய்வது? எந்தத் துறையில் படித்தால் வேலைவாய்ப்பு கிடைக்கும்? என்பது தெரியவில்லை.

இதையெல்லாம் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது மிக முக்கியமானதொரு கடமை. அதில் அரசாங்கத்திற்கும் ஒரு பங்கு இருக்கிறது. சமுதாயத்தில் பலருக்கும் பங்கு இருக்கிறது.

அந்தவகையில் மிக முக்கியமான இதுபோன்ற நூல்கள் அதிலும் இந்தத் துறையில் தமிழில் மிகத் தெளிவாக தணிக்கையின் அடிப்படை அதனை எப்படி செயல்படுத்த வேண்டும், அதன் நிறை குறை, அதன் சிறப்பு அம்சங்கள், எந்தெந்த வகையில் இதனைப் பார்க்கலாம் என்பதை எல்லாம் இந்த நூல் எடுத்துரைக்கிறது. உண்மையாகச் சொல்லவேண்டுமானால் ஆங்கிலத்தில் இதனைச் சொல்வது போதாது.

காரணம் சென்னையிலோ அல்லது மதுரையிலோ ஏதேனும் கல்லூரிக்குச் சென்று தமிழில் பேசினால்தான் அனைத்து மாணவர்களுக்கும் புரிகிறது. இதுதான் உண்மை. தமிழில் அந்தந்த துறையிலிருக்கிற நுட்பத்தோடு இருக்கிற நூல்கள் மிகவும் முக்கியம். அவ்வகையில் தமிழில் தணிக்கை நூல் மிகமிக முக்கியமானது.

அதனால் நூலாசிரியருக்கு நான் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் வங்கியாளராக, நிதி மேலாண்மையில் இருந்ததனால் தணிக்கையின் முக்கியத்துவத்தை நன்கறிவேன். இந்த அரசாங்கத்திலும் தணிக்கையின் முக்கியத்துவத்தையும் உணரமுடிகிறது.

முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது தணிக்கை நூலின் ஆசிரியரை அவரது அலுவலகத்திற்கு வந்து நானே பலமுறை அவரது ஆலோசனைகளைப் பெற்றிருக்கிறேன். அந்த அனுபவத்தால் அவரது ஆளுமையை நன்கு அறிந்தவன் நான் என்பதால் சொல்கிறேன். அவரது குறிப்பிட்ட சில பங்குதான் இந்நூலில் வெளிவந்திருக்கிறது. அவர் இன்னும் நிறைய எழுதவேண்டியிருக்கிறது. (கைதட்டல்)

இந்த நூலை எங்கெங்கெல்லாம் என்னால் கொண்டு சேர்க்க முடியுமோ குறிப்பாக என் சட்டமன்றத் தொகுதியில், மாவட்டத்தில், நூலகங்கள், பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கொண்டுசெல்வேன். அதேபோல் கல்வித்துறை அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து அரசாங்கம் மூலமாக தமிழகமெங்கும் கொண்டு செல்வதற்கு உண்டான வழிவகை செய்வேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*எழுத்தாக்கம்: ஜி.சரவணன்*

●



*28.02.22 அன்று சிவகங்கையில் 36வது புத்தகக் கண்காட்சியை தமிழ்ச் செம்மல் சொ.பகீரத நாச்சியப்பன் அவர்கள் திறந்துவைத்தார். இதில் தோழர் குணசேகரன் EX MLA, டாக்டர் சபரிநாதன், பேரா.பழனியப்பன், பேரா.கருமுருகன், எஸ்.கண்ணப்பன், மு.ஜவகர், தோழர் கண்ணகி, என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மதுரை கிளை மேலாளர் கு.பாலசுப்பிரமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.*



*10.03.22 அன்று கோவில்பட்டியில் 36வது தேசிய புத்தகக் கண்காட்சியை கோவில்பட்டி நகராட்சித் தலைவர் கருணாநிதி அவர்கள் தொடக்கி வைத்தார். சி.பி.ஐ மாவட்ட செயலாளர் அழகுமுத்து பாண்டியன், திருப்பதி ராஜா, பூல்பாண்டி, என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திருநெல்வேலி கிளை மேலாளர் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.*

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color



கட்டுரை

# மக்களை அதிகாரப்படுத்துவோம்

க.பழனித்துரை

பொதுவாக அதிகாரப்படுத்துதல் என்றால் அதிகாரங்களை கொடுத்தல் என்ற புரிதலைத்தான் நம்மில் பெரும்பாலானவர்கள் பெற்றுள்ளனர். அதிகாரத்தை யாரும் யாருக்கும் கொடுப்பதல்ல. அதிகாரங்களும் உரிமைகளும் வென்றெடுக்கப்பட வேண்டியவைகள், அதிகாரங்களும், உரிமைகளும் போராடியவர்களுக்குத்தான் வந்து சேரும். அப்படிப் போராடுவது மட்டுமல்ல, நம்மை நாம் விபரம் அறிந்தவராக, ஆற்றல் மிக்கவராக திறன் மிக்கவராக மாற்றிக் கொள்வது. இந்த மாற்றங்களை நமக்குள் கொண்டு வருவது என்பதும் போராட்டமே. யார் ஒருவர் தான் யார், தனக்குள் இருக்கும் ஆற்றலைப் புரிந்து அதை உணர்ந்து மேலும் வளர்த்துக் கொள்ள முனைகின்றாரோ அவர் அதிகாரப்படுத்தப்பட்டு விடுவார் என்ற புரிதல் நமக்கு வேண்டும். தன் ஆற்றல் அறிதல்தான் அதிகாரப்படுத்துதல் என்பதற்குப் பொருள். அதிகாரங்கள் என்பது கொடுப்பவை அல்ல, எடுப்பவை. அப்படி எடுப்பதற்கான ஆற்றல் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதிகாரங்களை எடுக்கத் தேவையான சக்தியை வளர்த்துக் கொள்ளுதலும் அதிகாரப்படுத்துதலாகும். இன்றைய சூழலில் நாம் யாராக இருக்கின்றோம் என்று சற்று யோசித்துப் பார்த்தால் நாம் அரசை நம்பி வாழும் அல்லது சார்ந்து

வாழும் ஒரு பயனாளியாகவே வாழ்ந்து வருகின்றோம். ஒரு குடியாட்சி நடைபெறுகின்ற நாட்டில் பொதுமக்கள் குடிமக்களாக நிறைய பொறுப்புக்களுடன் பொறுப்புமிக்க குடிமக்களாகச் செயல்படுவார்கள். ஒரு குடியாட்சி நடைபெறும் நாட்டில் குடிமக்கள் செயல்பாடுகள் என்பது அதிகமாக இருக்கும். அரசின் செயல்பாடுகள் என்பது குறைவானதாக இருக்கும். அரசின் செயல்பாடுகளும் குடிமக்கள் செயல்பாடுகளுக்கு உதவுவதற்காக என்ற நிலைப்பாட்டில் இருக்கும். இந்தச் சூழல் எப்பொழுது உருவாகும் என்றால் நம் பொதுமக்களிடம் பயனாளிச் சிந்தனை குறைந்து, குடிமக்கள் சிந்தனை வளர்ந்து வரும்போது மட்டும்தான் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் பயனாளியாக சிந்திக்கும் வரையில் அரசு எஜமானனாகச் செயல்படும். என்று நாம் பொறுப்புமிக்க குடிமக்கள் என்ற சிந்தனைக்கு வருகின்றோமோ அப்பொழுதே அரசு நமக்கு சேவகராக மாறிவிடும். நாமும் எஜமானனாக மாறி விடுவோம். நாம் பயனாளிச் சிந்தனையை தொடரும் வரையில் நமக்கு சுயமரியாதை என்பது கிடையாது, அரசு மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் என்பது கட்டியக் கடமைகளாகும். அவைகள் அனைத்தும் மக்களின் உரிமைகள். எனவே மக்கள் உரிமை சார்ந்து சிந்திக்கின்ற சூழலுக்கு வந்துவிட்டால் அரசு தானாக மாற்றம் பெற்றுவிடும். நாம் பயனாளியாக சிந்திக்கின்றவரை நம் பொதுச் செயல்பாடுகள் அனைத்தும் பொறுப்புமிக்கவை என்று கூற இயலாது. குடிமக்களாக நாம் மாறும்போது, நாம் பொறுப்புள்ளவர்களாக மாறி பெரும் பொறுப்புக்களை சுமக்கத் தயாராகி விடுவோம்.

நம் சிந்தனைப் போக்கில் அரசின் பயன் என்பது போய், உரிமையுடன் வாழும் வாழ்க்கை என்ற சிந்தனைக்கு நாம் வந்து விடுவோம். உரிமைகளும் கடமைகளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. பயனாளியாக இருப்பது மிக எளிது. பொறுப்புமிக்க குடிமக்களாக இருப்பதற்கு நம் சிந்தனையில் நடத்தையில், செயல்பாடுகளில் மிகப் பெரிய மாற்றங்களை நாமே வலிய கொண்டுவர வேண்டும். பொதுமக்களை பயனாளிகளாக மாற்றுவதற்கு எந்த பெரு முயற்சியும் தேவை இல்லை. ஆனால் பொறுப்பு மிக்க குடிமக்களாக மாறுவதற்கு மிகப் பெரிய போராட்டத்தினை நமக்குள் நாம் நடத்தியாக வேண்டும். உரிமைகள் சார்ந்தும், பொறுப்புக்கள் சார்ந்தும் சிந்திக்க நம் மக்களை தயார் செய்ய தவறுவோமேயானால் பொறுப்பற்ற பயனாளிப் பட்டாளம் தான் ஒரு நாட்டில் இருக்கும். அரசு மக்களுக்காக எப்போது செயல்படும் என்றால் மக்கள் அரசைப் பற்றிய விழிப்புணர்வுடன் செயல்படும்போது மட்டும் தான் என்பதை 350 ஆண்டுகளுக்கு முன் தாமஸ் பெயின் என்ற தத்துவ அறிஞன் விளக்கமாக தன் பொது அறிவு என்ற நூலில் கூறிவிட்டான்.

நம் நாட்டின் சுதந்திரத்தை சும்மா பெறவில்லை, போராடிப் பெற்றோம். பெற்ற சுதந்திரத்தை பேணிக்காக்க குடிமக்களாக நாம் வளர்ந்திருக்க வேண்டும், வளர்த்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி வளர்ந்திருக்கின்றோமா அல்லது வளர்த்தெடுக்கப் பட்டிருக்கிறோமா? என்ற கேள்வியைக் கேட்டு பதில் தேடினால் இல்லை என்பதுதான் பதிலாக வரும். நமக்கு நம்மை வழிநடத்த நம் அரசியல் சாசனம் இருக்கிறது. அது மட்டுமல்ல. இன்ன பிற பாதுகாப்புச் சட்டங்களும் உருவாக்கப்பட்டு மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேம்பாடு என்பதை உரிமையாக்கி, பல அடிப்படையான சேவைகளை உரிமைகளாக தரப்பட்டுள்ளன. தரப்பட்ட உரிமைகள் வென்றெடுக்கப்பட்டனவா? அரசு தந்த கட்டுக் கட்டான உரிமைகள் வென்றெடுக்கப்படாமல் வீதியில் கிடப்பதை நாம் பார்த்து வருகின்றோம். அவைகளை நம் பொதுமக்களால் வென்றெடுக்க முடியவில்லை. காரணம் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய நிலைக்கு பொதுமக்கள் தங்களை பொறுப்புமிக்க குடிமக்களாக மாற்றிக் கொள்ளவில்லை. தொடர்ந்து அரசின் பயன்களுக்கு ஏங்கி பொதுமக்கள் நிற்பதால் மக்கள் ஒரு குடியரசு நாட்டில் மேய்க்கப்படுகின்றார்கள். 84% கல்வி அறிவு பெற்றிருந்தும், உலகில் விஞ்ஞானம், தொழில் நுட்பம், மனித வளம் மற்றும் ஆற்றலில் முதல் நான்கு ஐந்து இடங்களுக்குள் நாம் இருந்தாலும் பொறுப்பற்ற பொதுமக்களைக் கொண்ட நாடாகவே நாம் விளங்குகின்றோம்.

பொதுமக்கள் பொறுப்பற்று இயங்குவதால் பொதுமக்களுக்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் அனைத்தும் பொறுப்பற்று செயல்படுகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் பெற்ற அறிவு நம் வாழ்வியலை உன்னதமாக மாற்றியமைக்க இயலவில்லை. பொறுப்புமிக்க குடிமக்களாக பொதுமக்கள் மாறுவதற்கு மிகப்பெரும் முயற்சி அனைவரிடமும் வந்தாக வேண்டும். அப்படி தங்களை மாற்றிக் கொள்கின்றபோது பொது மக்களின் பார்வையில், அணுகுமுறையில், சிந்தனைப் போக்கில், நடத்தையில் செயல்பாடுகளில் மிகப் பெரிய மாற்றம் வந்துவிடும்.

இந்த புதிய சூழலை உருவாக்க இன்று மக்களுக்கு வந்திருக்கும் வாய்ப்பு புதிய உள்ளாட்சி அரசாங்கம். இந்த புதிய அரசாங்கம் இதுவரை

மத்திய மாநில அரசுகளால் தொடப்படாத விளிம்புநிலை மக்களைத் தொட்டு சேவை செய்திட உருவாக்கப்பட்டவையாகும். இந்த மாற்றத்தை மக்கள் பங்கேற்போடு செயல்படுத்திட வேண்டும். இந்தச் செயல்பாடுகள் மூலம் மக்களை பொறுப்பு மிக்க குடிமக்களாக மாற்றிட வேண்டும். அதற்கான விழிப்புணர்வு மற்றும் திறன் வளர்ப்பு மக்கள் மத்தியில் நடைபெற வேண்டும். உள்ளாட்சி அமைப்புக்கள். அடிப்படைத் தேவைகளை சேவைகளாகச் செய்வதுடன் மக்களைத் திரட்டி அரசுடன் கைகோர்த்து செயல்பட்டு பொறுப்பு மிக்க உன்னத கிராமிய வாழ்க்கையை ஏற்படுத்துவதுதான் புதிய உள்ளாட்சிக்கு கொடுக்கப்பட்ட சவாலான மிக முக்கியப் பணி. இந்த மக்கள் தயாரிப்பைச் செய்திடும் தகுதியை நம் பஞ்சாயத்துத் தலைவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கான புரிதலை நம் பஞ்சாயத்துத் தலைவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் தன் செயல்பாடுகளினால் மக்கள் நம்பிக்கையைப் பெற்றவராக விளங்க வேண்டும். மக்களோடு இணைந்து மக்களை நேசித்து, மக்களை மதித்து செயல்படும் பார்வை கொண்டவரால் மட்டுமே இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும். உள்ளாட்சித் தலைவர்கள் சமத்துவம் பற்றி ஆழமான புரிந்தால் இருந்தால் மட்டுமே மேற்கூறிய செயல்பாடுகளைச் செய்ய முடியும்.

இதற்கான புரிதலை மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் உருவாக்குவதுதான் இன்று நமக்குத் தேவையான இன்றியமையாத பணி. ஒரு பொது வினியோகக் கடையில் பெருந்தொற்று காலத்தில் தந்த அரிசியை வாங்கும்போது ஒவ்வொருவருக்கும் 2 கிலோ குறைத்துத் தந்தார்கள். ஏன் எங்களுக்கு இரண்டு கிலோ அரிசி குறைத்துப் போடுகிறீர்கள் என்று கேள்வி கேட்டார். ரேஷன் வாங்கியவர். அப்படி எதிர்த்துக் கேள்வி கேட்டவுடன், அந்தக் கடையில் பணியாற்றியவர், "கிடைப்பதே ஓசி, இனாம் இதில் என்ன கேள்வி, கொடுப்பதை வாங்கிக் கொண்டு அமைதியாகச் செல்" என்று பதில் கூறி அனுப்பி விட்டார். உடனே பஞ்சாயத்துத் தலைவரிடம் அவர் சென்று நடந்ததைக் கூறி மன்றாடுகிறார். அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவர் அதற்கு பதிலளித்தார். "அரசாங்கம் உங்களுக்கு விலை இல்லாமல்தானே தருகிறது, நீங்கள் ஏதோ பணம் கொடுத்து வாங்கியதுபோல் கூறுகிறீர்களே" என்று கூறி அவர் கண்டு கொள்ளவில்லை. உடனே அந்த ஊரில் மக்கள் பிரச்சினைக்காக போராடும் இளைஞர் ஒருவரிடம் எடுத்துச் சென்று பொது வினியோகக் கடையில் நடந்ததைக் கூறினார். அத்துடன் அவர் பஞ்சாயத்துத் தலைவரிடம் சென்று முறையிட்டதையும் அவர் கூறிய பதிலையும் கூறினார், அவர் கூறியதைக் கேட்ட இளைஞர் கொதித்துப் போய் உடனே அவருடன் வந்து அந்தப் பொது வினியோகக் கடைக்குச் சென்று விசாரித்தார். அந்தக் கடைக்குச் செல்லுமுன் ஒரு ஊடக நண்பருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவழைத்தார். இவர் கடைக்குச் செல்லுமுன் அந்த ஊடக நண்பரும் ரேஷன் கடைக்கு வந்து விட்டார். அங்கு பொது வினியோகக் கடை ஊழியரிடம் ஏன் இரண்டு கிலோ குறைவாகப் போடுகிறீர்கள் என்று கூறி விவாதம் செய்தார். அந்த நிகழ்வை ஒரு தொலைக்காட்சி நேரலை செய்து கொண்டிருந்தது. அந்த நிகழ்வைப் பார்த்த மாவட்ட ஆட்சித் தலைவர் அடுத்த பத்து நிமிடத்தில் முடிவெடுத்து அந்த பொது வினியோகப் பணியாளர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். இந்தச் செய்தியை அந்த இளைஞர் ஊடகங்களுக்குச் செய்தியாகத் தந்து வெளியிட வைத்தார். அந்த இளைஞர் அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் என்ன கூறினார் என்றால் "உணவு உங்கள் உரிமை, அதைத்தான் அரசு பாதுகாக்க உணவு தானியத்தை விலையில்லாமல் தந்தது. அது ஒன்றும் தானம் அல்ல, பிச்சையும் அல்ல, அது நமது உரிமை, அந்த உரிமையை பாதுகாக்க ஒவ்வொருவரும் போராடியே ஆக வேண்டும்" என்று கூறினார்.

அந்த இளைஞருக்கு இருந்த பார்வை, அந்த கிராமப் பஞ்சாயத்துத் தலைவருக்கு இல்லை. அந்த இளைஞர் ஒரு பொறுப்பு மிக்க குடிமகனாகச் சிந்தித்து பாதிக்கப்பட்டவரை போராட வைத்து வெற்றியும் பெற்றார். அந்த பஞ்சாயத்துத் தலைவருக்கு புரியாத ஒன்று அந்த ஊர் இளைஞருக்கு புரிந்திருக்கிறது.

இன்னொரு ஊரில் தரமற்ற பொருள்களை பொது வினியோகக் கடையில் தந்துள்ளனர். அதனை பஞ்சாயத்துத் தலைவரிடம் வந்து பொதுமக்கள் கூறுகின்றனர். உடனே அவர் பல பொது வினியோக கடைகளுக்குச் சென்று ஆய்வு செய்து விட்டு அந்த ஒன்றியத்தில் உள்ள அனைத்து, பஞ்சாயத்துத் தலைவர்களையும் ஒன்றிணைத்து இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும் என்று விவாதம் செய்கிறார். அந்தத் தலைவர்கள் அனைவருமே இவர் கூறிய விவாதத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து இவருடன் செயல்பட தயாராகின்றனர். போராட்டத்தை அறிவிக்கின்றனர். சுவரொட்டிகள் அச்சிட்டு சுவர்களில் ஒட்டி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த செயல்பட்டனர். "எங்கள் பணத்தில் எங்களுக்கு ஏன் தரமற்ற பொருள்கள் ஏழைகளுக்குத் தரும் பொருள் என்றால் தாம் குறைந்ததைத் தான்

தருவீர்களா? இது எங்கள் பணம், அதிலிருந்து எங்களுக்குக் கிடைக்கும் பொருள்கள் எங்களின் உரிமை என்று எங்கு பார்த்தாலும் சுவரொட்டி ஒட்டப்பட்டு, போராட்டத் தேதியும் அறிவிக்கப்பட்டு விட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர் போராட்டம் நடைபெறுவதற்கு முதல் நாள் அந்த ஊருக்குச் சென்று பஞ்சாயத்துத் தலைவர்களுடன் பொது வினியோகக் கடைகளை பார்வையிட்டு, அங்கு இருந்த தரமற்ற பொருட்களை திருப்பி அனுப்ப உத்தரவிட்டு தரமான பொருள்களை வினியோகிக்கச் செய்தார்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் கூறும் செய்தி ஒன்றுதான். விழிப்புணர்வுடன், பொறுப்புடன் புரிதலுடன் நம் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் செயல்பட்டால் அரசு மக்கள் கூறுவதைக் கேட்கும். அத்துடன் மக்களுக்குக் கடமைப்பட்டதாக செயல்படும் இல்லையேல் மக்களை மேய்க்கும். எனவே நாம் முதலில் பொறுப்பு மிக்கவராக, புரிதல் உள்ளவராக, ஆற்றல் பெருக்கப்பட்டவராக மாற்றங்களை உள்வாங்கக் கூடியவராக செயல்பட்டால், நம்மைச் சுற்றியுள்ளவர்கள் மாறுவார்கள். அதற்கு நம் பஞ் சாயத்துத் தலைவர்களை தயார்படுத்திக் கொண்டு மக்களை தயார் செய்து பெரும் மாற்றத்தை மக்களின் சிந்தனைப் போக்கில் கொண்டுவர வேண்டும்.

நம்மை இன்று சாதியத்தின் வாயிலாக, மதரீதியாக, அரசியல் ரீதியாக பிரித்து வைத்துக் கொண்டு அரசியல் நடத்துவதால் நாம் சுரண்டப்படுகின்றோம். நம் மக்கள் தாங்கள் சுரண்டப்படுகிறோம் என்பது அறியாமலேயே வாழ்வதுதான் நாம் 75 வருடமாகப் பார்த்த பெரும் சோகம். கிராம சமுதாயம் எந்த அடிப்படையில் பிரிந்தாலும் சுரண்டப்படப் போவது கிராம மக்கள் தான் கிராமம் மேம்பட கிராமத்தில் சமூகத்தில் ஒற்றுமை நிலவ வேண்டும். அந்தப் புரிதலை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அந்தப் புரிதலுடன் கிராம சமுதாயம் செயல்பட ஆரம்பித்தால் அரசு அந்தக் கிராமத்திற்குப் பணி செய்யும். இதை நாம் நம் கண் முன்னே பல கிராமங்களில் பார்த்து வருகின்றோம். எனவே இந்தப் புரிதலை ஏற்படுத்துவதுதான் அதிகாரப்படுத்துதலாகும். மக்களாட்சி நடைபெறும் நாட்டின் மக்களின் விழிப்புடன் கூடிய செயல்பாடுகள்தான் மக்களைக் காக்கும். அந்தப் புரிதலை மக்களிடம் ஏற்படுத்துவதைத்தான் அதிகாரப்படுத்துதல் என்று கூறுகின்றோம். இந்தப் புரிதலுடன் நம் மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சியில் செயல்பட வேண்டும். அதுதான் இன்றைய தேவை.

●



*24.2.2022* அன்று பழனியில் *36*வது தேசிய புத்தகக் கண்காட்சியை பழனி அரசு சித்த மருத்துவர் மகேந்திரன் அவர்கள் திறந்து வைத்தார். மாவட்டக் கல்வி அலுவலர் திருநாவுக்கரசு, அரவிந்த் பட்டேல், *APA* மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் புவனேஸ்வரி, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வாசுகி, முனைவர் கலையரசி, பாலிடெக்னிக் முதல்வர் முனைவர் கந்தசாமி, வழக்கறிஞர் ரவி, குமரவேல் பிரேம்நாத், முதுநிலை நூலகர் முனைவர் வணங்காமுடி, சண்முகநாதன், என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திண்டுக்கல் கிளை மேலாளர் பண்டரிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அஞ்சலி



# தோழர் செஞ்சுடர்
# எஸ்.துரைராஜ்
# நினைவலைகள்

சொ.சாந்தலிங்கம்

செஞ்சுடர் என்னும் புனைப் பெயர் கொண்ட தோழர் துரைராஜ் ஸ்ரீராமுலு திருச்சியை பூர்வீகமாகக் கொண்டவர். திருச்சி பொன்மலை இரயில்வே தொழிலாளர் போராட்டத்தில் தீரமுடன் போராடிய தோழர் ஸ்ரீராமுலுவின் இளைய புதல்வர். முதல்வர் மருத்துவர் கேசவலு மதுரையின் மதிப்புமிகு ஏழைகளின் மருத்துவர். இவர்களது குடும்பமே கம்யூனிஸ்ட் குடும்பம். இக்குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் நல்ல கல்வியாளர்கள். பலர் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள்.

தோழர் துரைராஜ் அவர்களை நான் முதன் முதலில் மதுரை தியாகராசர் கலைக்கல்லூரியில் 1973-75ல் எம்.ஏ. தமிழ் இலக்கியம் படித்தபோது சந்தித்தேன். அவர் 1972-74ல் படித்தவர். எனக்கு ஒருவயது மூத்தவர். அவரும், வேதாசலம், செ.போசு, சாயுபு மரைக்காயர், இல.க.சுபாசு சந்திரபோசு, மேடையாண்டி என்று பலரும் அவருடன் படித்தவர்கள். துரைராஜ் பி.எஸ்.ஸி. தாவரவியல் ஆங்கில வழியில் படித்தவர். எனவே ஆங்கிலம் சரளமாக எழுதுவார். எங்களது முதல் சந்திப்பிலேயே அவர் எம் தோழர் என்பதை அறிந்துகொண்டேன். நான் இராமநாதபுரம் மாவட்டம் கமுதிவட்டம் நிராவி கிராமத்திலிருந்து வந்த ஒரு கைத்தறி நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன். எங்கள் ஊரில் அந்தக் காலத்தில் 1960 முதல் 1975 வரை கம்யூனிஸ்ட் கட்சி வலுவாகச் செயல்பட்டுவந்தது. மாதம் ஒரு பொதுக்கூட்டம், தோழர்கள் கூத்தக்குடி சண்முகம், ஆ.ஆதிமுலம், எம்.வி.சுந்தரம், வருதை உலகநாதன், அருப்புக்கோட்டை கிருஷ்ணன், இராசபாளையம் ஏ.சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு அரசியல் உரையும், வகுப்புகளும் எடுப்பார்கள். என் தந்தை, மைத்துனர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட்கள். என் 13 வயது முதலே இவர்களது கூட்டத்தில் நான் ஆர்வமுடன் கலந்து கொண்டு அரசியல் பாடம் கற்றேன். எனவே துரைராஜின் தோழமை எனக்கு உகந்ததாயிருந்தது. நல்ல நகைச்சுவை உணர்வுடன் பேசக்கூடியவர். எதாவது ஒருமுறை நன்றி என்று நான் சொன்னால் நவிலற்க என்று சொல்வார். சந்திக்கும் போதெல்லாம் இரண்டு விரல்களைச் சேர்த்து எனது இரண்டு விரல்களைத் தட்டி கைகுலுக்குவது போன்று பாவனை செய்வது அவரது வழக்கம்.

அவரோடு இணைந்து எம் கல்லூரியில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தைக் கட்டினோம். (AISF) சுமார் 25பேர் உறுப்பினர்கள் இருப்போம். அண்மையில் காலமான வங்கியாளரும், கலை இலக்கியச் செயல்பாட்டாளருமான தோழர் சூரியகாந்தன் எமக்கு அடுத்தவயதினர் எம்மோடு இணைந்து கொண்டவர். (1974-1976).

தோழர்.துரைராஜின் அறிமுகத்தால் மதுரை மாவட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு அலுவலகத்தின் அறிமுகம் கிடைத்தது. அடிக்கடி செல்வோம். தோழர்.தா.பா. அறந்தை.நாராயணன், ஏ.எம்.கோபு, திருப்பூர் சுப்பராயன், எஸ்.பி.ஆண்டி ஆகியோரின் அரசியல் வகுப்புகளில் இணைந்தே கலந்துகொண்டோம். தா.பாவின் உரையில் கட்டுண்ட நாகமாய் நாங்கள் மயங்கிப்போவோம்.

திட்டமிட்டபடி 1976 ஜூலையில் பேராசிரியர் நா.வா.வைச் சந்தித்து பரிந்துரைக் கடிதம் பெற்றேன். சென்னை செல்ல நினைத்ததும் துரைராஜிடம் தொடர்பு கொண்டேன். சென்னையில் ஓராண்டு தொல்லியல் பட்டயக் கல்விக்காக வருகிறேன். தற்காலிகமாகத் தங்குவதற்கு இடம் வேண்டும் ஏற்பாடு செய்ய முடியுமா எனக்கேட்டேன். அப்போது தைரியமாக வாருங்கள். கட்சித் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் தற்காலிகமாகத் தங்குவதற்கு தோழர்.RNK மூலம் ஏற்பாடு செய்யலாம் என்று உறுதியளித்தார். சொன்னது போலவே, தொல்லியல் துறையில் பட்டயப்படிப்பில் சேர்ந்தபின், தற்காலிகமாக ஒருமாத காலம் மட்டும் தங்கிக்கொள்ள தோழர் நல்லகண்ணு உதவியுடன் ஏற்பாடு செய்தார். குறிப்பிட்ட ஒருமாத காலத்தில் எனக்கு அறை கிடைக்காததால் மீண்டும் ஒருமாத காலம் நீட்டிப்பும் கிடைத்தது. அந்த இரண்டு மாதம் நான் தோழர் துரைராஜூடன் பாலன் இல்லத்திலேயே தங்கிப் பயின்று வந்தேன்.

இதன் மூலம் தான் தோழர் நல்லகண்ணு, ஆதிமூலம், ப.மாணிக்கம், து.ராஜா, ரவீந்திரதாஸ், ப.பா.மோகன் ஆகியேரின் அறிமுகம் கிடைத்தது. அந்தகாலகட்டத்தில் கட்சிக்கல்வி வகுப்புகள் பல மாவட்டங்களிலிருந்து வந்த 40 தோழர்களுக்கு நடத்தப்பட்டது. தோழர்.எம்.கே, தோழர்.பூபேஷ் குப்தா ஆகியோரின் உரைகளை அங்குதான் நான் கேட்டேன். வகுப்பில் கலந்து கொண்ட தோழர்கள் இரவில் பல குழுக்களாகப் பிரிந்து அன்று பகலில் கேட்ட பாடத்தைப் பற்றிப் பலவிதமாக விவாதிப்பார்கள். நானும் அதில் கலந்துகொண்டு கேட்பேன். பெண்ணாகரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நஞ்சப்பன் அதில் கலந்து கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர். நான் தருமபுரிக்கு பணியிடம் பெற்றுச் சென்றபோது அவரின் நட்பும், அவர் மூலம் தோழர்.தேவபேரின்பன், தோழர்.முத்து இளம்பரிதி, பேராசிரியர் A.P.பெருமாள் ஆகிய தோழர்களின் நட்பும் கிடைத்தது. நான் அரசு ஊழியனாகப் பயணித்தேன். தோழர் துரைராஜ் சிறந்த பத்திரிக்கையாளராக பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றினார். நியூஏஜ், இந்து ஆங்கில நாளிதழ்களில் பயணித்தார். பணிநிறைவு பெறும்வரை இந்துவில் பணியாற்றினார்.

பாலன் இல்லத்தில் வாழ்ந்த நாட்களில் தோழர்.துரைராஜின் பழக்கவழக்கங்கள் மகிழ்வானவை. தோழர்.அறந்தையுடன் நகைச்சுவையாகப் பேசுவார். தோழர்.த.பா. இவரும் மதுரைக்காரர் என்பதால் அந்யோன்யமாகப் பழகுவார். பகலில் பத்திரிக்கைப் பணி. மாலையில் கட்சி அலுவலகம், தோழர் சந்திப்பு என வாழ்ந்த வசந்த காலம் அது அவருக்கு. அப்போது திருமணமும் முடிந்திருந்தது. அவ்வப்போது திருச்சி சென்று குடும்பத்தைச் சந்தித்து வருவார். ஒரு பெண் குழந்தை. கவி பாரதியின்பால் கொண்ட காதலால் தன் குழந்தைக்கு கண்ணம்மா என்று பெயர் வைத்தார். மதுரையில் தியாகராசர் பொறியியல் கல்லூரியில் கட்டிடவியல் படித்த அவர் தற்போது திருச்சி தேசிய பொறியியல் கல்லூரியில் பேராசிரியையாகப் பணியாற்றுகிறார். அவரது திருமணத்தில் நான் கலந்துகொண்டேன். சென்னை அடையாரில் நடந்தது திருமணம்.

நான் பணியின் காரணமாக தருமபுரி, தஞ்சாவூர், மதுரை எனப்பல ஊர்களில் வாழ்ந்தேன். எனினும் என்னோடு தொடர்பை விடாமல் இருந்தார் துரைராஜ். நான் மதுரைக்கு மாற்றலாகி வந்தபின் மீண்டும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவ்வப்போது தொலைபேசியில் தொடர்புகொள்வார். 2011ம் ஆண்டு ஆங்கில இந்து நாளிதழில் என்னைப் பற்றி ஒரு முழு பக்கக் கட்டுரையை நல்ல படங்களுடன் செய்தியாளர் கவிதா எழுதி வெளியிட்டார். அது வெளிவந்த மறுநாளே என்னை துரைராஜ் தொடர்புகொண்டு பாராட்டினார். சென்னைக்கு வந்தால் தன்னைச் சந்திக்கும்படி கூறினார். மறுநாளே சென்னை செல்ல வேண்டிவந்தது. அவரை இந்து நாளிதழ் அலுவலகத்தில் சந்தித்தேன். பல தோழர்களை அறிமுகம் செய்து வைத்தார். திரு.டி.எஸ்.சுப்பிரமணியன், இலங்கைத் தமிழர் திரு.கணேசலிங்கன் ஆகியோரை அங்கு சந்தித்ததாக நினைவு. என்படம் உள்ள கட்டுரையைப் புதிதாகப் பல பிரதிகள் எடுக்கச்செய்து எனக்குக் கொடுத்தார்.

அவர் திருச்சி இந்து அலுவலகத்திற்கு மாறுதலாகி வந்தபோதும் திருச்சியில் சந்தித்தேன். அலுவலகத்திற்கும் அழைத்துச் சென்றார். அப்போது திருச்சியில் பணியாற்றிய திரு.அண்ணாமலை (மதுரை) அவர்களையும் சந்திக்க வைத்தார். மாலையில் அவர் இல்லம் சென்றோம். மனைவியையும், மகளையும், பேரக்குழந்தைகளையும் அறிமுகம் செய்தார். இரவு உணவும் அங்கேயே முடிந்தது. அவரிடமிருந்து விடைபெற்று மதுரை திரும்பினேன். அவரும் பணி ஓய்வுக்குப்பின் சில இதழ்களில் கட்டுரைகள் எழுதிவந்தார். அவரது மைத்துனர் திரு.மு.ப. அவர்களுடன் சேர்ந்து சில முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். எனக்குச் சில மொழிபெயர்ப்பு வேலைகளைக் கொடுப்பார். அப்படி தோழர் ‘மொகித்சென்’ கட்டுரை ஒன்றை மொழிபெயர்த்துக் கொடுத்தேன். அது அவருக்கு திருப்தியாக இல்லை. தொல்லியல் தொடர்பாக ஏதேனும் கட்டுரை எழுதிக் கொடுக்குமாறு கேட்டார். கடந்த இரண்டாண்டு கால தீநுண்மி அவல நிலை காரணமாகத் தொடர்பும் துண்டிக்கப்பட்டது. இறுதியாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் நடந்த இஸ்கப் கூட்டத்தில் இருவரும் சந்தித்துக் கொண்டோம். அதன்பின் சந்திக்கவே இயலாத இடம் தேடிப் பயணித்துவிட்டார்.

சிவந்த நிறம். சிரித்த முகம். ஒடிசலான தேகம். எஃகு போன்ற உள்ள உறுதி. ஜெயகாந்தனின் அபிமானி. பலமுறை போலிசின் குண்டாந்தடிகளுக்கு உள்ளாகியபோதும் கொண்ட கொள்கையில் மாறாத போராளி. அடிக்கடி முகநூலில் பதிவிட்டு வந்தார். எப்போதும் இரு கம்யூனிச இயக்கங்களும் ஒன்றுபட வேண்டும் என்றும், மதவாத சக்திகளுக்கு எதிரான இடதுசாரி சனநாயகச் சக்திகளை ஒன்றிணைக்க வேண்டும் என்பதே குறிக்கோளாகக் கொண்டிருந்தவர். தன் எழுத்தாலும், பேச்சாலும் அதை நோக்கியே பயணித்தவர். தன் பயணத்தை முடித்துக் கொண்டார். ஆனால் அவரது குறிக்கோள் அப்படியே உள்ளது. அதை முன்னெடுத்துச் செல்வதே தோழர்கள் நமதின் எதிர்காலக் கடமை.

●




*05.03.22 அன்று முசிறியில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியை முசிறி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திருமதி மாலா ராமசந்திரன் அவர்கள் திறந்துவைத்தார். இதில் லயன் கே.பன்னீர்செல்வம், லயன் ஸ்ரீனிவாசன், லயன் அரவிந்த், லயன் பல்லவி துரை, லயன் ரகுநாதன், P.K.அம்மன் நி.சிவகுமார், மகாலட்சுமி, தாஸ், நூலகர்கள் இரா.மல்லிகா, கா.நாகராஜன், மு. செந்தில்குமார், ஆசிரியர்கள் சிவராஜ், வாணிஸ்ரீ, என்சிபிஎச் திருச்சி மண்டல மேலாளர் குமார், என்சிபிஎச் திருச்சி கிளை மேலாளர் சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.*

# தமுஎகச கலை இலக்கிய விருதுகள் 2021

*2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய "தமுஎகச கலை இலக்கிய விருது"களுக்கான நூல்கள், ஆவணப்படங்கள் / குறும்படங்கள் வரவேற்கப்படுகின்றன. 2020, 2021ஆம் ஆண்டுகளில் வெளியானவை மட்டுமே பரிசீலனைக்குரியவை. நூல்/ குறுந்தகடு இரண்டு பிரதிகள் 2022 ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் அஞ்சல் / தூதஞ்சல் (கூரியர்) மூலம் அனுப்பப்பட வேண்டும்.*

*அனுப்ப வேண்டிய முகவரி:*

பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்,
57/1, மேலப்பெருமாள் மேஸ்திரி வீதி,
(தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அலுவலகம்)
மதுரை- 625001 தொலைபேசி: 0452-2341669

*பரிசீலனைக்கு வரும் நூல்களைத் திருப்பி அனுப்ப இயலாது.*
*தேர்வாகும் நூல் / படம் ஒவ்வொன்றுக்கும் "தமுஎகச விருது",*
*சான்றிதழ், தொகை ரூ.10,000/- ஆகியவை தமுஎகச நடத்தும் விழாவில் வழங்கப்படும்.*

*விருதுகள்*

1. தோழர். கே. முத்தையா நினைவு விருது : தொன்மைசார் நூல்
2. கே.பி.பாலச்சந்தர் நினைவு விருது: நாவல்
3. சு.சமுத்திரம் நினைவு விருது: விளிம்புநிலை மக்கள் குறித்த படைப்பு
4. இரா. நாகசுந்தரம் நினைவு விருது: கலை இலக்கிய விமர்சன நூல்
5. வெம்பாக்கம் ஏ.பச்சையப்பன் - செல்லம்மாள் (ப.ஜெகந்நாதன்) நினைவு விருது: கவிதைத்தொகுப்பு
6. அகிலா சேதுராமன் நினைவு விருது: சிறுகதைத்தொகுப்பு
7. வ.சுப.மாணிக்கனார் நினைவு விருது: மொழிபெயர்ப்பு
8. பா.இராமச்சந்திரன் நினைவு விருது: குறும்படம்
9 என்.பி.நல்லசிவம் - ரத்தினம் நினைவுவிருது: ஆவணப்படம்
10. தமுஎகச வழங்கும் கு.சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது: மொழி வளர்ச்சிக்கு உதவும் நூல்
11. இராஜபாளையம் மணிமேகலை மன்றம் (கொ.மா. கோதண்டம்) விருது: குழந்தைகள் இலக்கிய நூல்

*பின்வரும் விருதுகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன:*

12. மு.சி.கருப்பையா பாரதி - ஆனந்த சரஸ்வதி நினைவு விருது: நாட்டுப்புறக் கலைச்சுடர்
13. மக்கள் பாடகர் திருவுடையான் நினைவு விருது: இசைச்சுடர்
14. த.பரசுராமன் நினைவு விருது : நாடகச்சுடர்
15. மேலாண்மை பொன்னுச்சாமி நினைவு விருது: பெண் படைப்பாளுமை

*வாழ்த்துகளுடன்,*

**மதுக்கூர் இராமலிங்கம்,**
**மாநிலத்தலைவர் (பொ)**

**ஆதவன் தீட்சண்யா,**
**பொதுச்செயலாளர்**



கட்டுரை

# சுபாஷ் சந்திரபோஸ் புதினங்களில் பண்ணைத் தொழிலாளர் நிலை

**பி.சா.மாதவி**

இந்தியாவில் இன்று நிலவும் சூழ்நிலைகளில் தொழிலாளர் பிரச்சனைகள் பல்வேறு விதமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக தமிழ்நாட்டில் விவசாயப் பண்ணைத் தொழிலாளிகளை சீர்குலைக்கும் வகையில் தொடர்ந்து பல்வேறு பிரச்சனைகள் இருந்து கொண்டுதான் வருகின்றன. இப்பிரச்சனைகள் ஆண், பெண் இருபாலரும் அறிந்ததே. இவ்வகையில் தமிழ்நாட்டில் தஞ்சைத் தரணி வாழ் மக்களின் வேளாண் தொழிலாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்களையும் தண்டனைகளையும் தம் படைப்புகளான வாட்டாக்குடி இரணியன், சாம்பவான் ஓடைச்சிவராமன், மலைப்பாம்பு மனிதர்கள் ஆகிய மூன்று வட்டாரப் புதினங்களில் பதிவு செய்துள்ள, அடிமைப்பட்டுக் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மை நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

பொதுவுடைமைக் கருத்துக்களின் மூலம் தஞ்சை மாவட்ட பொதுவுடைமைப் போராளிகள் தொழிலாளர்களுக்காகத் தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்து இன்னுயிர் நீத்தார்கள் என்பது இக்கட்டுரையின்வழி புலனாகிறது.

தொழிலாளர் ஒரு நாட்டின் முதுகெலும்பாய்த் திகழ்கின்றனர். தொழிலாளர் இல்லையேல் பலரின் பாடு பெரும்பாடாய் திண்டாட்டமாகிவிடும். அப்படிப்பட்டத் தொழிலாளர்களுக்குத் தங்களின் உழைப்பில் சுகபோக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் பண்ணையார்களின் மூலமாகவும், இயற்கைச் சீற்றத்தின் காரணமாகவும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பொதுவாக இந்தியா ஒரு விவசாய நாடு. குறிப்பாக தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும். தஞ்சை வட்டார தொழிலாளர்களின் பிரச்சினைகள் இங்கு ஆசிரியர் விளக்கியுள்ளார்.

பண்ணையார்கள் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர்கள். பல கிராமங்கள் இவர்களுக்குச் சொந்தம். கிராமத்திற்கு ஒரு பண்ணை அதற்கு ஒரு பங்களா நிர்வகிக்கத் தலையாரி, கங்காணி கணக்கர் என்ற ஆட்கள், எட்டு, பத்து பண்ணையாட்கள் வைத்துக் கொள்வார்கள். ஒரு பகுதியைச் சாகுபடிக்கும் கொடுப்பார்கள். சில கிராமங்களில் இரு பண்ணைகள் இருப்பதும் உண்டு.

இவர்களிடம் பண்ணையாட்களாக இருப்பவர்கள் பரம்பரை பரம்பரையாக அடிமைகளாகவே இருப்பவர்கள். ஒரு பண்ணையில் இருப்பவர்கள் அடுத்த பண்ணைக்கு வேலைக்குப் போய்விடக் கூடாது. இந்த பண்ணையார் குடும்பமும் மொத்த குத்தகைக்காரர் பண்ணையாட்களை நடத்துவதைவிட கடுமையாக நடத்துவார்கள்.

இவர்களைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் இருந்த பண்ணை முதலாளிகளும் நிலவுடைமை ஆதிக்கம் உடையவர்களாகவும் தொழிலாளர்களை அடிமைப்படுத்தக் கூடியவர்களாகவும் இருந்தார்கள் என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

பண்ணையார்கள் அளவுக்கு அதிகமான நிலம் வைத்திருப்பவர்களாகவும் அதிக அளவு ஆடு, மாடுகள் உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள். பண்ணைக்குச் சொந்தமான நிலங்களில் தான் அந்தக் கிராமத்தில் உள்ள அனைத்துத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்களும் வேலை செய்யவேண்டும். பண்ணை சொல்வதே பஞ்சாயத்து, அவர் செய்வதே நியாயம் என்று சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செயல்படக் கூடியவர்களாகவும், கண்மூடித்தனமான தண்டனைகள் கொடுக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். சமுதாயத்தின் மேல்மட்டத்தில் இருந்த இவர்கள் பண்ணை முதலாளிகளாக மாற்றம் அடைந்தார்கள் என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அனைத்து பண்ணைகளிலும் வேலை செய்பவர்கள் இந்து மதம் சார்ந்த தீண்டத்தகாதவர்களே. இந்தியாவில் தீண்டாமையால் ஏற்பட்ட பாதிப்பை பி.ஆர்.அம்பேத்கர்,

*இந்துக்கள் அல்லாதவர்களோ, பாதிக்கப் பட்டவர்களைத் தள்ளி வைத்து விடுவார்கள். ஆனால் இந்துக்கள் ஏற்படுத்திய தீண்டாமையோ ஒரு வர்க்கத்தையே கறைப்படுத்தி விட்டது[1]*

என்று கூறுவது தீண்டத்தகாத மக்களின் வாழ்க்கை நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது. சாதி, தீண்டாமை போன்றவையே உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை அழித்து விடுகின்றன.

பெரிய பண்ணை என்று அழைக்கப்படும் தருமலிங்கத்திடம் இருக்கும் நிலம் அனைத்தும் ஒரு காலத்தில் கோயிலுக்குச் சொந்தமானதாக இருந்தது. தருமலிங்கத்தின் முன்னோர்கள் கோயில் நிலங்களுக்குரிய குத்தகை வசூலிப்பது போன்றவற்றைச் செய்து வந்தனர். இவ்வாறு வசூல் செய்த பணமும், குத்தகை நெல்லும் சாமியின் பெயரில் கட்டப்பட்டதால், அவர்களுடைய பிள்ளைகளுக்குச் சாமியின் பெயரை வைத்து அப்படியே அதை மாற்றி உரிமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

*கோயில் நிலத்தை இப்படி மாற்றிக் கொண்டவர்கள் மாடிமேல் மாடி கட்டி வசதியாக வாழ்கின்றார்கள். அந்தக் கோயில் பூசை செய்பவர் குடும்பம் பசி பட்டினியால் வாடிக்கொண்டு இருக்கிறாராம் (ம.ம., ப.145)*

மேலும் கள்ளக் கடத்தலில் ஈடுபடுதல், கருப்புப் பணம் மாற்றுதல் என்று எல்லா வேலைகளிலும் தருமலிங்கம் ஈடுபட்டுள்ளனர். கள்ளக்கடத்தலில் வந்த விலைமதிப்பற்ற பொருட்களைக் கோயிலில் உள்ள சாமியின் கர்ப்பக்கிரகத்தில் வைத்து யாருக்கும் சந்தேகம் வராதபடி அளவுக்கு அதிகமான பொருளை சம்பாதித்தார் என்பதை ஆசிரியர் அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.

தருமலிங்கத்தின் உறவினரான பண்ணையார் பரமசிவத்திடம் இருக்கின்ற சொத்தும் உழைத்துச் சம்பாதித்தவை அல்ல. கீழையூரில் ஒரு மடம் இருந்தது. அந்த மடத்திற்கு அருகில் பண்ணையார் பரமசிவத்தின் குடும்பம் இருந்திருக்கிறது மடத்தில் சாமியார்கள் வந்து தங்குவார்கள். தங்குகின்றவர்களுக்கு சோறு தண்ணீர் கொடுப்பது இவரது குடும்ப வழக்கமாக இருந்தது. இப்படி வந்த சாமியார்களில் ஒருவர் இறந்துவிடவே அவருடைய அழுக்குத்துணி மூட்டையில் இருந்த வைரக்கற்களைச் செட்டியாரிடம் கொடுத்துவிட்டு அவரிடம் இருந்த நிலம் முழுவதையும் எழுதி வாங்கிக் கொண்டனர். இவ்வாறு உருவானதுதான் பரமசிவத்தின் பண்ணை என ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இவ்வாறு பண்ணை முதலாளிகள் பிறரை ஏமாற்றியும் பிறருடைய உழைப்பைச் சுரண்டியும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைந்தனர்.

பண்ணை முதலாளிகள் தங்களின் கீழ் அடிமைகளாக வேலை செய்யும் கீழ்வர்க்க மக்களை இழிவாகப் பேசுதல், அடித்தல், எதிர்க்கின்றவர்களைத் தங்கள் செல்வாக்கால் அழித்தல், தண்டனைகள் கொடுத்தல் போன்ற செயல்களைச் செய்து வந்தனர்.

வயலில் வேலை செய்யும் பண்ணைத் தொழிலாளிகள் கூலியை உயர்த்திக் கேட்டால் பண்ணையார் பரமசிவம் தனது பண்ணையில் அடிமையாக வேலை செய்யும் பொன்னனிடம் அவனுடைய இனத்தாரை இழிவாகப் பேசுவதை,

*நாய் கொலச்சு பொழுது விடியாது கோழி கூவுனாத்தான் விடியும் கூலி அதிகமாக கொடுக்க முடியாது யாரும் அறுக்கவும் வேண்டாம் போங்கடா (ம.ம., ப.26)*

என எழுதுகிறார்

களத்துமேட்டில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த மாரியம்மாள் தன் கணவனுக்கு இலையில் சோறு போட்டாள் என்பதற்காக,

*என்ன எல போட்ட சாப்பாடு நடக்குதா? வெளக்கமத்துக்குப் பட்டுக்குஞ்சமா? (ம.ம., ப.140)*

இலை போட்ட சாப்பாடு என்பது பண்ணைகளுக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

உடம்பு சரியில்லை என்று வேலைக்கு வராமல் இருந்தாலோ செய்கின்ற வேலையைச் சரியாகச் செய்து முடிக்காமல் வந்தாலோ பண்ணைக்குத் தெரியாமல் தப்பிக்க நினைத்தாலோ, பண்ணை முதலாளியோ அல்லது பண்ணையின் பெயரில் வேறு ஒருவரோ சாட்டையடி கொடுத்துத் தண்டித்தக் கொடுமைகளை மலைப்பாம்பு மனிதர்கள் புதினத்தில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இரவு முழுவதும் காத்திருந்து சுடுகாட்டில் பிணம் எரிக்காமல் விட்டதற்காக பிணம் எரிக்கச் சென்ற ஐந்து பேரையும் மரத்தில் கட்டி வைத்து அடித்ததைப் பொன்னன் நினைத்துப் பார்ப்பதை,

*வீரப்பன் அண்ணன் மகன் ஊரில் வந்து சொன்னான். உடனடியாக ஐந்து பேரையும் பிடித்துக்கட்டி வைத்து அடித்தார்கள். வீரப்பன் இருந்தும் அடிச்சாரு செத்தும் அடிச்சாறு (ம.ம., ப.62)*

என்று சேரி மக்கள் புலம்பியதை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

பண்ணை வேலையிலிருந்து விடுதலை பெற்று பட்டாளத்திற்குச் செல்ல வேண்டும் என்று அர்ச்சுனன் சாம்பான் இருவரும் ஆள் சேர்ப்பதற்காகப் பொன்னன் சாம்பான், அருச்சுனன் மூவருக்கும் சாட்டையடி கொடுத்தார்கள். எல்லாக் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு மீண்டும் பண்ணைக்கே வேலைக்குச் செல்லவேண்டும் என்பது பண்ணையாரின் உத்தரவாக இருந்தது.

சொந்த நிலம் இல்லாது கூலி உழைப்பின் மூலம் தான் உயிர் வாழமுடியும் என்றிருந்த ஏழைகள் ஆண்டாண்டு காலமாகக் குடும்பம் முழுவதுமாக உழைத்தார்கள். இவர்களின் முன்னோர்கள் வாங்கிய கடனுக்காக உழைத்தார்கள். இந்நிலையில் அவர்கள் ஏதாவது எதிர்த்துப் பேசினால் பொய்க்குற்றம் சாற்றப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

பொன்னனின் அப்பன் கார்வரிக்கு எதிராகப் பேசி-விட்டார் என்பதற்காக ஏதோ ஒரு காரணம் காட்டிப் பொய்க்குற்றம் சாட்டி சாணியைக் கரைத்து வாயில் ஊற்றுவார்கள். கொஞ்ச கொஞ்சமாய் அவர்களின் உயிர் பிரிந்துவிடும். ‘‘சாணிப்பால் குடித்தவர்கள் வாழ்க்கை அதோடு முடிந்துவிடும் என்பதை அப்பனைப் பார்த்து பொன்னன் அறிந்து கொண்டான்.’’

பண்ணைக்கு எதிராகச் செயல்பட்டவர்களைப் பிடித்து வந்து கட்டி வைத்து முதுகிலோ அல்லது கெண்டைக் காலிலோ சிலுவைக் குறிபோல சூட்டுக்கோலால் சூடு வைத்தல் போன்ற பல கொடுமைகளைச் செய்தார்கள்.

பண்ணையார் பரமசிவம் மூன்று பேருக்குச் சூடு போட்டது அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்கள், நகரங்கள் எங்கும் அமைதியான குளத்தில் கல் விழுந்ததும் சிறு அலை பேரலைகளாகப் பரவுவதைப் போலப் பரவியது. அருச்சுனன் அடிபட்டுச் சூடும் வாங்கி செத்தும் போய்விட்டான். மனுசனை மனுசன் சூடு போடுறது மனித குலத்துக்கே ஒரு அவமானம் என்பதை பண்ணையார் உணரவில்லை. அவர்கள் படும் துன்ப நிகழ்வினை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

பொன்னனின் மனைவி ஆராயி நடவு வயலுக்கு நேரம் தவறி வந்ததால் பச்சைப் பிள்ளைக்காரி என்றும் பார்க்காமல் அவள் தலையில் நாற்றுக்கட்டை வைத்து நீண்டநேரம் சுமக்கச் சொன்னார்கள்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பளம் உயர்ந்தது. ஆனால் அவர்களின் வாழ்க்கைத்தரம் மட்டும் உயரவே இல்லை. அவர்கள் குடித்தே கூலியைச் செலவு செய்தனர். குடிப்பழக்கத்திற்காகவே சம்பளத்தின் பெரும்பகுதியை செலவிட்டனர். அடிமைப்பபட்ட மக்கள் விழிப்புணர்வு பெறாமல் இருக்கவே வெள்ளைக்காரன் மதுவை இறக்குமதி செய்தனர். இதை அறியாத தொழிலாளர்கள் மது அருந்தி அறியாமை என்னும் இருளிலேயே மூழ்கிக் கிடந்தனர்.

தமிழ்நாட்டில் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும், விவசாயக்கூலி வேலை செய்யும் கீழ்த்தட்டு மக்களுக்கு இழைக்கும் அநீதிகள், அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை வாட்டாக்குடி இரணியன் எனும் புதினத்தில் ஆசிரியர் கூறியுள்ளார்.[3]

பண்ணையில் கூலி வேலை செய்யும் மக்களுக்குச் சரியான கூலிக் கொடுப்பதில்லை. மேலும் அவர்களைச் சாதிப் பெயரைச் சொல்லிக் கீழ்த்தரமாகத் திட்டுவார்கள்.

*சுதந்திர நாட்டுல எங்களுக்கு எதுவும் வேணாம் ஒடம்பத் தெண்டனிட்டதுக்குக் கூலி கொடுக்கட்டும் சாதிய வச்சு எங்கள இழிவு படுத்தாம இருந்தா போதும் (மா.வா.இ., ப.141).*

மேலும் பண்ணையில் வேலை செய்யும் மக்கள் எவரும் விரும்பி வேலை செய்வதில்லை. வாய்ப்புக் கிடைத்தால் முதலாளிக்குத் தெரியாமல் பலர் கப்பல் ஏறி சிங்கப்பூர் சென்று விடுவார்கள்.

கூலிவேலை செய்யும் மக்களுக்குச் சாட்டையடி, சாணிப்பால் கொடுப்பார்கள். தலையில் மண்கூடை சுமத்தல், புருஷன் பார்க்கப் பெண்டாட்டியையும் பெண்டாட்டி பார்க்கப் புருசனையும் கட்டி வைத்து அடித்தல், தலைகீழாகத் தொங்கவிட்டு கீழே நெருப்பைக் கொளுத்துதல், கட்டை விரலை வெட்டுதல் இதுபோன்ற பல்வேறு கொடுமைகள் செய்யப்பட்டனர். இத்தகைய வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் சூழல் பற்றி ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

*‘‘இராயர் பண்ணையைச் சேர்ந்தவர்களும் கூலி வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் உகந்த கூலியைக் கொடுக்காது அவர்களுடைய உழைப்பைச் சுரண்டி செல்வந்தர் ஆகிறார்கள்’’ (மா.வா.இ., ப.168).*

உத்திராபதி மடத்தைச் சேர்ந்த பண்ணை முதலாளி விவசாயக் கூலிகளின் உழைப்பைச் சுரண்டியும்,

புறம்போக்கு நிலத்தை அபகரித்தும் முதலாளி ஆகின்றனர் (மா.வ.இ., ப.151).

தஞ்சாவூர் மாவட்டம் தொழிலாளர்களின் தோழன் வாட்டாக்குடியில் பிறந்த இரணியன் பாட்டாளி மக்களுக்காக வாழ்ந்து பல போராட்டங்களையும் புரட்சிகளையும் செய்துள்ளான். வாட்டாக்குடியில் உள்ள முக்கியமானவர்கள் ஏழைகளுக்குச் சேர வேண்டிய நிலத்தைக் கொடுக்காமல் ஏரியை நிலமாக்கி விவசாயம் செய்து வந்தனர். இந்நிலையை மாற்று நிலத்தை அவர்களிடமிருந்து மீட்டு ஏழை மக்களுக்கு கொடுக்கிறான் (மா.வா.இ., ப.161).

இரணியன் பண்ணை முதலாளிக்கு எதிராகப் போராடியதால் அவனுடைய வீடு இடிக்கப்பட்டு அவன் மனைவி வேறொருவனுக்கு மனைவியாக்கப்படுகிறாள். அரசாங்கம் அவனுடைய தலைக்கு விலை வைத்து அவனைச் சுட்டனர்.

மன உறுதியும் பொய்மைக் கண்டு பொங்கி எழுந்த ஓர் இளைஞன் இளம்வயதிலேயே பொதுவுடைமை கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டு வரலாற்றில் நிலைபேறு பெற்றுவிட்ட ஒரு வீரன் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு தனது உடல், பொருள் ஆவியை விட்ட தியாகி தான் இரணியன்.

வெங்கடாசலம் என்ற இரு விவசாயத் தொழிலாளர்களின் குடிசை வீடுகளை நெடும்பலம் நிலக்கிழாரின் ஆட்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கின்றார்கள். இந்த ஆத்திரத்தில் உழைக்கும் மக்களிடையே உணர்வைத் தூண்டிவிடக் கள்ளிக்குடியில் நடந்த மலயா தியாகிகள் நினைவுநாள் கூட்டத்திற்குச் சுமார் பத்தாயிரம் பேர் ஆவேசமாகத் திரண்டிருந்தனர். அப்போது கம்யூனிஸ்டுக் கட்சி தடை செய்யப்பட்டிருந்தது. பொதுக்கூட்டம் நடத்தத் தடை இருந்தது. அந்தத் தடையை மீறி விழிகளில் நெருப்புப்பொறி பறக்க விவசாய மக்கள் அங்கே கூடியிருந்தனர். காவல் துறையினர் தங்கள் தடையாணையை நிறைவேற்ற முடியவில்லை. அந்தக் கூட்டத்தில் ஓர் இளைஞன் ஆவேசமாகப் பேசுகிறான். வெங்கடாசலம் வீடுகளை இடித்தவர்களைச் சும்மாவிடக் கூடாது, பழிக்குப்பழி வாங்குவோம். அந்த இளைஞன் தான் சாம்பவான் ஓடைச்சிவராமன்.[4]

தஞ்சை மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் விவசாயக் கூலி செய்து வாழ்ந்து வருகிறார்கள். இப்பகுதியில் பல லட்சம் ஏக்கர் நிலங்கள் பண்ணையாளர்களுக்கு உரிமையானது. இந்நிலையில் வேலை செய்யும் சேரி மக்களை எப்படி ஒடுக்கினார்கள் என்பதை,

நல்ல உடற்கட்டும் திறமையும் உள்ள சேரி மக்களைப் பண்ணையார்கள் யானையை அங்கு சத்தத்தால் அடக்கி வைத்தாற்போலத் தீண்டாமையாலும் வறுமையாலும் அடக்கி வைத்து வேலை வாங்கினார்கள் (சா.ஓ.சி., ப.38).

தை மாதத்தில் கிடைக்கும் கூலியை நம்பி வருடம் முழுவதும் கடன் வாங்குவார்கள். இவர்களிடம் கடன் கொடுத்தே இந்த ஊரில் பணக்காரர் ஆனவர்கள் அதிகம் பேர். சேரி மக்கள் அனைவரும் ஊரில் உள்ளவர்களுக்கே குடிவேலை செய்வது, மாடு செத்தால் தூக்குவது, யாரும் செத்துப் போனால் துக்கம் சொல்வது, தப்புக் கொட்டுவது, குழி வெட்டுவது, எரிப்பது முதல் எல்லா வேலைகளையும் சேரியைச் சேர்ந்தவர்கள் தான் செய்ய வேண்டும். இவர்களின் வாழ்க்கையே திசைமாறி போனதை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

சேரியைச் சேர்ந்த வயதான ஒருவர் வயற்காட்டைச் சுற்றிக் கொண்டே வந்தார். வெப்பம் மிகுதியால் அவரின் நாக்கு வறண்டு விட்டது. தண்ணீர் குடிக்க வீட்டிற்குச் செல்லலாம் என்றால் சேரி தூரத்தில் இருந்தது. அவரின் அருகே குளம் இருந்தது. அந்தக் குளமோ மீன் பிடித்துத் தண்ணீர் குழம்பிப் போய்க் கக்கலும் கரைசலுமாகக் கிடந்தது. கிழவன் சுற்றிப் பார்த்துவிட்டு குளத்தில் தண்ணீர் குடிக்கப் போனார். அதற்குள், பண்ணையாரின் மகன்கள் பச்சைக் கம்பால் அடித்தார்கள். சேரி மக்கள் தாகம் தணிக்க தண்ணீர் கூடக் குடிக்க முடியாமல் தவித்தனர்.

இத்தகைய போராட்டங்களுக்கு இடையில் வாழ்கின்ற கூலித் தொழிலாளர்களுக்கு சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளும் தாங்கள் வாழ்கின்ற கிராமியச் சூழலுக்கு ஏற்றவாறு உணவு, உடை, பழக்க வழக்கங்களை உடையவராக வாழ்ந்து வருகின்றனர்.

“யாதும் ஊரே! யாவரும் கேளிர்! எல்லோர்க்கும் எல்லாமும் இருக்கின்ற இடம் நோக்கி நகர்கின்றது இத்திசையாம்” என்ற பொதுவுடைமைக் கருத்துக்களின் மூலம் மக்களின் நிலையை அறிந்து அனைவரும் இனிவரும் காலங்களில் அடிமைத்தனம் ஒழிய வேண்டும் என்ற உயரிய நோக்கோடு சரிநிகர் சமமாக இன்றைய சமுதாயத்தில் ஒவ்வொருவரும் வாழவேண்டும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**சான்றெண் குறிப்புகள்**

1. பி.ஆர்.அம்பேத்கர், தீண்டப்படாதவர் வரலாறு, ப.29.
2. ச.சுபாஷ் சந்திரபோஸ், மலைப்பாம்பு மனிதர்கள், ப.24.
3. ச.சுபாஷ் சந்திரபோஸ், மாவீரன் வாட்டாக்குடி இரணியன், ப.31.
4. ச.சுபாஷ் சந்திரபோஸ், சாம்பவான் ஓடைச்சிவராமன், ப.28.

**குறிப்புதவி நூல்கள்**


- அக்னிபுத்ரன், எல்.கே., வர்க்கப் போராட்டமும் மானுடவியல் கோட்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப., 2009.
- சுபாஷ் சந்திரபோஸ், ச., வாட்டாக்குடி இரணியன், அலைகள் வெளியீட்டகம், சென்னை, மு.ப., 1999.
- ---. மலைபாம்பு மனிதர்கள், அலைகள் வெளியீட்டகம், சென்னை, மு.ப., 1999.
- ---. சாம்பவான் ஓடைச் சிவராமன், இயல் வெளியீடு, தஞ்சாவூர், மு.ப., 2012.


●

கட்டுரை

# ஹெலிகாப்டர் பெற்றோர்கள்

மருத்துவர் ப.வைத்திலிங்கம்

குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கி தாங்கள் சார்ந்துள்ள சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஒரு நல்ல குடிமகனாகக் கொடுப்பது பெற்றோர்களின் தலையாயக் கடமையாகக் கருதப்படுகிறது. அதற்காகப் பெற்றோர்கள் எடுக்கும் முயற்சியும் வளர்க்கும் முறைகளும் அவர்களின் நாடு, இனம், மொழி, பொருளாதார நிலைமை, கல்வி, குடும்ப அமைப்பு போன்ற பல்வேறு காரணங்களால் வேறுபடுகின்றன. குழந்தைகளும் பெற்றோர்களும் கூடிய குடும்ப அமைப்பில் குடும்ப உறுப்பினர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே நடக்கும் பாசப்பிணைப்பு பெற்றோர்கள் காட்டும் அக்கறை, உணர்வுப் பரிமாற்றம் ஆகியவைகளால் ஏற்படுகின்ற சூழலைப் *(EMOTIONAL CLIMATE)* பொறுத்துதான் பிற்காலத்தில் குழந்தைகள் வளர்ந்து எவ்வாறு பரிணமிக்கப் போகிறார்கள் என்று முடிவு செய்யப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சி பற்றி ஆராயும் மனவியலாளர்கள் அவர்களின் சமூக, மனவியல் வளர்ச்சிக்கு இந்த ஆரம்ப கால உணர்வுச் சூழல் மிக முக்கியம் என்கிறார்கள்.

முந்தைய தலைமுறைக் குழந்தைகள் அதாவது தற்போதைய பெரியவர்கள் முதியவர்களுக்கு அவர்களின் பெற்றோர்களின் ஆதிக்கம் மிகவும் குறைவாகவே இருந்தது. குழந்தைகளுக்கும் சிறு வயதிலிருந்தே சுதந்திரம் அதிகம் இருந்ததால் நடக்க ஆரம்பித்து வெளி உலகுக்கு வந்து பள்ளி கல்லூரி என்று விரியும் போது பெற்றவர்களின் மேற்பார்வைதான் குறைந்ததே ஒழிய அவர்கள் குழந்தைகளின் மீது வைத்திருந்த நம்பிக்கை அதிகமாகவே இருந்தது. அதைவிடவும் சுற்றியுள்ள சமூகமும் அவர்களுக்கு பாதுகாப்பும் நம்பிக்கையும் அளிப்பதாகவே இருந்தது. பக்கத்து ஊரில் உள்ள பள்ளிக்குப் போய்ப் படிப்பது, சைக்கிள் ஓட்டுவது, மரம் ஏறுவது, ஊரில் உள்ள ஏரியில் குளிப்பது என்று இவர்கள் முழுவதும் தன்னிச்சையாக செயல்பட இளம் வயதிலேயே ஆரம்பித்து விட்டார்கள். கீழே விழுந்து அடிபட்டாலும், சிறு சிறு காயங்கள் ஏற்பட்டாலும் கூட பல நேரங்களில் பெற்றவர்களின் பார்வைக்குப் போகாது.

ஆனால் தற்காலப் பெற்றோர்கள் அப்படியில்லை. குழந்தைகள் மேல் பெற்றோர்களின் அக்கறை மிக மிக அதிகம். தாங்கள் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தைத் தங்கள் குழந்தைகள் பிடித்துவிட வேண்டும் என்ற ஆசையால் அவர்களின் மேல் மிகுந்த ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விடுகிறார்கள். வசதி வாய்ப்புகள் மற்றும் பொருளாதாரம் இதற்குத் தடையில்லாமல் இருக்கும் போது தாங்கள் நினைத்தபடி குழந்தைகளை வளைத்து, வளர்த்து விட முயல்கிறார்கள். பல நாடுகளில் அரசாங்கம் மற்றும் சமூகத்தின் அழுத்தம் காரணமாக ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளே போதும் என்ற முடிவுக்கு வந்து விட்ட பிறகு பெற்றோர்களின் பார்வை குழந்தைகள் மீது மேலும்



அதிகமாகப் படிய ஆரம்பித்து விடுகிறது. மேலும் பல்வேறு காரணிகளால் குழந்தைப் பிறப்பு விகிதமும் குறைந்து வருவதால் பொதுவாகவே பெற்றோர்களின் ஆதிக்கம் குழந்தைகள் மேல் ஆக்டோபஸ்ஸின் கரங்கள் போல் பல திசைகளில் இருந்தும் நீள ஆரம்பித்து விட்டது.

குழந்தைகள் வளரும் விதம் பற்றி ஆராயும் மனவியலாளர்கள் குழந்தைகள் வளர்ப்பு முறையை நான்கு வகைகளாகப் பிரிக்கிறார்கள். 1. சர்வாதிகாரப் பெற்றோர்கள். 2. அக்கறையும் அதிகாரமும் உள்ள பெற்றோர்கள். 3 புறக்கணிப்பு பெற்றோர்கள். 4. தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்கள். ஆனால் இதில் எந்த எந்த முறையிலும் சேராமல் ஐந்தாவதாக உள்ளவர்கள்தான் இந்த ஹெலிகாப்டர் பெற்றோர்கள்.

**இவர்களை எப்படி அடையாளம் காணுவது?**

இம்மாதிரியான பெற்றோர்கள் 24/7 குழந்தையைக் கண்கொத்திப் பாம்பாகப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். இவர்களின் உலகமே குழந்தைதான். குழந்தை மீது உள்ள அதிகப்படியான பாசத்தினால் எல்லாமே இவர்களுக்கு அதிகம்தான். குழந்தை பிறந்ததிலிருந்து, நடக்க ஆரம்பித்து, பள்ளி, கல்லூரி என்று சென்றாலும் இவர்கள் குழந்தையைப் பின் தொடர்வதை விட மாட்டார்கள். சமூகத்தையும் வெளி உலகத்தையும் தங்கள் குழந்தையின் எதிரிகளாகப் பார்ப்பார்கள். தங்கள் குழந்தைக்குத் தாங்கள் மட்டும்தான் பாதுகாப்பு என்று எண்ணிக்கொள்வார்கள். எப்போதும் குழந்தை அவர்கள் கட்டுப்பாட்டில் தான் இருக்கும். மனதளவில் குழந்தைக்கு நேர் மேலே இவர்கள் ஹெலிகாப்டரில் உட்கார்ந்துகொண்டு கவனித்துக் கொண்டே இருப்பார்கள். இவர்களை புல்டோசர் பெற்றோர்கள் அல்லது LAWN MOVER பெற்றோர்கள் என்று கூட அழைக்கிறார்கள். காரணம் தங்கள் குழந்தைக்கு எந்தத் தடை வந்தாலும் இவர்களே உடைத்து சுக்கு நூறாக்கி விடுவார்கள். இவர்களின் உடல், பொருள், ஆவி அனைத்தும் குழந்தைக்குத்தான். அதுபோல பிரதிபலனாகக் குழந்தைகளிடம் இருந்தும் நூறு சதம் எதிர்பார்ப்பார்கள். கொஞ்சம் கூடக் குறையக் கூடாது. எல்லாமே அதிகம்தான்.

ஒரு ஐந்து வயது வரையிலும் உள்ள குழந்தைகளை மிக எளிதில் தங்கள் வளையத்தில் வைத்துக் கொள்வார்கள். குழந்தையை நிழல் போல தொடர்ந்து கொண்டே இருப்பார்கள். குழந்தையின் நார்மல் வளர்ச்சிப் படிகளைக் கூட அந்த குழந்தை அனுபவிக்க விட மாட்டார்கள், நடக்க விட மாட்டார்கள். குழந்தையை மடியில் வைத்துத் தூக்கிக் கொண்டே தங்கள் வேலையை செய்வார்கள். குழந்தையைத் தனியாகவோ அல்லது பக்கத்து வீட்டுக் குழந்தையோடவோ விளையாட விட மாட்டார்கள். அதற்குப் பதில் அவர்களே எப்போதும் குழந்தையோடு விளையாடிக்கொண்டும், அந்த பிஞ்சுக்கு எல்லா நேரமும் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துக் கொண்டும், அதன் பழக்கத்தையே மாற்றி தங்களுக்குத் தகுந்த மாதிரி ஆக்கவும் விடா முயற்சி செய்வார்கள். குழந்தை தவழ்ந்து, தத்தித் தடுமாறி எழுந்து, கீழே விழுந்து மீண்டும் எழுந்து யாருடைய உதவியும் இன்றி சரியாக நடக்கக் கற்க வேண்டும். கீழே விழுந்தால் தானே எழுந்து நடக்கத் தெரியும். சிறு சிறு சிராய்ப்புகளும் காயங்களும் இல்லாமல் எப்படிக் கற்பது? தோற்றால் தானே வெற்றியின் சுவை தெரியும். குழந்தைப் பருவமே அந்தக் குழந்தைக்கு கூட்டுப்பறவை வாழ்க்கையாகி விடும். எந்த வாழ்க்கைத் திறனையும் எளிதில் கற்றுக் கொள்ள விட மாட்டார்கள்.

குழந்தையைப் பள்ளியில் சேர்த்தாகி விட்டால் போதும். குழந்தையைப் பிரிந்து இருக்க வேண்டுமே என்று இவர்கள் கவலைப்பட ஆரம்பித்து விடுவார்கள். காலையில் குழந்தையைத் தூக்கத்தில் இருந்து எழுப்பி, குழந்தையின் பற்களை இவர்களே தேய்த்து விடுவார்கள், எவ்வளவு பெரிய குழந்தையாக இருந்தாலும் இவர்கள்தான் சாப்பாடு ஊட்டி விடுவார்கள். (கவனிக்கவும். பல் விளக்கச் சொல்லித்தரவோ அல்லது சரியான முறையில் சாப்பிடும் பழக்கத்தைச் சொல்லித்தரவோ முயற்சிக்க மாட்டார்கள்). குழந்தையின் வகுப்பில் மனதளவில் இவர்களும் மாணவர்களாகச் சேர்ந்து விடுவார்கள். குழந்தையின் வீட்டுப் பாடம் எல்லாம் இவர்களே போட்டு விடுவார்கள். தப்பித் தவறி வகுப்பு ஆசிரியர் இரண்டு மார்க் குறைவாகப் போட்டு விட்டால் போதும். மிகவும் டென்ஷன் ஆகி விடுவார்கள். அடுத்த நாளே பள்ளிக்குச் சென்று அந்த ஆசிரியரை சண்டைக்கு இழுப்பார்கள். எப்படிக் குழந்தையின் விடைத்தாளைத் திருத்துவது என்று ஆசிரியருக்கே பாடம் எடுத்து விட்டு வருவார்கள். தங்கள் குழந்தைக்கு யார் யார் தகுதியான நண்பர்கள் என்று இவர்கள்தான் தேர்வு செய்து கொடுப்பார்கள். அம்மாதிரியான குழந்தைகளின் பெற்றோர்களை இவர்களே வலியனாகச் சென்று நண்பர்கள் ஆக்கிக் கொள்வார்கள். இம்மாதிரியெல்லாம் இவர்கள் எப்போதும் குழந்தையைத் தொடர்ந்து கொண்டே இருப்பதால் அந்தக் குழந்தையும் தன்னம்பிக்கை இல்லாமல், சுய கவுரவம் இல்லாமல், திறன்கள் எதுவும் கற்றுக் கொள்ளாமல், அதிக மன அழுத்தத்திலேயே வளர வேண்டிய கட்டாயம். சில நேரங்களில் குழந்தையே பெற்றோர்களிடம் தயவு செய்து பள்ளிக்கு வராதீர்கள் என்று கெஞ்சும் நிலைக்கு வந்து விடும். ஆனாலும் இவர்கள் கேட்டால்தானே!

இம்மாதிரியான பெற்றோர்களுக்கு இப்போது செல்ஃபோன் ஒரு வரப்பிரசாதமாகி விட்டது. செல்ஃபோனை உபயோகப்படுத்தி குழந்தையை எப்படி எல்லாம் எளிதாக வளர்த்து விடலாம் என்று யோசித்துக்கொண்டே இருப்பார்கள். சிறு குழந்தையின் அழுகையை நிறுத்த அந்தக் காலத்தில் தாலாட்டு: இந்தக் காலத்தில் செல்ஃபோனில் பாட்டு. குழந்தையை சாப்பிட வைக்க செல்ஃபோனைக் கொடுத்துக் கவனத்தைத் திசை திருப்பி எளிதில் சாப்பாடு ஊட்டி விடுவார்கள். அடம் பிடிக்காமல் சமத்தாக வளர்க்க, என பல உபயோகங்கள் அந்த செல்ஃபோனுக்கு. பள்ளி கல்லூரி

செல்லும் குழந்தையின் கையில் ஒரு செல்ஃபோனைக் கொடுத்து விட்டு, குழந்தையைக் கண்காணிக்க ஆரம்பித்து விடுவார்கள். இதனால்தானோ என்னவோ அமெரிக்காவில் ஜியார்ஜியா பல்கலைக்கழகத்தில் உள்ள பேராசிரியர் ரிச்சர்ட் முல்டென்டோர் -*RICHARD MULTENDORE* - என்பவர் , செல்ஃபோனை உலகத்திலேயே மிக நீளமான தொப்புள்கொடி என்றார்.

இம்மாதிரி குழந்தை மேல் அதிக அக்கறையோடு வளர்க்கும் முறை காலம் காலமாக நம் இந்தியா உள்பட எல்லா கிழக்காசிய நாடுகளில் உள்ளவர்களாலும் நடைமுறைப் படுத்தப்படும் வழிதான் என்றாலும் நம் முன்னோர்கள் ஒரு கட்டத்துக்குமேல் குழந்தைகளைத் தொந்தரவு செய்ய மட்டார்கள். பெரும்பாலும் விடலைப் பருவத்துக்கு மேல் அதிகம் குழந்தைகள் வாழ்வில் குறுக்கிட மாட்டார்கள். ஆனால் இந்த நவீன யுகப் பெற்றோர்கள் எப்போது குழந்தையைத் தன்னிச்சையாக விட வேண்டும் என்று தெரியாமல் முழிக்கிறார்கள். எந்தப் புள்ளியில் குழந்தையை விட்டு விட வேண்டும் என்று தெரிந்தால் இருவருக்கும் நல்லது. தங்கள் வாழ்வின் அந்திம காலங்களில் குழந்தைகளிடம் இருந்து பாதுகாப்பு உள்பட அனைத்தையும் எதிர்பார்ப்பதால் சிறு பிராயத்தில் இருந்தே குழந்தைகள் மீது நிறைய அக்கறை எடுத்து வளர்த்து ஆளாக்கிவிட முயல்கிறார்கள். ஆனாலும் என்னவோ பெற்றோர்கள் போட்ட சாலை மீது குழந்தைகள் நடக்கவே தடுமாறுகிறார்கள். அதை விடவும் குழந்தைகளை எந்த சாலைமீதும் நடக்கும் திறமை உள்ளவர்களாக வளர்க்கலாமே!

வசதி படைத்த பெற்றோர்களால் இம்மாதிரி, குழந்தைகளைக் கண்காணித்து, அவர்களுக்காக எல்லா வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்து மிக எளிதில் செய்துவிட முடியும். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அவர்களின் குழந்தை வளர்ப்பு முறை ஒரு முன்னுதாரணமாகத் தெரியும். ஆனலும் வீட்டுக்குள்ளே பெற்றோர் - பிள்ளை உறவு அவ்வளவாக நன்றாக இருக்காது. இம்மாதிரி எப்போதும் குழந்தைகள் மீது ஒரு கண்வைத்துக்கொண்டு, அவர்களை எப்போதும் பின் தொடர்ந்து கொண்டே ஒருவித மனச் சுமையோடு குழந்தை வளர்ப்பது நல்லதா?

**இதனால் பெற்றோர்களுக்கு என்ன லாபம்?**

1. தங்கள் குழந்தையை மிகவும் பாதுகாப்பாக வளர்ப்பதாக நினைக்கிறார்கள்.
2. வெளியில் மற்றவர்களுடன் பழகி ஊர் வம்பை, சண்டையை வாங்கி வந்து விடுவார்களோ என்ற பயம் இல்லை என்கிறார்கள்.
3. தாங்கள் கிழித்த கோட்டைத் தாண்டாத பிள்ளை, சொன்ன சொல்லைத் தட்டாத பிள்ளை என்று மகிழ்ச்சி அடைகிறார்கள்.

குழந்தைகள் இம்மாதிரியான சூழலை அறவே விரும்புவதில்லை. இருந்தாலும் இளம் பருவத்தில் இருந்தே வேறு மாற்று தெரியாமல் வளர்ந்ததால், விடலைப் பருவத்திற்குப் பிறகுதான் இவர்கள் தடுமாறுகிறார்கள். இந்த பருவத்தில் பெற்றோர்களின் பிடிமானமும் தளர்ந்து விடுகிறது. வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தில் முடிவு எடுக்கும் திறன் இன்றித் தவிக்கிறார்கள். முக்கியமாக இவர்களுக்குத் தங்களின் மீதும், தங்களின் திறமைகள் மீதும் நம்பிக்கை வருவதில்லை. அவர்கள் தங்கள் வாழ்வில் பிரச்சினையை எதிர்நோக்கும் ஒவ்வொரு தருணத்திலும் தயக்கம்தான். தடுமாற்றம்தான்.

வாழ்க்கையில் உயருவதற்கு முடிவு எடுக்கும் திறமை மிகவும் அவசியம். ஒவ்வொரு பிரச்சினைக்கும் மற்றவர்களிடம் ஆலோசனை கேட்கலாமே ஒழிய முடிவு நாம்தான் எடுக்க வேண்டும். முடிவு எடுத்தல் என்ற திறமையை சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பிரச்சினையிலும் அதன் சாதக பாதகங்களைப் பகுத்தறிந்து சிந்தித்து முடிவு எடுக்கத் தெரிய வேண்டும். முக்கியமாகத் தாங்கள் எடுத்த முடிவுக்கு அவர்களைப் பொறுப்பேற்கச் சொல்ல வேண்டும். எடுத்த முடிவு தவறாகித் தோல்வி வரும் போது, துவண்டு விடாமல் அதை வெற்றிக்கான படிக்கல்லாக மாற்றத் தெரிய வேண்டும். தோல்வியின் காரணம் அறியும் போது நிச்சயமாக அந்தக் குழந்தை அடுத்த முறை நல்ல முடிவை எடுக்கக் கற்றுக் கொள்ளும். அது குழந்தைக்கு தன்னம்பிக்கையையும், சுய கவுரவத்தையும், ஆளுமைத் திறமையையும் அள்ளி அள்ளிக் கொடுக்கும்.

●


**புத்தகங்கள் அச்சிட**

**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**

**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

கட்டுரை

# இறையன்பு கவிதைகளில் காதல்

ப்ரியா.சி

கவிதை இலக்கியம் உலகில் பெரும்பாலோரால் விரும்பப்படும் இலக்கியமாகும். மரபுக் கவதை, வசனக் கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதைகளில் பிரிவுகள் நீளும். இவ்வகையில் கவிதைகளின் ஒரு வடிவமே புதுக்கவிதையாகும். மரபுக்கவிதை இலக்கண வரம்புக்கு கட்டுப்பட்டவை. புதுக்கவிதைகள் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. நேசம், காதல், கோபம், மகிழ்ச்சி, அன்பு, பாசம், துக்கம், ஏக்கம், எதிர்ப்பார்ப்பு, காத்திருப்பு என எல்லாற்றையும் சுவைபட, சொல்வதில் புதுக்கவிதைகள் சிறந்து விளங்குகின்றன. அவ்வகையில் காதல் சுவையைச் சொல்வதில் இறையன்பு கவிதைகள் எவ்வாறெல்லாம் அமைந்துள்ளன என்பது பற்றிய கருத்துக்களைச் சொல்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

1910 ஆண்டில் ‘வால்ட் விட்மன்’ எனும் ஆங்கிலக்கவிஞர் எழுதிய ‘புல்லின் இதழ்கள்’ எனும் நூலே புதுக்கவிதையின் முதல் நூலாகும். இதைத் தொடர்ந்து அமெரிக்காவை விட்டு இங்கிலாந்தில் குடியேறிய ‘எஸ்ரா பவுண்ட்’ ஒரு சிறந்த புதுமையான புதுக்கவிதையைத் தந்தார். இவரின் பாழ்நிலம் *(Waste Land)* கவிதைக்கு நோபல் பரிசு கிடைத்தது. கி.பி 20 ஆம் நூற்றாண்டு தொடங்கி புதுக்கவிதை தமிழிலக்கியத்தில் தோன்றி சிறக்கலானது. பாரதியால் எழுதப்பட்ட வசன கவிதைகளே தமிழில் காணும் புதுக்கிதைக்கு முன்னோடியாக அமைந்தது. புதுக்கவிதை வளர்ச்சியும் பெற்றது.

தொல்காப்பியர் புதிதாகப் பிறக்கும் இலக்கியத்தை ‘விருந்து’ எனப் பெயரிட்டு சிறப்பித்தது வரவேற்றார். இதேபோல் நன்னூலார் “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே” என்றார். புதுக்கவிதை மரபுக் கவிதைகள் போலல்ல. இவை இலக்கணச் செங்கோல். யாப்புச் சிம்மாசனம். எதுகை பல்லாக்கு, தனிமொழி சேனை, பண்டிதபவனி இவை எதுவும் இல்லாதது. தம்மைத் தாமே ஆளும் சிறப்பு பெற்ற கவிதையாக புதுக்கவிதைகள் அமைந்தன.

புதுக்கவிதையானது மூன்று காலக்கட்டங்களில் வளர்ச்சியடைந்தது. மணிக்கொடி காலத்தில் மணிக்கொடி இதழ் மட்டுமின்றி வேறு பல இதழ்களும் புதுக்கவிதைகளை வெளியிட்டுள்ளன. ஜெயபாரதி, சூறாவளி, மோகினி போன்ற இதழ்களைக் கூறலாம். எழுத்து காலத்தில் எழுத்து, சரஸ்வதி, இலக்கியவட்டம், தாமரை, கசடதபற போன்ற இதழ்கள் புதுக்கவிதைகளை வளர்த்தன. சிட்டி, வல்லிக்கண்ணன் ஆகியோர் இலக்கியத்திற்கு சிறப்பு சேர்த்தவர்களாவர். வானம்பாடி காலத்தில் வானம்பாடி, தீபம், கணையாழி, சதங்கை முதலிய இதழ்கள் புதுக்கவிதைகளைப் பிரசுரித்தன. சதங்கை, புவியரசு போன்றவர்களை இக்காலத்து புதுக்கவிஞர்களாக்கியது.

புதுக்கவிதையின் மொழி எளிய நடையிலுள்ளதால் அனைவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். நவீன தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்குச் சான்றாக புதுக்கவிதைகள் விளங்குகின்றன. புதுக்கவிதை வழிப் பல கவிதை முன்னோடிகள் வளர்ச்சி அடைந்தனர் சுருக்கம் கொண்டதனால் எழுதுவது இலகுவாகும். பேச்சுவழக்குச் சொற்கள், ஒலிநயம் காணப்படுவது மற்றுமொரு சிறப்பம்சமாகும். வடமொழி, ஆங்கிலம், பேச்சுவழக்கு சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு கருப்பொருளைக் காட்சியாகக் கொண்டு நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தக் கூடியதாய் புதுக்கவிதைகள் சிறப்பு பெறுகின்றன.

“உள்ளத்து உள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத்தெளிந்த தமிழில் உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை”[1]

என்ற கவிமணியின் வைர வரிகள் புதுக் கவிதையின் நோக்கத்தை தெளிவுபடுகின்றது.

“நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்”[2]

என்ற பாரதியின் வாக்கினை அடியொற்றியவராய் விளங்கும் கவிஞர்களுள் முனைவர் வெ. இறையன்பு அவர்கள் குறிபிடத்தக்கவர். இவரின் கவிதைகளில் இடம் பெற்றுள்ள காதல் சுவை குறித்து ஆய்வோம்.

உலகில் காதல் இலக்கியங்கள் இல்லாத மொழிகளே இல்லை. எழுத்து இல்லாத மொழியில்

கூடக் காதல் உண்டு. அதனால்தான் காதலைப் பற்றி கூறுகையில்,

"உயிரில் முளைத்த சிறகு காதல்
அது ஓசையில்லாத சலனம்
ஆனால் உயிரை இயக்கும் அசைவு"[3]

"கடிகாரம் / அவர்கள் அருகில் இருக்கும் போது
மணி முள் நிமிட முள்ளின் / வேகத்தில்
நகர்கின்றது"[4]

காதலர்கள் அருகில் இருக்கும் போது நிமிடங்கள் கூட வருடங்களாய், வருடங்கள் நிமிடங்களாய் மாறுவது காதலின் இயல்பு. அதைச் சுட்டிக் காட்டும் விதமாகத்தான் மேற்காணும் கவிதை அமைகிறது.

காதலிக்காக காதலனும் காதலனுக்காக காதலியும் காத்திருப்பதே தனி சுகம்தான். அதை சொல்லும் விதமாகத்தான்.

"வாசலிலேயே
கால்கள் வேர்விடுமளவு காத்திருந்தாள்"[5]

என்கிறார் இறையன்பு. அவர்கள் இருவரின் அன்பும் ஆழமானது. காதல் உணர்வு அனைத்து உயிர்களிலும் உண்டு. பாரதி கூட,

"காதல் காதல் காதல் / காதல் போயிற் காதல்
போயிற் / சாதல் சாதல் சாதல்"[6]

காதல் இன்றி உலகில் எதுவும் இயங்காது என்று பாடுகிறார்.

"கண்களை மூடும் போது / தோன்றும் அவள் முகம்
அவன் இதயத்தில் / காதல் விதை /
வேரூன்றி விட்டது / என்பதைத் தான் /
முரசறைந்து முழக்குகிறதே"[7]

எனும் கவிதையில் கண்களை மூடும்போது கூட அவளின் முகம் வட்டமிட்டது. இது காதலின் ஆரம்பம் என்கிறார் கவிஞர்.

"விரும்பிய / பெண்ணைச் சந்திக்கும் வரை /
அவள் / உலகத்தில் இருக்கிறாள் /
பழகிய பின்போ / அவளே /
உலகமாய் ஆகிப்போகிறாள்"[8]

எனும் கவிதையில் காதலுக்கு பின் காதலியே உலகமாக தோன்றுகிறாள் என்று கவிஞர் தம் கருத்தை பதிவிடுகிறார்.

"காதல் தன்னைத் தேடும் முயற்சி /
தேடுவதற்காகவே / தொலைந்து போகும்
பயிற்சி"[9]

எனும் கவிதையில் கவித்துவம் மிளிர்கிறது. தன்னைத் தேட வேண்டும் என்பதற்காகவே இருவரும் தனிந்தனியாக காதலில் தொலைகிறார்கள். எதேச்சையாகத் தொலையவில்லை, வேண்டுமென்றே திட்டமிட்டே தொலைகிறார்கள். இதில்தான் வெற்றியும் அடைகிறார்கள். காதலைப் பற்றிய இறையன்புவின் ரசனை வித்தியாசமானது.

"புதைகுழி என நினைத்த வாழ்வு
புதையல் குழியான மகிழ்வு.
------ / ---- / ----
அவள் முகமே / 'வலம்' வர / அவன் மனமே
'கிரி' யானது"[10]

எனும் கவிதையில் காதலைப் புதையலுக்கு இணையாக்குகிறார். காதலித்துப் பார் புதையல் கிடைக்கும் என்பதுப் போல் உள்ளது. பக்திக்காக மக்கள் கிரி வலம் வருவது வழக்கம். இங்கோ தலைவனின் மனம் மலையாக தலைவனின் முகம் சுற்றி வருகிறது.

காதலன் காதலைச் சொல்ல காதலி மறுத்துவிட்டால் காதல் தேர்வில் தோல்வியடைந்து விடுவோமா என்று பயந்து தேர்வு எழுதாமலே காதலை மறைத்துக்கொண்டு நிற்கிறான் காதலன் என்று கவிஞர் இவ்விடத்தில் நேர்த்தியாக இயம்புகிறார்.

"நிராகரிப்பால் நிகழும் / நிராசை
மிகப்பெரிய அவமானவல்லவா?
இதயத்தில் ஊடுருவிய அம்பாய்
அது வாழ்நாள் முழுதும் வலிக்குமே
அடைக்காக்கும் காதல்
நிறைவேறாத நேசத்திலும் வலிக்குமே
புனிதமானதாயிற்றே
மடியிலிருக்கும் பாலாய்
அவன் கனவுகள் காத்திருந்தன"[11]

'செம்புலப் பெயல்நீர் போல் அன்புடை நெஞ்சம் தாமாகக் கலந்த' காலமெல்லாம் இக்கவிதை மலையேறி-விட்டது! காதல் கடிதங்களைக் கணக்கின்றிப் பகிர்ந்து கொண்டவர்களே தன் கல்யாணப் பத்திரிக்கையும் பரிமாறிக் கொள்ளும் கலிகாலமே இன்று நடந்து வருகிறது! என்பதை சொல்வதாகக் கவிஞர்

"இன்றைய இளைஞர்கள் / நடைமுறை
வாழக்கையைப் / புரிந்துகொண்டவர்கள்
ஆதலால்தான் / காதல் கடிங்களைப்
பகிர்ந்துகொண்டவர்கள் / கல்யாணப்
பத்திகையையும் / பரிமாறிக் கொள்கிறார்கள்"[12]

இதில் இன்னொரு அம்சமும் உண்டு. இருவரும் ஒருவரையொருவர் அதிகம் நேசிப்பதால் சூழல் காரணமாக பிரிய நேரிடுகிற போது அதற்காக காதலைச் கூட துறக்கத் துணிகிறார்கள் என்று கூட எடுத்துக்கொள்ளலாம்.

'காதலைப் பாடாத கவிஞன் இல்லை: காதலைப் பாடாதான் கவிஞன் இல்லை' என்பார்கள். இக்கூற்று இறையன்புக்கும் பொருந்துவதாகவே உள்ளது. சமூக அவலங்களைச் சுட்டும் போது வல்லினமாக இயங்கும் இறையன்பு, காதலை பாடும்போது மெல்லினமாக மாறிவிடுகிறார்: கற்பனையும் முருகிலும் கைகோர்த்துச் செல்லும் வண்ணம் கவிதை படைக்கின்றார்.

“கண்ணே / உன்விழிகளோ / மீன்கள் / இதழ்களோ / பவளங்கள் / பற்களோ / முத்துகள் / கழுத்தோ /சங்கு / கூந்தலோ / அலைகள் / எனக்கொரு / சந்தேகம் / உன்னை உன் / பெற்றோர்/ கடற்கரையோரம் கண்டெடுத்தார்களா / என்ன?”[13]

‘மாசறு பொன்னே, வலம்புரி முததே’ என்று சிலப்பதிகாரத்தில் காதல் மொழி பேசிய கோவலனின் மறுபதிப்பாக விளங்குகிறான் இக்கவிதையில் வரும் காதலன்.

“உனது பெயரை / மீண்டும் மீண்டும் /
உச்சரித்த பொழுதுதான் / இனிப்புக்கு இன்னொரு
அர்த்தம் / இருப்பதையே /
எனது நா உணர்ந்துகொண்டது.”[14]

எனும் கவிதையில் காதல் இனிமையானது. ஆதை உணர்வுபூர்வமாக உணர்ந்தால்தான் தெரியும் என்கிறார் கவிஞர். காதல் என்பது ஒரு மனிதனுக்கு ஆழமான இனிமையான ஆனந்தமான உணர்வாக இருக்கிறது. இந்த உணர்வை ஏதோ ஓர் காரணம் தூண்டிவிடுகிறது. அது கவிதையாக இருக்லாம். கல்வியாக இருக்கலாம். கனிந்து ததும்பிப் பொங்கும் அன்பாக இருக்கலாம். இறையன்புவின் கவிதைகள் காதலுக்கும் காமத்திற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்து இயம்புகிறது.கலலூரிக் கனவுகள் சிதைந்து போகாமல் மாணவச் செல்வங்களைக் காப்பாற்றி உண்மைக்காதல் எதுவென உரைக்கிறது.

**மேற்கோள் விளக்கம்**




1. மலரும் மாலையும், கவிமணி ப.7
2. பாரதியார், பாரதியின் கவிதைகள் , ப.126
3. வைகை மீன்கள், இறையன்பு.வெ, அணிந்துரையில் சிற்பிபாலசுப்பிரமணியம்
4. மேலது பக்கம் (அணிந்துரை)
5. மேலது பக்கம் (அணிந்துரை)
6. பாரதியார் ,பாரதியின் கவிதைகள் , ப.26
7. வாய்க்கால் மீன்கள், இறையன்பு. வெ, ப.50
8. வாய்க்கால் மீன்கள், இறையன்பு. வெ, ப.56
9. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ, ப. 141
10. மேலது, ப. 113
11. வைகை மீன்கள், இறையன்பு.வெ, ப. 49
12. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், இறையன்பு . வெ, ப.88
13. மேலது, ப.1
14. மேலது. ப.13

**துணைநூற்பட்டியல்**


1. வைகை மீன்கள், இறையன்பு.வெ, விஜியா பதிப்பகம், 20, ராஜ வீதி, கோயம்புத்தூர் -641001 (முதற்பதிப்பு) செப்டம்பர்2020.
2. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ, நியூ சென்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை ரூ 600 098, ஒன்பதாம் பதிப்பு: ஆகஸ்ட், 2017
3. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், இறையன்பு.வெ, நியூ சென்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை ரூ 600 098, ஏழாம் பதிப்பு: ஜனவரி,2016.
4. பாரதியார் கவிதைகள், பாரதியார், சுதர்ஸன் பதிப்பகம், எண்:17,ஜே.கே.காம்ப்ளக்ஸ், எண்: 13 முதல் மாடி, ராமநாதன் தெரு, தி.நகர்.சென்னை -600 017, கைபேசி: 90031 22315. தொகுத்தவர்: விருகை பிச்சுமணி.


●


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**மார்ச் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 174 | 3455 | 4860 | 4872 | 5563 | 6918 | 6930 | 6942 |
| 175 | 3459 | 4861 | 5551 | 5564 | 6919 | 6931 | 6943 |
| 180 | 3465 | 4862 | 5552 | 6905 | 6920 | 6932 | 6944 |
| 2887 | 4329 | 4863 | 5553 | 6909 | 6921 | 6933 | 6945 |
| 2888 | 4331 | 4864 | 5554 | 6910 | 6922 | 6934 | 6946 |
| 2888 | 4386 | 4865 | 5555 | 6911 | 6923 | 6935 | 6947 |
| 2889 | 4387 | 4866 | 5556 | 6912 | 6924 | 6936 | 6948 |
| 2890 | 4388 | 4867 | 5557 | 6913 | 6925 | 6937 | 6949 |
| 2891 | 4389 | 4868 | 5558 | 6914 | 6926 | 6938 | 6950 |
| 2892 | 4587 | 4869 | 5559 | 6915 | 6927 | 6939 | 7593 |
| 2893 | 4712 | 4870 | 5560 | 6916 | 6928 | 6940 | 7594 |
| 3454 | 4713 | 4871 | 5561 | 6917 | 6929 | 6941 | 7595 |
| | | | | | | | 1858 |

தனி இதழ் ₹ 30.00,
ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00,
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*



# மொழிமுதல் யகரமும் தொழுனையும்

ஆ. கார்த்திகேயன்

*1* "ஆவோடல்லது யகரம் முதலாது" என்பது தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் வரும் சூத்திரம் *(மொழிமரபு-65)*. யகர மெய் ஆ என்னும் ஓர் உயிர் எழுத்துடன் மட்டுமே கூடி மொழிக்கு முதலாகும் என்பது இச்சூத்திரத்தின் பொருள்.இச்சூத்திரத்திற்கு எடுத்துக்காட்டாக, பழந்தமிழில் பல சொற்கள் கிடைக்கின்றன. அவை:யான், யார், யாடு, யானை, யாமை, யாது, யாண்டு, யாக்கை, யாழ், யாறு, யாணர், யா, யாப்பு முதலியவை. 'யா' என்ற ஓரெழுத்து ஒரு சொல் *(மரத்தைக் குறிக்கும்)* தொல்காப்பியத்தில் வந்துள்ளது. 'யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்' என்ற இச்சூத்திரம் உயிர் மயங்கியலில் வருகிறது. யாணர் என்பதும் பழந்தமிழுக்கே உரிய சொல். யானை, யார், யாழ் ஆகிய சொற்கள் தான் இன்றைய தமிழில் புழக்கத்தில் உள்ளன.

இந்தச் சூத்திரத்திற்கு விதி விலக்காக யவனர், யூபம் போன்ற சொற்கள் பழந்தமிழில் வந்துள்ளன. யூபம் ஒரு பாலி மொழிச் சொல். வேள்வித்தூண் என்பது அதற்குப் பொருள்.யவனர் என்பதும் கடன் சொல்தான். பொதுவாக, கடன் சொற்கள் தாய்மொழி இலக்கண விதிகளுக்குக் கட்டுப்படாது என்பர். நச்சினார்க்கினியரும் "யவனர்-யுத்தி-யூபம்-யோகம்-யௌவனம் என்பன வடசொல் என மறுக்க" என்று மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவிற்கு அமைதி கூறுகிறார்.

*1.1* ஆனால் தொடக்கத்திலிருந்தே ஆகாரத்துடன் கூடிய யகரமெய் தவிர்க்கப்படுவதையும் ஆங்காங்கே காணமுடிகிறது. இடைக்கால இலக்கியங்களில் யா-வில் தொடங்கும் பழைய சொற்களில் யகரம் மறைகிறது. *(செ.வை.சண்முகம் 1974)*

| | | |
|---|---|---|
| யாண்டு | > | ஆண்டு |
| யாடு | > | ஆடு |
| யார் | > | ஆர் |
| யானை | > | ஆனை |
| யாக்கை | > | ஆக்கை |
| யாப்பு | > | ஆப்பு |
| யாறு | > | ஆறு |
| யாது | > | இது |

"ஆதும் அவன் அன்றி மற்று இல்லையே" *(நா.தி.பிரபந்தம்-3566)* என்ற பாடல் வரியில் யாது என்பது ஆது என்று மாறியுள்ளது. இது புதுமையாக உள்ளது. யான், யாம் தன்மையில் வரும் ஒருமை,பன்மை சொற்கள் கூட பின்னாளில் நான், நாம் என்றாகிறது. இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்? ஆவோடு வரும் யகர மெய்யெழுத்து வழக்கொழிய வேறு மொழித் தொடர்பு காரணமாக இருக்கலாமா? அல்லது தனி வளர்ச்சியா?

*1.2* பிராகிருத மொழியில் மொழிமுதல் யகரம் வராது. அதாவது சமஸ்கிருத மொழிமுதல் யகரம் பிராகிருத மொழியில் ஜகரமாக மாறி விடும்.*(y > j)*.

| | | |
|---|---|---|
| யௌவனம் | > | ஜொவ்வணம் |
| யம | > | ஜம |
| யாம | > | ஜாம |
| யக்ஷ. | > | ஜக்க |
| யெ. | >. | ஜெ. யார்' |
| யோகி. | > | ஜோகி |

பிராகிருத மொழியில் மொழி முதல் யகரம் திரிந்து ஜகரமாக வளர்ச்சி அடைகிறது; ஒருக்காலும் யகரம் மொழிமுதல் வராது. பக்தி இலக்கிய காலம் அதற்கு முன்பாக, பிராகிருத மொழியோடு தமிழுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. இதன் விளைவாக ஆவுடன் கூடிய மொழி முதல் யகரம் கெட்டிருக்கலாம். யகரத்தில் தொடங்கும் வடசொற்கள் எவ்வாறு தமிழாக்கப் பட்டன என்று இனி காணலாம். முதலாவதாக 'யம' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம்.

**2. யம. > நமன், எமன், இயமன், ஞமன்**

தற்காலத் தமிழில் எமன் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். எமதர்மன், எமலோகம் போன்ற சொற்கள் இப்போது பிரபலம். பழந்தமிழில் கூற்று, கூற்றுவன் ஆகிய சொற்கள் வர, இடைக்காலத்தில் இது 'நமன்' என்று வழங்கிற்று. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று அப்பர் தேவாரத்தில் வந்துள்ளது. மொழிமுதல் யகரம் தவிர்க்க யகரம் நகரமாக மாறியது. நமன் மட்டுமன்றி 'ஞமன்' என்ற சொல்லும் இடைக்காலத்தில் வழக்கில் இருந்துள்ளது. "இயக்கர் கின்னரர் ஞமனொடு வருணர்" என வரும் சுந்தரர் (7.55.6) தேவார வரிகளால் இதனை அறிந்து கொள்ளலாம். நவும் ஞவும் உழற்சியாக இடைக்காலத்தில் வருகிறது. ஞான்றே என்பது நான்றே என்றும் வருகிறது.இயமன் என்றொரு சொல்லும் அகராதிகளில் காணமுடிகிறது.

**3. ஓசனித்தல். < யோசனா**

சிலம்பில் ஊர்காண் காதையில் (124-125) 'ஓசனிக்கின்ற' என்ற சொல் வருகிறது. அச்சொல் வருகிற பாடல் வரிகள்: "வேனில்வேந்தன் வேற்றுப்புலம் படர ஓசனிக்கின்ற வுறுவெ-யிற் கடைநாள்" .இதற்குப் பொருள் கூறும் அரும்பதவுரைக்காரர் 'வெக்கையால் தலையெடுத்தல்' என்று பொருள் காண்கிறார். அடியார்க்கு நல்லாரோ, "வேனிலரசன் தனக்குப் புகலிடமாகிய வேற்றுப் புலன்களிற் சேறற்கு முயலாநின்ற கடைநாளிலென்க" என்று பொருள் காண்கிறார். ஓசனித்தல் என்ற சொல் 'ஓசண' (முடிவில்) என்ற பிராகிருத சொல்லிலிருந்து வந்தது என்று கொள்ளப்படுகிறது. அவஸான என்ற சமஸ்கிருதச் சொல் இதற்கு மூலம் என்பர். தற்கால மலையாளத்திலும் அவஸானம் -முடிவில் என்ற பொருளில்- என்ற சொல் உள்ளது. சிலம்பின் பாடல் வரிகளில் கடைநாள் என்ற சொல்லும் வருவதால் ஓசனித்தல் என்ற சொல்லை வேறுவிதமாகப் பார்க்கலாம்.ஓசனை என்ற சொல் நாற்காதம் என்ற பொருளில் சீவக சிந்தாமணியில் வந்துள்ளது.

யோசி, யோசனை என்ற சொற்கள் ஓசி,ஓசனை என்று பேச்சுத் தமிழில் மாறுவதைக் காண்கிறோம்.யோசனையில் மொழி முதல் யகரம் கெடுகிறது.

பிறகு ஓசனை என்ற பெயர் ஓசனித்தல் என்ற வினை யாயிற்று.பூசை திருக்குறளில் பூசனை என்று வருவதை ஒப்பிடலாம். யோஜனா என்பதே ஓசனி என்று மாற்றம் அடைந்தது.

**4. யாமம்: > யாமம், சாமம்**

யாமம் என்ற சொல் குறுந்தொகையில்" நள்ளன் றன்றே யாமம்" எனக் கையாளப்பட்டுள்ளது (.பாடல்-6) "யாமம் நீ துஞ்சலை மன்"(கலி) "வைகறை யாமம் துயில் எழுந்து" என்று ஆசாரக்கோவையிலும் யாமம் வருகிறது."வான்கண் விழியா வைகறை யாமத்து" என சிலப்பதிகாரத்தில் (நாடுகாண்-1) யாமம் வந்துள்ளது.யாமம், யாமத்து போன்றவை சங்கத் தமிழில் ஏராளமாகப் பயன்படுத்தப் படுகிறது. நள்ளிரவு என்று பொருள் படும் யாமம் வடசொல்லே. பிராகிருத மொழியில் ஜாம என்று தான் வரும். தமிழில் கோவில்களில் நடைபெறும் பூசைகளில் அர்த்த ஜாம பூசை என்றொரு வகை உண்டு. ஜாமம் சாமம் என்றும் மாறும். சாமக்கோழி இரவில் கூவும் கோழியாகும். சாமம் பிராகிருத சொல்லே.

**5. ஓசனை - நில அளவை, தூரம்**

யோஜனா என்ற இன்னொரு சமஸ்கிருதச் சொல் ஒரு குறிப்பிட்ட தூரத்தை, நில அளவை குறிக்கும் சொல்.

பரிபாடலில் இதே பொருளில் இச்சொல் பயன்படுத்தப் படுகிறது. பெண்கள் வையை யாற்றைக் காணச் செல்லும் வண்ணனை வருமிடத்தில்,"ஓசனை கமழும் வாச மேனியர்மடமா மிசையோர் பிடிமேல் அன்னப் பெரும்படை அனையோர்" பரி-12:25) என்ற வரி வந்துள்ளது. பெண்கள் ஒரு யோசனை(தூரம்) நாறும் வாசனை தடவியர்களாயும் குதிரைகள் மீதும் யானைகள் மீதும் இவர்ந்து அன்னப் பேடைகள் போல் சென்றனர்.இங்கும் மொழி முதல் யகரம் கெடுகிறது. யோசனை > ஓசனை என்றாகிறது.

**6. யுக > நுகம்**

பழந்தமிழில் வரும் 'நுகம்' என்ற சொல் மிகவும் தெரிந்த சொல். இக்காலத்திலும் வழக்கில் உள்ளது. மாட்டு வண்டியின் பாகங்களில் நுகத்தடி உண்டு. காளையின் கழுத்தில் பூட்டப்படும் மரம் என்பது

பொருள். இச்சொல் "எருதே இளைய நுகம் உணராவே" என்று புறநானூற்றில் வந்துள்ளது. பொகுட்டெழினி குறித்து அவ்வையார் பாடியது. இளைய வீரர்களின் வலிமையை உணர்த்த உவமை பயன்படுத்தப்பட்டது. காளைகள் இளையவை.அவை வலிமையானவை. அவற்றிற்குப் பாரம் தெரியாது."தெவ்வர் தேஎ நுகம்படக் கடந்து" என்று மலைபடுகடாத்திலும் வருகிறது. அதுமட்டுமின்றி, குறுந்தொகையிலும் "வெம்போர் நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி" (குறுந்தொகை-80-4) நுகம் என்ற சொல் பயின்று வந்தது. யுக என்ற சொல்லில் மொழிமுதல் யகரம் நகரமாகத் திரிந்தது. (yuga > nukam)

**7. யக்ஷி > இயக்கி, ஜக்கம்மா**

தென் தமிழகத்தில் இசக்கி அம்மன் வழிபாடு இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. இசக்கி என்ற இச்சொல் இயக்கி என்ற சொல்லிலிருந்து வந்தது என்பர்.இயக்கி என்ற எங்கிருந்து வந்தது? இச்சொல் சிலப்பதிகாரத்தில் வருகிறது. அடைக்கலக்காதையில் "புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்/பால்மடை கொடுத்துப் பண்பின் பெயர்வோள்"( 115-117).மாதரி மூதூரின்கண் கோவிலில் உள்ள அருட்பார்வையுடைய இயக்கிக்குப் பாற்சோறு படைத்துவிட்டு வந்து கொண்டிருந்தாள் என்பது பாடல் வரிகளின் பொருள். சமண சமய தீர்த்தங்கரர்கட்கு உதவி செய்ய யக்ஷ,யக்ஷி போன்ற தேவதைகள் இருந்தனர் (சிலம்பு : உவேசா பதிப்பு.)

இயக்கர் என்ற சொல் தேவாரம் போன்ற பக்திப் பாடல்களிலும் தொடர்ந்து பயன்படுத்தப் பட்டது. "இயக்கர் கின்னரர் ஞமனொடு வருணர்" ஆகியோர் சிவனை வழிபட்டதாக சுந்தரர் பாடினார் (7.55.6).

யக்ஷ என்ற சொல் பிராகிருத மொழியில் ஜக்க என்று மாற்றம் அடையும் என்று மேலே குறிப்பிட்டோம்.ஜக்கம்மா என்பது 'தொட்டியர் வணங்கும் ஒரு சிறுதேவதை' என்று சென்னைப் பல்கலைக் கழக அகராதி குறிப்பிடும். ஜக்கம்மா, ஜக்கையன் போன்ற பெயர்கள் பிராகிருதச் சொல்லோடு தொடர்புடையவை. yaksha > jakkha இது பிராகிருத இலக்கண விதி. ஆனால் தமிழில் (yaksha > iyakka-an) என்றாகிறது. இயக்கி சிலப்பதிகாரத்திலேயே வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 8/).

**8. யசோதை > அசோதை**

யசோதா என்ற சமஸ்கிருதப் பெயர்ச் சொல்லின் மொழிமுதல் யகரம் கெட்டு அசோதை என்ற வடிவம் சிலப்பதிகாரத்தில் சில இடங்களில் காணப்படுகிறது. "ஆயர்பாடியின் அசோதை பெற்றெடுத்த/பூவைப் புதுமலர் வண்ணன் "கால்லோ" (கொலைக்களக் காதை :46-47) என்றும் அசோதைப் பிராட்டியார் தொழுதேத்த என்றும் ஆய்ச்சியர் குரவையிலும் வந்துள்ளது. நாலாயிரதிவ்விய பிரபந்தத்தில் கூட 'அசோதை' வருகிறது. "அஞ்சன வண்ணனைப் பாடிப்பற அசோதைதன் சிங்கத்தைப் பாடிப்பற"(311), கோதைக் குழலாள் அசோதைக்கு "(பெரியாழ்வார்- 23) அசோதையோடு யசோதையும் ஆழ்வார் பாசுரங்களில் பயில்கிறது. "ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ் சிங்கம்" (திருப்பாவை-1). தொடக்கத்தில் மொழிமுதல் கெடுகிறது. இடைக்காலத்தில் உறழ்ந்தும் வந்தது.

யாளி என்ற வடசொல்லும் ஆளி என்று மாறுகிறது.

**9. யமுனா > தொழுனை, ஜமுனா**

யமுனை என்ற சொல் கங்கை நதியின் ஓர் கிளை நதியைக் குறிக்கிறது.நமது தலைநகர் புதுதில்லி யமுனை ஆற்றின் கரையில் தான் அமைந்துள்ளது. ஆனால் அச்சொல்லுக்கு நீண்ட நெடிய வரலாறு இருப்பது நம்மில் பலருக்குத் தெரியாது. வட இந்தியாவில் தற்போது 'ஜமுனா' எனப் பேச்சில் அறியப்படுகிறது. இடைக்கால இலக்கியத்தில் யமுனை என்ற சொல்லாட்சி வந்துள்ளது. திருப்பாவையில் (திவ்விய) "தூயபெருநீர் யமுனைத் துறைவனை" என்ற வரியில் யமுனை வருகிறது. "யமுனைக் கரைக்கென்னை உய்த்திடுமின்" என்றும் ஆண்டாள் உருகிப் பாடுகிறார். சிலப்பதிகாரத்தில் யமுனை 'தொழுனை' என்று வருகிறது. தொழுதற்குரிய நதி என்பது போல பொருள்படும்படித் தொழுனை மாற்றம் அடைந்து விட்டது.சிலம்பில் வரும் வரிகள்: "தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை/ விழுமம் தீர்த்த விளக்கு கொல்"(கொலைக்களக் காதை-50,51). உணவருந்தும் கோவலன் யமுனை ஆற்றினுள் ஆயர் பாடி மக்களின் துயர் துடைத்த நீலமணி வண்ணனைப் போலவே இருக்கிறான் என்று ஐயை கூறுகிறாள். "தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை /அணிநிறம் பாடுகேம் யாம்" என்று ஆய்ச்சியர் குரவையிலும் (22-23) வருகிறது.

சிலப்பதிகாரத்திற்கு முன்பாகவே அகநானூற்றில்-(59) தொழுனை கையாளப்பட்டுள்ளது. "வடாஅது வண்புனல் தொழுனை வார்மணல் அகன்துறை/ அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்/ மரம் செல மிதித்த மாஅல் போல" என்று வருகிறது. யமுனை வடதிசையில் உள்ள ஆறு. வற்றாத நீர்வளம் உடையது. அகன்ற மணற்பரப்பைப் பெற்றது.அங்கு நீராடிக் கொண்டிருந்த ஆயர் மகளிரின் மானத்தைக் காக்க குருந்த மரத்தின் கிளையைத் தாழ்த்தி இலையை ஆடையாகத் திருமால் அளித்தாராம். மருதன் இளநாகனார் பாடிய இப்பாடலிலும் தொழுனை

வந்துள்ளது.

யமுனை > தொழுனை என்று தமிழ்ப்படுத்தப் பட்டுள்ளது. பிராகிருத மொழியில் யமுனை என்ற சொல் "ஜஉனா" என்று மாறுகிறது. இச்சொல்லே தொழுனை என்று தமிழ்ப்படுத்தப் பட்டிருக்கலாம். எமுனை என்ற சொல் கூட கிடைக்கிறது.

### 10. யந்த்ர (yantra) > எந்திரம்

யகரம் எகர உயிராகத் திரிவதை எத்தனம், எந்திரம் போன்ற தற்கால சொற்களில் காணமுடிகிறது. *(yatna > ettanam, yantra > enttiram)* இவற்றுள் எந்திரம் என்ற சொல் சங்கச் செய்யுள்களில் வந்துள்ளது.இது இச்சொல்லின் பழமையைக் காட்டுகிறது. "கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்" *(ஐங்குறுநூறு-55)* என்றும் "கரும்பின் எந்திரம் சிலைப்பின் அயலது/ இருஞ்சுவல் வாளை பிறழும்"*(புறம்-392)* என்றும் வருகிறது. யானைகள் தமது நீண்ட துதிக்கையால் எழுப்பிய ஓசையானது கரும்பு பிழியும் எந்திரங்கள் எழுப்பிய ஓசையினைப் போல இருந்தது என்றும் கரும்பு பிழியும் எந்திரத்தின் ஓசையைக் கேட்டுப் பக்கத்து வயலில் உள்ள வாளை மீன்கள் துள்ளிக் குதிக்கும் என்றும் முறையே பொருள்படும்.

### 11. யஜுர் > எசுர்

நான்கு வேதங்களில் யஜுர் வேதமும் ஒன்று. நான்மறை என்ற தொகை பழந்தமிழில் வந்தாலும் யஜுர் என்ற சொல் வரவில்லை. இடைக்காலத்தில் யஜுர் >எசுர் என்று வழங்கிற்று. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் எசுர் என்ற சொல்லாட்சி உள்ளது. "இருக்கு எசுச் சாம வேத நாண்மலர் கொண்டு உன் பாதம் நண்ணாநாள்" *( நா.தி.பிரபந்தம்:4388)*

பிராகிருத மொழியில் மொழிமுதல் யகரம் நிலை பெறவில்லை. அங்கே யகரம் ஜகரமாக மாறுகிறது. இது ஓர் ஒழுங்கான *(regular)* வளர்ச்சி. பழந்தமிழில் மொழி முதல் யகரம் ஆகார உயிருடன் கூடி மட்டுமே வந்தது. இடைக்காலத்தில் அச்சொற்களிலும் யகரம் கெடுகிறது. மேலும் வடமொழியில் இருந்து வந்த சொற்கள் பல காலகட்டங்களில் பலவிதமாகத் தமிழ் படுத்தப்பட்டன. சாமம், ஜக்கம்மா, ஜக்கையன் போன்றவை பிராகிருத வழி வந்தவை.யகரம் கெட்டு அகரமாவதை அசோதை, ஆளி ஆகிய சொற்களில் காணமுடிகிறது. யமன் என்ற சொல் இயமன், எமன், ஞமன், நமன் என்றெல்லாம் மாறி வந்துள்ளது.சில சொற்களில் இ- முதலில் சேர்க்கப் படுகிறது.(இயக்கி, இயந்திரம்). இசக்கி, இசக்கியம்மன் ஆகியவை தென் தமிழகத்தில் தற்போதும் பழகுகின்றன. யகரம் மூக்கொலியாகத் திரிவதனையும் காண்கிறோம். நுகம். நமன், ஞமன் ஆகியவற்றில் இதைப் பார்க்கலாம். யமுனை தொழுனையாகத் தமிழ்ப்படுத்தப்பட்டது எப்படி என்பது மேலும் ஆராயத்தக்கது.


●



10.03.22 அன்று குமரி மாவட்டம் குளச்சலில் தேசிய புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. இதில் மாண்புமிகு நீதியரசர் ஜெய்சங்கர், சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் இசக்கிமுத்து, எழுத்தாளர் அ.கா.பெருமாள், குறும்பனை சி.பெர்லின், கோட்டூர் மனோஜ், என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கட்டுரை

# மதம் என்ற நிறுவனம் குறித்து சுயமரியாதை இயக்கத்தினரின் பார்வை



முனைவர். ச.ஜீவானந்தம்

மனிதன் பரிணாம வளர்ச்சியின் உச்சத்தினை எட்டிய காலம் தொட்டு மதம் என்ற நிறுவனமானது மானிட கலாச்சாரத்துடன் இரண்டறக் கலந்து வந்துள்ளது என்பதனை வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. விடையறியா பல கேள்விகளுக்கான தற்காலிக விடையாய் மனிதர்க்கு அமைந்தது கடவுள் என்ற கற்பிதமும், மதம் என்ற நிறுவனமும் அதன் மூலம் நிலை நிறுத்தப்படும் நம்பிக்கைகளுமே ஆகும். நிறுவனமயமாக்கப்பட்ட மதங்கள் பொதுவாகவே சமூகத்தின் ஆதிக்க அதிகார வர்க்கத்தின் கொள்கைகளுக்கும், சிந்தனைகளுக்கும் எதார்த்த வடிவம் கொடுப்பதாகவே அமைந்துள்ளன. இந்த வகையினில் மானுட சமூக விடுதலையினைக் குறித்த விடயங்களை பகுத்தறிவுடன் அணுகிய சுயமரியாதைக்காரர்கள் மதம் என்ற நிறுவனத்தினை எவ்வாறு அணுகினர் என்று இக்கட்டுரை விவாதிக்க முற்படுகின்றது.

**மதம் குறித்த சுயமரியாதை இயக்கத்தினரின் பார்வை**

மதங்களே பெரும்பாலான சமூகத் தீமைகளின் ஊற்றுக்கண் என்றும் (குடி அரசு. 04.09.1927; குடி அரசு. 28.06.1931.), சமூகத்தின் அனைத்துவித தீமைகளும் மதத்தின் பெயராலே இந்தியச் சமுதாயத்தில் நடைபெற்று வருகின்றன என்றும் சுயமரியாதை இயக்கத்தினர் கருதினர். (குடி அரசு. 04.09.1927.) அதேபோல், இந்தியாவிலுள்ள அனைத்துவித பரிதாபகரமான நிகழ்வுகளின் மூலம் என்பது மதம் என்ற நிறுவனத்திலேயே உள்ளது என்ற சுயமரியாதைக்காரர்கள் (குடி அரசு. 24.11.1929.), சமூகத்தினில் மதச் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வந்தனர். (குடி அரசு. 04.09.1927.) தந்தை பெரியார் அவர்கள் மத அடிப்படைவாத உணர்வுகளே அனைத்துவித சமூகத் தீமைகளுக்கும் மூல காரணம் என்றதுடன், சமுதாய நலன்களைக்

கருதி கடவுளைப் பற்றியும், மதங்களைப் பற்றியும் அவற்றிலுள்ள குற்றங்களைப் பற்றியும் மக்களிடம் விளக்க வேண்டும் என்றார். (விடுதலை. *24.10.1948.*)

தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுகையில் அரசியலில் உள்ள சமூகத் தீமைகளை ஒழிக்க கடுமையாக உழைக்கின்றோம். ஆனால், சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளை ஒழிக்க திட்டமிடுகையில், அது பயனற்றதாகவே உள்ளது. ஏனெனில் மதக் கோட்பாடுளே அத்தகைய கொடுமைகளுக்கு எல்லாம் ஆதாரமாக உள்ளன என்றார். (குடி அரசு. *23.10.1927.*) அரசியல் சம்பந்தமான கூட்டங்களில் அரசியலைப்பற்றி விவாதிக்கின்ற பொழுது, சமுதாயம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில், சமுதாயத்தின் குற்றங்களைப் பற்றி விரிவாக விவாதித்து அவற்றினை சமூகத்தில் இருந்து நீக்கிட வழிவகைகளைச் செய்திட வேண்டும் என்றார் தந்தை பெரியார் அவர்கள். (விடுதலை. *24.10.1948.*)

**மாற்றம் என்பதே காலத்தின் நிசர்சனம்**

முன்னோர்கள் கூறியது என்றோ, முன்னோர்கள் செய்தது என்றோ எதையும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவசியம் இல்லை. உதாரணத்திற்கு, நெருப்பு என்பது என்னவென்று தெரியாத காலத்தில் சிக்கிமுக்கிக் கற்களால் நெருப்பை உண்டாக்கிய மனிதர்கள் 'அந்தக் காலத்துக் கடவுளாகவும்' 'எடிசன்களாகவும்' இருந்திருக்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட அறிவியலைவிட மேலானதொரு தொழில் நுட்பமான தீப்பெட்டி வந்தபிறகு சிக்கிமுக்கிக் கற்களின் தேவைகள் என்பது அவசியமற்று போகின்றன. ஆனால் இன்றும் நெருப்பினை உருவாக்க அத்தகைய கற்களைத் தேடுபவர்கள் முட்டாள்கள் என்றே இந்த உலகம் கருதும். அறிவு என்பது காலத்திற்கு ஏற்றவாறாகத் தான் இருக்கும். அதுபோல், ஒரு காலத்தில் எது பெருமையாகக் கருதப்பட்டதோ, அதையே எக்காலங்களிலும் பெருமையாகப் பேசமுடியாது என்ற தந்தை பெரியார் அவர்கள், மாற்றங்களின் மீது தீராத பற்றினைக் கொண்டிருந்தார். (விடுதலை. *24.10.1948.*)

மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்து, மனிதர்களை மனிதர்களாக மதித்து நடத்துவதுதான் மதமாக இருக்க வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்கள் (குடி அரசு. *05.06.1948.*), மதமும் கடவுள் நம்பிக்கையும் மனித சமூகத்தின் வளர்ச்சியினைப் பெரிதும் தடுத்து நிறுத்துகின்றவைகள் என்றார். (விடுதலை. *28.06.1973.*) அறிவுள்ள, நாகரிகமுள்ள மக்களுக்குண்டான அழகு என்பது எவ்வளவு விரைவாக மூட நம்பிக்கைகளிலிருந்து விடுபடுகிறோம் என்பதேயாகும். (விடுதலை. *24.10.1948.*) ஒருவருக்கு ஒரு காரியம் சரியென்று பட்டால், அது சாத்திர சம்மதமா, விரோதமா என்று எதிர்பார்ப்பது அறியாமையும், அடிமைத்தனமும் ஆகும். எந்தக் காலத்திலோ, எங்கிருந்தோ, யாராலோ, எதற்காகவோ, யாருக்கோ எழுதிய ஒரு புத்தகத்தை, இந்தக் காலத்திற்கு, மக்களின் நன்மையில் கவலை கொண்டவர்களால் எழுதப்பட்டது என்றும், அதன்படி நடந்துதான் தீர வேண்டும் என்றும், கருதுகின்றவர்கள் மனிதர்கள் அல்லர் என்பதுதான் தனது மாற்றமுடியாத உறுதியான அபிப்பிராயம் என்றார் தந்தை பெரியார். (குடி அரசு. *27.10.1929.*)

**மனித இயற்கைக்கு எதிரானதே மதங்களாகும்**

மனித இயற்கைக்கு எதிரான மதங்களும் கண்மூடிக் கொள்கைகளும் மண்மூடிப்போக வேண்டும் என்ற சுயமரியாதை இயக்கத்தினர் (குடி அரசு. *23.09.1928.*), இயற்கை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களும், முறைகளும் சரிவர நடைபெறாது என்றும், எங்காவது நடைபெற்றாலும் நிலைத்திருக்க முடியாது என்றனர். (குடி அரசு. *28.09.1930.*) சமூக சீர்திருத்த விடயங்களில் பொது மக்களின் விருப்பத்தினை கண்டு யாரும் பயப்படக் கூடாது என்ற தந்தை பெரியார் அவர்கள் (குடி அரசு. *28.09.1930.*), விவாகரத்து போன்ற முயற்சிகளுக்கு யார் எதிராக இருந்தபோதிலும் அதற்கு ஒரு சிறிதும் இலட்சியம் செய்யாமல், அதற்கு இடையூறான மதங்களையும், ஆதாரமான கடவுள்களையும் ஒழித்தாக வேண்டும் என்றார். (குடி அரசு. *23.09.1928.*)

நடைமுறையில் இருந்து வரும் கடவுளும், மதமும், சாத்திரமும், சட்டமும் அவற்றின் வழிவந்த பழக்கவழக்கங்களும் சாதாரண மக்களை இழிவுபடுத்தவும், அடிமைப்படுத்தவும் ஆரியர்களால்/பார்ப்பனிய கருத்துக்களால் உண்டாக்கப்பட்டவையாகும். மானமுள்ள ஒரு சிலராவது இம்மாதிரி மூடநம்பிக்கைகளை ஒழித்து சீர்திருத்தக் காரியங்களைச் செய்ய முன்வரவேண்டும். இவ்வாறு பயனற்ற காரியங்களை விட்டொழித்துப் பயனுள்ள முற்போக்கான காரியங்களைச் செய்தல் என்பது சமூகத்தின் அவசியம் என்ற தந்தை பெரியார் அவர்கள் (விடுதலை. *24.10.1948.*), திராவிட மக்களுக்கு ஒழுக்கம் வேண்டுமானால், மனிதத் தன்மை பெற வேண்டுமானால், சாத்திர புராண சம்பிரதாயங்களிலும், மதங்களிலும், உள்ள பற்றுதலையும், பக்தியையும் உடனே விட்டொழிக்க வேண்டும் என்றார். (விடுதலை. *24.10.1948.*)

கடவுளர்கள் மக்களை பாதுகாக்க வேண்டுமா, அல்லது மக்கள் கடவுளரை பாதுகாக்க வேண்டுமா என்ற தந்தை பெரியார் அவர்கள், கடவுளர் என்பவர்கள் எல்லாம் மக்களை அன்பின்வயம் கொள்ளச் செய்யவே வேண்டும் என்றும், அதற்காகவே இந்த உலகத்தில் மதங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். (குடி அரசு. *18.09.1927.*) ஆனால், சனாதன 'இந்து' மதமோ இந்த வகைகளில் எல்லாம் மாறுபட்டு, மனிதர்களை அடிமைகளாக்கவே செய்கின்றது. இப்படி எல்லா வகையான அடக்குமுறைகளும் மதத்தின் பெயரால் ஏற்படுமாயின் அத்தகைய மதத்தினை நாம் அழிக்க

வேண்டும் என்று தந்தை பெரியார் குறிப்பிடுகிறார். *(குடி அரசு. 15.04.1928.)*

### மதமும், ஒழுக்கமும்

அதுமட்டுமல்லாமல், சனாதன 'இந்து' மதக் கடவுளர்களின் தொன்மங்களானது விஷமம் நிறைந்ததாகவும், (mischievous activities) விபச்சாரத்தினை சமூகத்தினில் ஊக்கப்படுத்துவதாகவும் இருந்து வருகிறது. *(குடி அரசு. 24.02.1929; விடுதலை. 24.10.1948.)* பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்ட சனாதன 'இந்து' மதத்தில் உள்ள தெய்வங்கள் எல்லாம் பொதுவாகவே தீய செயல்களுக்கான அடையாளங்களாகவே இருந்து வருகின்றன. *(குடி அரசு. 04.09.1927.)* சனாதன 'இந்து' மதக் கடவுளர்கள் சூதாட்டம், துரோகம், வஞ்சகம், திருட்டு, ஏமாற்று, விபச்சாரம், கொலை, கொள்ளை, மற்றும் சித்திரவதை போன்ற பல சமூகத் தீமைகளுக்கு வழிகாட்டும் காரணிகளாக பகுதியாகவோ அல்லது முற்றிலுமாகவோ உள்ளன. அவ்வாறு இருப்பின் அக்கடவுளர்கள் எப்படி மக்களுக்கு ஒழுக்கமான வாழ்வினை போதிக்க முடியும் என்ற வினாவினை தந்தை பெரியார் எழுப்பினார். *(குடி அரசு. 04.09.1927.)*

மதச் சடங்குகளும் திருவிழாக்களும் சனாதன 'இந்து' மதக் கடவுளர்களின் எதிர்மறை (ஒழுக்கக்கேடான) குணங்களையே (notorious characteristics) பக்தர்களிடம் ஆழமாக விதைக்கின்றன. *(குடி அரசு. 04.09.1927.)* ஒழுக்கமான வாழ்க்கைக்கான வழிமுறைகளை மதத்தின் வழி கண்டறிய முடியாது என்றும், மதத்தின் வழி நம்மால் சடங்குகளை மட்டுமே செய்ய இயலும் என்றும் தந்தை பெரியார் குறிப்பிடுகின்றார். *(குடி அரசு. 18.09.1927.)* சனாதன/'இந்து' மதப் புராணங்களின் அடிப்படையில் கடவுளர் சிலைகளுக்கு ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டோ பல மனைவிகள் உள்ளதாக குறிப்பிடுகின்றன. அது போதாதென்று, ஒவ்வொரு வருடமும் அந்த கடவுளர் சிலைகளுக்கு திருமணச் சடங்குகள் நடத்தப்பட்டு வருவதுடன், அந்தக் கடவுளர்களுக்கு எண்ணிலடங்கா காமக்கிழத்திகள் இருப்பதாக கற்பிக்கப்பட்டு சடங்குகள் செய்யப்படுகின்றன. இது போன்ற சடங்குகளைச் செய்ய வேண்டியதன் அவசியங்களைக் குறித்து சுயமரியாதை இயக்கத்தினர் கேள்விகளை எழுப்பினர். *(குடி அரசு. 05.06.1948; விடுதலை. 24.10.1948.)*

சமூகத்தில் ஆண்கள் வணங்கும் ஆண்கடவுளர்களே ஆணாதிக்கத்தின் குறியீட்டு பிரதிநிதித்துவமாக விளங்கி வந்து இருக்கின்றனர் என்று இராகவன் தனது "ஜீவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?" என்ற கட்டுரையினில் குறிப்பிடுகின்றார். *(குடி அரசு. 06.12.1931.)* சனாதன 'இந்து' மதமானது பெண்கள் உரிய காவல் இல்லாமல் கற்புடனிருக்க முடியாது என்று வரையறை செய்கின்றது. *(குடி அரசு. 23.09.1928.)* மேலும், சனாதன 'இந்து' மதக் கடவுளர்கள் தங்களின் மனைவிமார்களை கைகளிலும், நாவுகளிலும், தோள்களிலும் இருப்பதாக காட்சிப்படுத்துவதன் மூலம் மக்கள் அத்தகைய கடவுளர்களிடமிருந்து நற்செயல்களை ஏதும் கற்க இயலாததுடன், அவர்களைச் சார்ந்த பெண்களைக் கூட சமமாகவோ, மதிப்புடனோ நடத்த முடியாதவர்களாக ஆக்கப்படுகின்றனர். மேலும், இத்தகைய கற்பிதங்கள் எல்லாம் சமூகத்தில் உள்ள பெண்களையும் குழந்தைகளையும் கூட அடிமைத்தனத்திலேயே நிரந்தரமாக இருக்க வழிவகைச் செய்கின்றது என்று தந்தை பெரியார் குறிப்பிடுகின்றார். *(பெரியார். 2004: 9-79.)*

இந்தவகையான சமூகமயமாக்கல் செயல்முறைகளானது அடிமைத்தனத்தை ஊக்குவிப்பதுடன், பொதுமைப்படுத்தவும் செய்து, இந்த நாட்டில் உள்ள எளிய மக்களை அடிமைப்படுத்தவும் செய்கின்றது. *(பெரியார். 2004: 9-79.)* இத்தகைய அமைப்புகளானது கடவுளரின் பெயரால் நடைபெறுமெனில் அத்தகைய கடவுளர்களை அழிக்கவேண்டும் என்று இராகவன் அவர்கள் குறிக்கின்றார். *(குடி அரசு. 06.12.1931.)* இது போன்ற மிகப்பெரிய சுமைகளானது அப்பாவப்பட்ட ஏழைக் கடவுளர்களின் தலைமேல் திணிக்கப்படுவதாக தந்தை பெரியார் எள்ளல் தொனியுடன் கூறி, சனாதன/'இந்து' மதமானது பெண்களை பொதுவாகவே விபச்சாரத் தீட்டு உள்ளவர்களாக உருவகப்படுத்துவதுடன், அவர்களை எப்பொழுதும் கண்காணிப்பிலே வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருப்பதை சுட்டிக்காட்டி, மத அடைப்படை வாதங்களானது பெண்களுக்கு ஒரு போதும் சுதந்திரமும் விடுதலையினையும் கொடுக்க இயலாது என்று எடுத்துரைக்கிறார். *(பெரியார். 2004: 9-79.)*

### மதமும், பெண்ணடிமைத்தனமும்

கருணையற்ற கடவுளின் பெயராலும், சாரமற்ற சட்டங்களின் பெயராலும் கொடுமை நிறைந்த சாத்திரங்களின் பெயராலும், சுயநல சூழ்ச்சிக்காரர்கள் பெண் மக்களை வதை செய்து வருவது ஈண்டெழுதி முடியாது என்றார் சுயமரியாதை இயக்க ஆளுமைகளுள் ஒருவரான நீலாவதி அம்மையார் அவர்கள். *(குடி அரசு. 22.05.1932.)* மதச் சம்பிரதாயமோ, புராண சம்பிரதாயமோ எது பெண்கள் விடுதலைக்கு விரோதமாக இருந்தாலும் அது ஒழிக்கப்பட வேண்டியது தான் என்றார் தந்தை பெரியார். *(விடுதலை. 11.10.1948.)*

பகுத்தறிவினை வளர்க்க இயலாத, ஆணாதிக்கக் கருத்துக்களையே அடிநாதமாகக் கொண்ட மதக் கோட்பாடுகளே பெண்ணடிமைத் தனத்தின்

மூலகாரணங்கள் என இலட்சுமி அம்மாள் அவர்கள் இரண்டாம் சுயமரியாதைக்கான பெண்கள் மாநாட்டில் குறிப்பிடுகின்றார். (குடி அரசு. 04.05.1930.) பெண்கள் எதையும் பகுத்தறிந்து பார்க்கவேண்டும். கல்லே கடவுள் என்று நம்புவதையும், பார்ப்பனர்களை கடவுள் அவதாரம் என்று நம்பி அவர்களுக்கு தானம் செய்வதையும் விட்டொழிக்க வேண்டும். சாணி, மூத்திரத்தைக் கலக்கி குடிப்பது என்பது மதம் அல்ல என்றார் தந்தை பெரியார். (குடி அரசு. 05.06.1948.)

அதேபோல், இந்தியப் பெண்கள் எந்த நிலையிலும் ஆண்களுக்கு அடிமையாகவும், அவர்களுடைய அனுபவப் பொருளாகவும், ஆண்களையே தெய்வமாகக் கருதி வணங்கித் தொண்டு செய்து கொண்டிருக்க வேண்டியவர்களாக இருக்க நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்ற தந்தை பெரியார் (குடி அரசு. 05.02.1933.), பெண்களுக்கு மட்டுமே சில விதிகள் சனாதன 'இந்து' மதத்தில் விதிக்கப்பட்டிருப்பதை அறிந்து அதற்கு ஆதாரமாக உள்ள மனுதர்மத்தினைத் தலைகீழாக மாற்றியமைத்தால் ஒழிய, (திராவிடப்) பெண்களுக்கு விடுதலை சாத்தியம் என்பது இல்லை என்று வாதிட்டார். (விடுதலை. 04.09.1946.)


சுயமரியாதை இயக்கத்தினர் ஒரு குறிப்பிட்ட சாதி, மதம், பண்பாடு என்ற எல்லைக் கூறுகளைக் கடந்தே மானுட விடுதலையினைப் பற்றி சிந்தித்து செயலாற்றினர். அந்த அடிப்படையினிலேயே, இஸ்லாமிய பெண் மக்கள் பெருமளவு பயன்படுத்தும் பர்தா/கோஷா/திரை அணியும் முறையினை ஒழிக்க வேண்டுமென்று இஸ்லாமியப் பெண்களின் உரிமை முழக்கமாய் 1928-ம் ஆண்டில் இலாயிலாபானோபீகம் என்ற அம்மையார் அவர்கள் குடி அரசு இதழினில் ஒரு கட்டுரை எழுதுகின்றார். அவர் குறிப்பிடுவதாவது, பர்தா/கோஷா/திரை அணியும் முறையானது முகம்மது நபி அவர்களின் காலத்திலோ அல்லது அவருக்கு பின் வந்த சிலரது காலத்திலும் கூட இருந்தது இல்லை என்று குறிப்பிட்டு, துருக்கியில் பர்தா/கோஷா/திரை அணியும் முறையானது நிறுத்தப்பட்டது போன்ற சீர்திருத்தங்கள் இந்தியாவிலும் நடைமுறைப் பெற வேண்டும் என்ற தனது எதிர்பார்ப்பினைப் பதிவு செய்ததுடன், இஸ்லாமிய மக்கள் கல்வி, செல்வம், கைத்தொழில் முதலியவற்றில் பிற்பட்ட நிலைகளில் உள்ளதுடன், வறுமையினாலும், அறியாமையினாலும் துன்புறுகின்றனர். இந்த பர்தா/கோஷா/திரை அணியும் வழக்கத்தினால் இஸ்லாமியப் பெண்கள் மற்ற சமூகங்களில் உள்ள மற்ற பெண்களினைப் போல உழைத்து சம்பாதிக்க வழியில்லாமல் போகின்றனது. இந்தியாவிலுள்ள மற்ற சமூகத்தினரைப்போல் இஸ்லாமியப் பெண்களும் முன்னேற வேண்டுமாயின் முதலில் இக்கொடிய வழக்கத்தை ஒழிக்கவேண்டும் என்றும், அதற்காக சங்கங்களை ஏற்படுத்தியும், பத்திரிகைகளின் மூலமாயும், இதர பலவழிகள் மூலமாயும் இஸ்லாமிய சகோதரிகளுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். (குடி அரசு. 14.10.1928.) சுயமரியாதை இயக்க பெண் ஆளுமையான நானாவதி அவர்களும் பெண்கள் முக்காடு இட்டுக் கொள்ளும் பழகத்தை நீக்க வேண்டும் என்பதனை "சுயநல ஆண்கள் ஆதிக்கம் வேண்டாம் கோஷாமுறை ஒழிக" என்ற தலைப்பினில் வலியுறுத்துகின்றார். (குடி அரசு. 30.10.1932.)

சுயமரியாதை இயக்கத்தின் மதம் குறித்த பார்வை என்பது வெறும் வரட்டு வாதமாக மட்டும் ஒருபோதும் இருந்தது இல்லை. அதேபோல், சுயமரியாதை இயக்கத்தினர் கண்மூடித்தனமாக ஒரு குறிபிட்ட மத நிறுவனத்தினை மாத்திரமோ அல்லது ஒரு குறிப்பிட்ட இனத்தின் நம்பிக்கைகளை மாத்திரமோ எதிர்த்தது இல்லை. மானுட சமூக விடுதலை என்பது மட்டுமே சுயமரியாதைக்காரர்கள் வைத்த அனைத்துவித வாதப்பிரதிவாதங்களின் அடிப்படைக் கூறாக அமைந்தது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும்.

**குறிப்புதவி நூல்கள்**


- ஆனைமுத்து, வே. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1-6. சென்னை: பெரியார் ஈ.வெ. இராமசாமி- நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை, 2009.
- உண்மை
- குடி அரசு
- திராவிடன்
- பகுத்தறிவு
- புரட்சி
- பெரியார், தந்தை. பெண் ஏன் அடிமையானாள்?. சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2004.
- ..., அழியட்டும் 'ஆண்மை'. சென்னை: பெரியார் திராவிடர் கழகம், 2010.
- ராஜதுரை, எஸ்.வி. மற்றும் வ. கீதா. பெரியார்: சுயமரியாதை சமதர்மம். கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம், 1999.
- விடுதலை
- வீரமணி, கி. தொகுப்பு. பெரியார் களஞ்சியம். சென்னை: பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, 2010.
- Geetha, V and S.V. Rajadurai. Towards a Non-Brahmin Millennim: From Iyothee Thass to Periyar. Calcutta: Samya, 1998.
- ......, Revolt: A Radical Weekly from Colonial Madras. Chennai: Periyar Dravidar Kazhagam, (n.d.).
- Jeevanandam, S and Rekha Pande. Devadasis in South India: A Journey from Sacred to Profane Spaces. Delhi: Kalpaz Publications, 2017.
- Revolt


●



# தமிழ் இலக்கண மொழியியல் ஆளுமை

ச. சுபாஷ் சந்திரபோஸ்

"ஐயா, நான் திருவையாற்று அரசர் கல்லூரியில்..." என்று சொல்லி முடிப்பதற்குள் "சொல்லவேண்டாம்' என்று பேச்சுக்குப் பேராசிரியர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். என்னவோ போலாகிவிட்டது! இவ்வளவிற்கும் நான் அவரிடம் பாடம் படித்ததில்லை. பேராசிரியர் செ.வை.சண்முகம் நான் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்திற்குப் படிக்கச் சென்றபோது அங்குப் பணியில் இல்லை. இந்தோனேசியாவின் ஜகார்த்தா பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றச் சென்றுவிட்டார்.

பேராசிரியரைச் சந்தித்தபோது சொல்லியல் ஆய்வுகள்(2000), காலங்கள்(2000), எழுத்தியல் ஆய்வுகள்(2001) என்னும் மூன்று இலக்கண-மொழியியல் தொடர்பான நான் எழுதிய நூல்கள் சிதம்பரத்திலுள்ள மெய்யப்பன் தமிழாய்வகம் வழி வெளிவந்திருந்தன.

கூட்டம் முடிந்தபிறகு அழைத்துப் பேசினார். இன்னும் ஆழமாகப் படித்து நிறைய எழுதுமாறு அறிவுரை கூறினார். தமிழ் இலக்கண நூல்களையும் சங்க இலக்கியங்களையும் ஆராய்ந்து எழுதுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் பேராசிரியர் செ.வை.சண்முகம் நெறிப்படுத்தினார். சில ஆண்டுகள் கழித்து அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் என்னுடைய பெயரும் குறிக்கப்பட்டிருந்தது. அதைப் படித்தபோது வசிட்டர் வாய்ச்சொல் என்பார்களே, அந்த மனநிலை ஏற்பட்டது! விரல்விட்டு எண்ணத்தக்க தமிழ் இலக்கண-மொழியியல் அறிஞர்களுள் ஒருவர்.

20ஆம் நூற்றாண்டு எழுத்ததிகார ஆய்வைப் பொறுத்தவரை வேங்கடராஜுலு ரெட்டியார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், க.பாலசுப்பிரமணியன், க.முருகையன், செ.வை.சண்முகம், சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் மறுவருணனை ஆய்விலும் கோட்பாட்டு ஆய்விலும் குறிப்பிடத்தக்கவர்கள் *(2014:108)*.

படைப்பிலக்கியங்களைத் தொடர்ந்து எழுதி அனைவர் மனதிலும் இடம்பெற்ற படைப்பாளர்கள் பலரைத் தமிழ் இலக்கிய வரலாற்றுவழி அறிந்து கொள்ளலாம். இலக்கியத் திறனாய்வுவழிப் புகழ்பெற்ற அறிஞர்களும் பலர் இருக்கின்றார்கள். இலக்கண-மொழியியலில் கரைகண்ட சான்றோர்களும் பலர் இருக்கின்றார்கள். ஆனால், பரவலாக அறியப்படாதவர்களாக இருப்பார்கள். அவர்கள்மேல் குறையில்லை. இலக்கண-மொழியியல் சார்ந்து படிப்பவர்கள், ஆய்வு செய்பவர்கள் மிகவும் குறைவாகவே இருப்பார்கள். இருப்பினும், பேராசிரியர் செ.வை.சண்முகம் தாம் செய்த ஆய்வுகளில் ஒரு மாமேதையாகவே மிளிர்கின்றார்.

அண்மையில் ஒரு செய்தியைப் படிக்கும்போது அருவருப்பாக இருந்தது. வாழ்விடம், தொழில், உறவு போன்றவற்றில்தான் சமுதாயம் சாதி, மதச் சாக்கடைகளில் மூழ்கிக் கிடக்கின்றது. அறிவுப் புலத்திலுமா பார்க்கப்படும்? ஒருவரின் ஆகச் சிறந்த ஆற்றல் வெளிப்படும்போது அவரின் சாதி, மதம் எல்லாம் கருகிக் காணாமல் போய்விடும். நம் கல்விக் கண்ணைத் திறந்தவர்களின் இனத்தை நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இருந்தாலும், அதையும் கிண்டிக்

கிளறிப் பார்ப்பவர்களும் இருக்கின்றார்கள்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்(திருக்.972) என்னும் முற்போக்குச் சிந்தனை பிறந்த தமிழ் மண்ணில் படைப்பாளரை மூன்று இனங்களாகப் பிரித்துப் பார்க்கும் நிலை ஒன்று இருப்பதை நினைத்து வருத்தமாக இருந்தது.

இடைநிலை இனத்தில் குறிப்பிடத்தக்க அளவில் கல்வியாளர் யாரும் இல்லை என்றொரு பதிவைப் பார்த்து "ஏனில்லை? இருக்கிறார்கள்" எனத் 'தமிழ்-இந்து-திசை' நடுப்பக்க எழுத்தாளர் இளவேனில் பலரைக் குறிப்பிடும்போது சுபாஷ் சந்திரபோஸ் என்னும் பெயரும் இருந்தது.

தஞ்சையைச் சேர்ந்த மற்றொரு பேராசிரியரான ச.சுபாஷ் சந்திரபோஸ் தமிழிலக்கணத்தில் பெரும்புலமை பெற்ற அரிதான அறிஞர்களில் ஒருவர். *(இந்து-தமிழ்-திசை, 21.12.2021, ப.6)*

இளவேனில் *(செல்வ புவியரசு)* பதிவைப் படிக்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. தன் பெயரைச் செய்தித்தாளில் பார்க்கும்போது யாருக்குத்தான் உவப்பு இருக்காது! எழுதப்பட்ட சூழல் வருத்தத்தைக் கொடுத்தது. இளவேனில் குறிப்பிடாத இன்னும் நூற்றுக்கணக்கான அறிஞர்கள் இருக்கின்றார்கள் என்பது தகவலுக்குத்தான். பெருமைப்பட அன்று.

நால் வருணத்தில் எங்களுக்கே மூளை அதிகம் என்று பேசுவோர் இன்றும் இருக்கின்றார்கள். மகாகவி, உ.வே.சாமிநாதையர் போன்றோரை எண்ணும்போது வருணம் தெரிவதில்லை. அது அவர்களின் எழுத்துகளில் ஆங்காங்கே ஒட்டிக்கொண்டிருந்தாலும் அவர்களின் புலமையே வெளிப்படும். இந்த வகையில் இனம் பாராமல் மதிக்கத்தக்க இலக்கண-மொழியியல் அறிஞரே பேராசிரியர் செ.வை.சண்முகம்.

அந்நியரின் ஆட்சியால் மக்களுக்குக் காலங்காலமாகத் தீங்கு செய்தவை ஒழிக்கப்பட்டன; நல்லவை வளர்ந்தன. அவர்கள் இந்நாட்டு வளங்களைச் சுரண்டினார்கள் என்பதில் கருத்து வேறுபாடில்லை. இங்கு மட்டும் என்ன வாழ்ந்தது? அவர்கள் வெளிநாட்டிற்குச் சுரண்டினார்கள் என்றால் இங்கு உள்நாட்டுச் சுரண்டல் நடந்தது.

இடைக்காலத்திலிருந்து கிடைக்கும் கல்வெட்டு, செப்பேடு, பிற குறிப்புகள்வழிப் பார்த்தால் தமிழகப் பொருளாதாரம் முழுவதும் பெருவாரியான மக்களுக்குப் பயன்படாமல் கோயில் கட்டுவது, தானம் செய்வது, யாகம் செய்வது என்றே செலவழிக்கப்பட்டுள்ளது.

ஊழல், மோசடி, கருப்புப்பணப் பதுக்கல், திருட்டு என இவற்றில் எல்லாம் சாதி, வருணப் பாகுபாடே இல்லை. வங்கிகளில் பல்லாயிரம் கோடிகளைக் கடன் வாங்கிக்கொண்டு பாதுகாப்பாகத் தப்பித்து வெளிநாடு போகின்றார்கள். கருப்புப் பணத்தைப் பல்லாயிரம் கோடிகளாகப் பதுக்கி வைத்துள்ளார்கள்.

எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது? எந்தக் கொள்ளி கெட்டது? என வினா எழுப்புவார்கள். இரண்டுமே இறக்குமதி செய்யப்பட்டவையே. முன்னது உழைக்கும் மக்களின் உரிமை எல்லாவற்றையும் எரித்துக் கரியாக்கியது; பின்னது, இருளைப் போக்க வழி காட்டியது.

அந்நியர்கள் அவர்கள் படித்தறிந்து கொள்ளத் தமிழ் மட்டுமல்லாமல் இந்திய மொழிகள் பலவற்றிற்கு இலக்கண நூல்கள் எழுதினார்கள். அவை பற்றி இலக்கண-மொழியியல் அறிஞர்களே அதிகம் அறிந்திருப்பார்கள். பேராசிரியர் செ.வை.சண்முகமும் அவர்களைப் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கின்றார் *(கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப்பணி, 1993)*.

மேலை நாட்டினரின் ஆய்வுகள் நூற்றாண்டு காலப் பழமை உடையவையாக இருந்தாலும் அவை முழுமையாகத் தமிழ் இலக்கணக் கல்வியில் பயன்படுத்தப்படாமை வரலாற்றுப் பிழையாகும். மாணவர்கள் விருப்பத்தோடு மொழியைப் படிக்கப் பொது மொழியியல், தமிழ் மொழியியல், திராவிட மொழியியலில் நிறைய நுட்பங்கள் உள்ளன. இவற்றில் புலமை பெற்ற பேராசிரியர் செ.வை.சண்முகம் ஆகச்சிறந்த தமிழ் இலக்கண-மொழியியல் அறிஞர் என்பதை அவரின் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் பறைசாற்றிக்கொண்டே இருக்கும்.

**செ.வை.சண்முகம் ஆய்வுகள்**

மொழியியல் கோட்பாடுகளை அறிந்துகொண்டு மரபிலக்கணங்களை ஆராய்ந்தால் நிறைய ஐயங்கள் தோன்றும். சிலவற்றுக்கு ஏதாவது ஓர் உரையில் விளக்கம் இருக்கும்; நமக்குத் தெரியாமல் இருக்கும். உயிர், மெய் என இலக்கணம், மொழியியல் இரண்டுமே எழுத்துகளைப் பாகுபாடு செய்கின்றன.

மரபிலக்கணங்களில் உயிர்கள் குறில்-நெடில் என்றும் மெய்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கும். பொதுவாக, பிறக்கும் இடத்தாலும் பிறக்கும் முறையாலும் வேறுபட்டிருக்கும். மரபிலக்கணங்களில் விளக்கப்படும் முறையிலேயே பெரும்பாலும் மொழியியலிலும் விளக்கப்பட்டிருக்கும். மொழியியல் இன்னொரு முக்கியமான விளக்கத்தையும் எழுத்திற்குக் கொடுக்கும்.

மொழியியல் எழுத்தை ஒலியன் *(Phoneme)* என்று குறிப்பிடும். பொருள்வேறுபாட்டை உணர்த்த எவை அடிப்படையாக இருக்கின்றனவோ அவை ஒலியன்கள் எனப்படும் *(The individual phonemes are then the smallest units in which word that distinguish meaning)*. அலை-இலை *(a-lai; i-lai)* என்பவற்றில் குற்றுயிர்களும் ஆட்டம்-ஈட்டம் *(a:-TTam; i:-TTam)* என்பவற்றில் நெட்டுயிர்களும் வேறுபட்டு வேறுவேறு பொருளை உணர்த்தக் காரணமாக இருக்கின்றன. கல்-பல் *(k-al; p-al)* என்பவற்றிலும் க்-ப் வேறுபடுவதால் பொருளும் வேறுபடும். அஃதாவது, எல்லாம் ஒன்றாக இருந்து

எவை வேறுபடுகின்றனவோ அவை ஒலியன்கள் எனப்படும். மரபிலக்கணத்தில் எழுத்துகள் எனப்படும்.

விளக்கினாலும் விளக்காவிட்டாலும் பொருள்தரக் கூடியவை எழுத்து-ஒலியன் எனப்படும். மொழியியல் படிக்கும்போதே இதை அடிப்படையாக விளக்கிவிடுவார்கள். மரபிலக்கணத்தில் தேடித் தேடிப் பார்த்தாலும் தெரியவே இல்லை.

பலர் தாங்கள் படித்த பேராசிரியர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள். நாமும் அவர்களிடம் படிக்கவில்லையே என்ற ஏக்கம் வரும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மொழியியல்(1975-77) படிக்கும்போது பேராசிரியர் செ.வை.சண்முகம் வெளிநாடு சென்றுவிட்டார். பாடம் கேட்கும் வாய்ப்பு நழுவிவிட்டது. அவரது நூல்கள், கட்டுரைகளைப் படிக்கும்போது நேரடியாக அவரிடம் பாடம் கேட்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதே என்னும் எண்ணம் அடிக்கடி தோன்றும். புத்தொளிப் பயிற்சிக்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபோது ஒருநாள் பேராசிரியரிடம் பாடம் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

அப்போது எனக்கு மரபிலக்கணத்தில் ஏற்பட்ட ஐயத்தைக் கேட்டேன். மரபிலக்கணத்தில் எழுத்தை வேறுபடுத்தப் பொருள் அடிப்படையானது என்பதைத் தெளிவாக விளக்கவில்லை என்றாலும் குறிப்பு உள்ளது என்று குறிப்பிட்டார். சிவஞான முனிவர் ‘தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி’ என்னும் நூலில் குறித்திருப்பதைக் கூறினார்.

இந்நெட்டெழுத்துக்கள் மொழிக் காரணமாய் வேறுபொருள் தந்து நிற்றலின் அதுபற்றி வேறு எடுத்து எண்ணி உயிர் பன்னீர் எழுத்து எனப்பட்டன. (ப.32)

மரபிலக்கணத்திலும் மொழியியலிலும் ஆழங்காற்பட்ட பேராசிரியர் செ.வை.சண்முகம் நாற்பதுக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களையும் இருநூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். மரபிலக்கணத்தை மொழியியல் கோட்பாட்டுவழி ஆராயத் தொடங்கிய பேராசிரியரின் ஆய்வுக்களம் பல தொடர்புடைய கிளைகளாகப் பல்கிப் பெருகுகின்றது. இலக்கண-மொழியியல், தமிழ்மொழி வளர்ச்சி, தமிழ் வளர்த்த சான்றோர், திராவிட மொழியியல், கவிதையியல், பதிப்பு எனப் பல பகுதிகளாகப் பகுத்து அவரது ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் ஒரு நூல் அளவிற்குக் கூட விளக்கி எழுதலாம். அண்மைக் காலத்தில், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், கல்வெட்டு, இலக்கியம், திராவிட மொழியியல், பதிப்பு எனப் பல பிரிவுகளிலும் ஆளுமை பெற்ற ஒருவர் இவரே எனத் துணிந்து கூறலாம்.

**இலக்கணமொழியியல்**

தமிழின் எழுத்தியல் (Phonology), சொல்லியல் (Morphology), தொடரியல் (Syntax) பற்றிய ஆய்வுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்களிடம் உள்ள ஒரு சிறப்பு என்னவென்றால் இம்மூன்றிலும் மரபிலக்கணம், மொழியியல் என்னும் இரண்டு கோட்பாடுகளிலும் ஆழங்காற்பட்டவர் என்பதை அவரது ஆய்வுவழி அறிந்துகொள்ளலாம். மொழியியல் என்பது மற்றைய அறிவியல் துறைகளைப் போலப் பல பாடப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. எழுத்தியலில் ஆழங்காற்பட்டவர்கள் சொல்லியல், தொடரியலைத் தெளிவாக அறிந்திருப்பார்கள்; அதிகமாக ஆய்வு மேற்கொள்ளமாட்டார்கள். ஆனால், செ.வை.சண்முகம் இம்மூன்றிலும் புலமை பெற்றவர்.

தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியரின் எழுத்திலக்கண ஆய்வு தொடர்பான நூல் (Nacci-narkkiniyar's conception of Phonology,1967) அவர்தம் எம்.லிட் பட்டத்திற்கு அளிக்கப்பட ஆய்வேடாகும். ’எழுத்திலக்கணக் கோட்பாடு (1980)’ என்னும் நூல் தமிழ் இலக்கணங்கள் எழுத்திலக்கணத்தை எவ்வாறு விளக்குகின்றன என்பதை விளக்கும் நூலாகும்.

தொல்காப்பியம், பிற இலக்கண நூல்கள், உரைகள் போன்றவற்றின் சொல்லிலக்கணக் கோட்பாட்டைப் பேராசிரியர் செ.வை.சண்முகம் மூன்று தொகுதிகளில் ஆராய்கின்றார். அனைத்துச் சொல்லிலக்கணக் கூறுகளும் மொழியியல் கோட்பாட்டு வழிப் பட்டைத் தீட்டப்படுகின்றன. சொல்லிலக்கணக் கோட்பாடு-1 (1984), சொல்லிலக்கணக் கோட்பாடு-2 (1986), சொல்லிலக்கணக் கோட்பாடு-3 (1992) என்னும் பெயரில் அம்மூன்று நூல்களும் வெளியாகியுள்ளன.

மொழியியல் விளக்கும் மொழி பற்றிய கோட்பாடுகள் புதுமையாக இருந்தாலும் அவற்றில் உள்ள பல கருத்துகள் உரையாசிரியர்களின் உரைகளிலேயே தெளிவாகவும் இலைமறை காயாகவும் விளக்கப்பட்டிருக்கும். மொழியியல் புரிதலோடு படிக்கும்போது உரையாசிரியர்களின் நுண்மாண் நுழைபுலம் பளிச்சென்று வெளிப்படும். பேராசிரியர் மரபிலக்கணங்களின் சொல்லிலக்கணம் தொடர்பான நிறை-குறைகளை மூன்று தொகுதிகளிலும் தெளிவாக விளக்குகின்றார்.

தொல்காப்பியத் தொடரியல்(2004) என்பது தமிழ்த் தொடரமைப்புகளை மொழியியல்வழி விளக்கும் நூலாகும். பொதுவாக, மரபிலக்கணங்கள் சொல்லிலக்கணத்தையும் தொடரிலக்கணத்தையும் தெளிவாக வரையறை செய்வதில்லை. இரண்டையும் சேர்த்தே சொல்லதிகாரம் விளக்கும். 'வா' என்பது சொல் நிலையில் ஒரு வினையடி. (நீ) வா என்னும்போது ஒரு தொடர். எழுவாய் தோன்றா எழுவாயாக மறைந்துள்ளது. மொழியியல் வளர்ச்சி அடைந்தபிறகு எல்லா மொழிகளிலும் எழுத்தியல், சொல்லியல், தொடரியல் என்னும் மூன்றுமே தனித்தனியாக விளக்கப்படுகின்றன.

**தமிழ்மொழி வளர்ச்சி**

மொழி இல்லை என்றால் மானுடம் தற்போதும் மேலும் வளர்ச்சி பெற்ற ஒரு குரங்கினமாகவே

வாழ்ந்துகொண்டிருக்கும். ஓர் இனத்தை அழிக்க மக்களை அழிக்க வேண்டியதில்லை; அவர்கள் பேசும் மொழியை அழிக்க வேண்டியதில்லை; செல்லாக்காசு ஆக்கிவிட்டால் போதும். தானாகவே அழிந்துவிடும். இதனால்தான் மக்கள்தொகை அதிகமாக உள்ளவர்கள் மற்ற இனம் பேசும் மொழியை ஆளும் வர்க்கத்தின் ஆதரவோடு அழிக்க முற்படுகின்றார்கள்.

தம் தலையைக் கொள்ளிக்கட்டையால் சொறிந்துகொள்வது போலத் தாய்மொழியை, மொழியில் படிக்காமல் அன்னநடை நடக்கப்போய் மக்கள் தம் நடையையும் இழந்துவிட்டார்கள். மனப்பாடம் செய்து கக்குவதிலேயே காலம் ஓடுகின்றது. தாய்மொழியை ஒதுக்கிவிட்டு ஆங்கிலம் கற்பதால் இந்த நிலை; இச்சூழலில் மூன்றாவதாக ஒரு மொழியைப் படிக்கவேண்டுமாம். படிப்பதில் தவறில்லை; திணிப்பதில்தான் சிக்கல் ஏற்படுகின்றது.

பல்லாயிரம் கோடிகளை வராத போருக்காக இராணுவத் தளவாடங்களை வாங்கச் செலவிடுகின்றார்கள். மாநில மொழிகளை வளர்க்கத் தாராளமாகச் செலவு செய்யலாம். புதிய கண்டுபிடிப்புகளைத் தாய்மொழியில் கற்றுத்தரவேண்டும். தாய்மொழியை வளர்க்கவும் அறிவியல் தமிழை வளர்க்கவும் அறிஞர்கள் வழிகாட்டிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். 1930களிலேயே மருத்துவத்தைத் தமிழ்வழிக் கற்றுக்கொடுக்க இலங்கையில் முயற்சி செய்துள்ளார்கள். பேராசிரியர் செ.வை.சண்முகம், இராம. சுந்தரம் போன்றோர் ஊதுகின்ற சங்கை ஊதிக்கொண்டுதான் இருந்தார்கள். மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும்(1989), அறிவியல் தமிழாக்கம்(1994), இலக்கண உருவாக்கம்(1994), இலக்கண ஆய்வு(2004), மொழி ஆய்வு(2005) போன்ற நூல்களிலும் பல கட்டுரைகளிலும் தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பேராசிரியர் செ.வை.சண்முகம் பல அரிய கருத்துகளையும் கோட்பாடுகளையும் வழங்கியுள்ளார். மேலும், மொழி, அது பேச்சுமொழி, வரிவடிவமொழி என எப்படி இருந்தாலும் ஒலிப்பில் வேறுபடும், வரிவடிவில் வேறுபடும். இவற்றை விளக்கப் பேராசிரியர் எழுத்துச் சீர்திருத்தம்(1978), மொழியும் எழுத்தும்(2013) போன்ற நூல்களையும் சில ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

**தமிழ் வளர்த்த சான்றோர்**

பள்ளிக்கூடம், கல்லூரிகளில் கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள், துறை சார்ந்த சான்றோர், மானுட விழுமியங்களைக் காக்கப் பாடுபட்டோர் என அறிவை வளர்க்க உதவிய சான்றோர்கள் மனதிற்குள் அடிக்கடி கிளர்ந்து எழுவார்கள். பேராசிரியர் செ.வை.சண்முகம் தமக்குப் படிக்கவும் பணியாற்றவும் வாய்ப்பளித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் நினைவுகூர்வார். இப்பல்கலைக்கழகமே முதன்முதலாகத் தமிழுக்குத் தனித்துறை நிறுவியதையும் மொழியியல் துறை தொடங்கியதையும் நன்றியுணர்வுடன் கூறுகின்றார் (மொழியியல், 8:3-4, ப.24).

கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப் பணி(1993), நான் அறிந்த தமிழ் அறிஞர்கள்(2017) என்னும் இரண்டு நூல்களில் இலக்கணம், இலக்கியம் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட சான்றோர்கள் சிலரைப் பதிவு செய்துள்ளார். குறிப்பாகக் கிறித்துவப் பாதிரியார்கள், அறிஞர்களின் பணி அளப்பரியதாகும்.

அவர்கள் மதம் மாற்றியதைக் காலங்காலமாகப் பேசுகின்றார்கள். அவர்கள் இங்கு வாணிபம் செய்ய வந்தவர்கள். எப்படி இந்தியாவை ஆள முடிந்தது? மதம் மாற்ற முடிந்தது? வருணத்தால் மக்களைப் பிரித்து, அவர்களின் உழைப்பை உறிஞ்சி, உரிமையைப் பறித்தன இங்குள்ள ஆளும் வர்க்கங்கள். கல்வி, மருத்துவம், வேலை, உணவு கொடுத்தால் மக்கள் ஏன் மதம் மாறப் போகிறார்கள்?

மானுடத்தில் உயர்வு-தாழ்வைப் போதித்ததற்காக வெட்கப்படவேண்டும். அதை விட்டுவிட்டு மதமாற்றச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று துடிக்கின்றார்கள். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தொழில், உணவு, ஆசாரம் என எல்லாவற்றையும் மாற்றிக் கொள்பவர்கள் மதமாற்றத்தைப் பெரிதுபடுத்துபவர்கள் மல்லாக்கப் படுத்துக்கொண்டு எச்சிலைத் துப்புகிறவர்கள். அவர்கள் மட்டும் துப்பிக்கொள்ளவில்லை. பேதங்களை வளர்த்த முன்னோர்களின் முகத்திலும் துப்பி விடுகின்றார்கள்.

திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட்டு கால்டுவெல்லைப் பற்றியும் தம்நூலில் ஒரு கட்டுரையைப் பேராசிரியர் செ.வை.சண்முகம் எழுதியுள்ளார். வடமொழியாகிய சமஸ்கிருதமே தமிழ் மற்றுமுள்ள திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி என்று உண்மைக்குப் புறம்பாகக் கூச்சம் இல்லாமல் தமிழ் மண்ணில் விளைந்ததை உண்டு வாழ்ந்து கொண்டு கூறி வந்துள்ளார்கள். ஆரியர்-திராவிடர் என்ற பாகுபாட்டைச் செய்தவர் கால்டுவெல் எனக் குறை கூறுகிறார்கள். இந்தோ - ஆரியம் இந்த மண்ணுக்கு உரியதன்று என்று உண்மையைச் சொன்னால் கசக்கத்தான் செய்யும்.

சங்க காலத்தில் இல்லாத மதமும் கடவுளர்களும் கோயில்களும் உயர்வு-தாழ்வை வளர்க்கும் சாதி பேதங்களும் இடைக் காலத்திற்குப் பிறகு எப்படி வந்தன? உண்மையை எல்லீஸ், கால்டுவெல் மட்டும் வெளிப்படுத்தவில்லை; 18ஆம் நூற்றாண்டிலேயே வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones, 1788) என்பவர் சமஸ்கிருதம் இந்தோ-ஐரோப்பிய மொழிகளாகிய கிரேக்கம், இலத்தின் மொழிகளோடு தொடர்புடையது என்று கூறிவிட்டார்.

எல்லாச் சீரழிவிற்கும் ஆரியர் நுழைவே காரணம் என்பதை விட்டுவிட்டுத் திராவிடம்-தமிழ் என்று எதிர்மறையாகப் பேசுகின்றார்கள். திராவிட மொழிக் குடும்பம் தொடர்பாக 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நூற்றுக்கணக்கான நூல்களும் கட்டுரைகளும் வந்துள்ளன. டி.பர்ரோ (T.Burrow), எம்.பி.எமனோ (M.B.Emeneau) போன்ற மேலை நாட்டுப் பேராசிரியர்கள் எழுதிக் குவித்துள்ளார்கள்.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் அவர்கள் இருவரும் சமஸ்கிருதப் பேராசிரியர்கள்!

திராவிட மொழிக் குடும்பத்தை மீட்டுருவாக்கம் செய்வதால் அனைவரும் ஒருதாய் மக்கள் என்பதை அறியலாம். ஆரியர் வேறு இனத்தவர் என்பதை உணரலாம். அதனால்தான் பெரும்பான்மையானவர்கள் தமிழரின் தொன்மை, பெருமை அகழாய்வு வழியாக வெளிப்படும்போது எரிச்சல் அடைகின்றார்கள். பானை ஓடும் மண்டை ஓடும் தானே கிடைக்கின்றன என்கின்றார்கள். அகழாய்வில் சொர்க்கலோகமா கிடைக்கும்? உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்பவர்களைக் காணத் தேடிப் போக வேண்டியதில்லை.

மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்றவை தமிழோடு தொடர்புடையவை. இருப்பினும் இம்மொழிகளைப் பேசும் மக்களை ஒன்று சேர்க்கமுடியாது. தவித்த வாய்க்குத் தண்ணீர் தர மறுக்கிறார்கள். கடலில் கலந்தாலும் தமிழகத்திற்குள் பாய விரும்பமாட்டார்கள்.

கால்டுவெல் உண்மை நிலையை *A Comparative Grammar of Dravidian or South Indian Family of Languages(1856)* என்னும் நூலில் விளக்கியுள்ளார். பேராசரியர் செ.வை.சண்முகம் தேவைப்பட்ட இடங்களில் எல்லாம் தம் நூல்கள், கட்டுரைகளில் கால்டுவெல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

**திராவிட மொழியியல்**

நூற்பா, செய்யுள் போன்றவற்றுக்கு உரைகள்வழி நயம் காண்பதைவிட அவற்றைப் பல்வேறு துறை சார்ந்த கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆராயும்போது அவற்றின் நுட்பம் வெளிப்படும். இந்தியா ஆன்மீக பூமி என்று சொல்லியும் எழுதியும் மகிழ்கின்றார்கள். இதிகாசம், புராணம் நிறைந்த வடநாட்டுக்கு அந்தப் பெருமை போய்ச்சேரலாம். இடைக் காலத்திற்குப் பிறகு தென்னாட்டிற்கு அந்தப் பெருமை சேர்ந்ததே தவிர, சங்க காலத்தில் அதற்கு இடமில்லை என்பதைத் தொல்பொருள் குறிப்பாக அகழாய்வுவழி அறிந்து கொள்ள முடிகின்றது. வரலாறு, சமுதாயவியல், மானுடவியல், ஒப்பியல் போன்றவை சார்ந்த கோட்பாடுகளைத் தொடர்புபடுத்தி ஆராயும்போதுதான் சங்க இலக்கியங்களின் மேன்மை வெளிப்படும்.

மண் சார்ந்து இயற்கையோடு இயற்கையாகப் பழந்தமிழர் வாழ்க்கைப் பதிவு போன்று உலக மொழிகளில் குறிப்பாகச் செவ்வியல் மொழிகளில் இல்லை என்று துணிந்து கூறலாம். தொல்காப்பியம் விளக்கும் மொழி இலக்கணமும் அப்படிப்பட்ட பெருமை வாய்ந்ததே. பொது மொழியியல், திராவிட மொழியியல் கோட்பாடுகள் அதன் நுட்பத்தை மேலும் வெளிப்படுத்துகின்றன.

பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்களின் ஆளுமை மொழிப்புலம் சார்ந்ததால் பொது வெளியில் அதிகம் தெரிய வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அவர் தமிழக அரசு இறுதி மரியாதை அளித்துப் பெருமைப்படுத்தி இருக்கவேண்டிய ஆன்றவிந்து அடங்கிய சான்றோர் ஆவார்.

கால்டுவெல்லைத் தொடர்ந்து டி.பர்ரோ, எம்.பி.எமனோ போன்றோர் திராவிட மொழியியலுக்குப் பெரும் பங்காற்றியுள்ளார்கள். இந்திய அளவில் பிஎச். கிருஷ்ணமூர்த்தி *(The Dravidian Languages,2003)*, பி.எஸ்.சுப்பிரமணியம் *(Dravidian Verb Morphology,1971; Dravidian Comparative Grammar-1,2008)* போன்றோரைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். அன்மையில் தமிழக முதல்வர் வெளியிட்ட நூலும் *(P.S. Subrahmanyam, Dravidian Comparative Grammar - II)* குறிப்பிடத்தக்கது. திராவிட மொழியியல் தொடர்பாக ஏராளமான ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்கள். இவர்களுக்கு நிகராகப் பேராசிரியர் செ.வை.சண்முகமும் எண்ணத்தக்கவர்.

*Dravidian Nouns (A Comparative Study, 1971)* என்னும் நூலைத் திராவிடவியல் கோட்பாட்டை மறுப்பவர்கள் படித்துப்பார்க்கவேண்டும். பால் பாகுபாடு, எண்ணுப் பெயர்கள், மூவிடப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள், சாரியைகள், வேற்றுமை உருபுகள் போன்ற இலக்கணக் கூறுகளில் திராவிட மொழிகளுக்குள் எவ்வளவு ஒற்றுமை உள்ளது என்பதை அறிந்துகொள்ளலாம். ஒன்றிரண்டு திராவிட மொழிகளில் அன்று; இந்தியாவின் தெற்கு முதல் வடக்கு வரையுள்ள இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மொழிகளில் இந்த ஒற்றுமை இருக்கின்றது.

மலையாள மொழியின் முதல் இலக்கணம்(1992) என்னும் நூல் மலையாள மொழியின் முதல் இலக்கண நூலாகிய லீலாதிலகம் பற்றியது. பதினான்காம் நூற்றாண்டில் எழுத்தச்சன் என்பவரால் இந்நூல் இயற்றப்பட்டது. இந்நூலை ஆய்வு செய்யப் பேராசிரியருக்குத் துணிவைக் கொடுத்தது அவருடைய மொழியியற் புலமையே எனலாம்.

**கவிதையியல்**

மொழி பற்றிய ஆய்வை மொழியியல் அறிஞர்கள் மேற்கொள்வர். இலக்கிய ஆய்வைத் தமிழ்ப் பேராசிரியர்களும் பிற ஆய்வாளர்களும் செய்வார்கள். இந்நிலை மொழியியல் வளர்ச்சியடைந்த காலத்திலிருந்து நடைமுறையாக இருந்தது. இலக்கியங்களைப் படித்துப் பாராட்டுவது அல்லது திறனாய்வு செய்வது என்னும் முறையைக் கடந்து அவற்றின் அமைப்பை விளக்கும் முறை அண்மைக் காலத்தில் வளர்ந்துள்ளது. பேராசிரியர்கள் ச.அகத்தியலிங்கம், செ.வை.சண்முகம் போன்றோர் இவ்வகையான ஆய்விற்கு வழிகோலியிருக்கின்றனர். அதாவது மொழியின் கட்டமைப்பை மொழியியல் விளக்குவதைப் போன்று இலக்கியங்களையும் அணுகலாம் என்பது அடிப்படைக் கருத்தாகும்.

யாப்பும் நோக்கும்-தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்(2006), கவிதை

ஆய்வு(2009), அழகின் சிரிப்பு(2016), குயில்பாட்டுத் திறன்(2019), பொருளிலக்கணக் கோட்பாடு-1(2011), பொருளிலக்கணக் கோட்பாடு-2(2012), பொருளிலக்கணக் கோட்பாடு-3(2019) போன்றவை இலக்கண-மொழியியல் அறிஞர் செ.வை.சண்முகம் அவர்களின் இலக்கிய ஆய்விற்கான பங்களிப்பாகும். அகழாய்வுகள் தமிழர்தம் தனித்தன்மையை விளக்கச் சான்றாக அமைகின்றன. அவ்வாறே மொழியியல் வழியிலான இலக்கிய ஆய்வும் தமிழர்தம் இலக்கியக் கோட்பாடுகளை மேலும் விரிவுபடுத்த உதவும்.

**பதிப்பு**

பேராசிரியர் செ.வை.சண்முகம் பல கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகளுக்குப் பதிப்பாசிரியராக இருந்துள்ளார். ஓர் அரிய இலக்கண நூலை(சுவாமிநாதம்) வெளிநாட்டில் கண்டறிந்து கொண்டுவந்து பதிப்பித்தது குறிப்பிடத்தக்க பணியாகும்.

இலண்டன் சென்றிருந்தபோது பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் கையெழுத்துப் பிரதியாக இருந்த சுவாமிநாதம் என்னும் இலக்கண நூலை எடுத்து வந்து விரிவாக ஆராய்ந்து பதிப்பித்துள்ளார். சுவாமி கவிராயரால் 19ஆம் நூற்றாண்டில் யாக்கப் பெற்ற சுவாமிநாதம் ஐந்திலக்கணங்களையும் விளக்கும் நூலாகும்.

இப்படிப் பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்களின் தமிழ்ப் பணியை எழுதிக்கொண்டே போகலாம். தமிழ் இலக்கணத்தையும் சங்க இலக்கிய மொழியையும் அவர் விளக்கியிருக்கும் பாங்கு வியப்பூட்டும்.

அரியலூர் மாவட்டம் செயங்கொண்ட சோழபுரத்தில் 23.11.1932இல் பிறந்த செ.வை.சண்முகம் அப்பகுதியிலேயே பள்ளிக் கல்வியைக் கற்றுக் கும்பகோணத்தில் அரசு கலைக் கல்லூரியில் இடைநிலை (Intermediate) வகுப்பை முடித்துள்ளார். பிறகு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் பட்டப்படிப்பைப் படித்துள்ளார் (B.A. Honours). பணியாற்றிக்கொண்டே எம்.லிட், முனைவர் பட்டம் போன்ற ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள ரெடிங் பல்கலைக்கழகத்திலும் இந்தோனேசியாவில் உள்ள ஜகார்த்தா பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். பணி ஓய்விற்குப் பிறகும் பல்வேறு உயராய்வு நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டுள்ளார். அண்மையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள நூல்களில் பேராசிரியரின் Historical Grammar of Tamil-Noun Morphology என்பதும் ஒன்றாகும்.

கி.ராஜநாராயணன்(99 வயது), இரா. இளங்குமரனார்(91 வயது) போன்று பேராசிரியர் செ.வை.சண்முகமும் 91 வயதுவரை வாழ்ந்து இறுதி மூச்சு உள்ளவரை தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுள்ளார். அவரது நூலாக்கம் பெறாத கட்டுரைகளை எல்லாம் தொகுத்து வெளியிட வேண்டும். தமிழ் உயராய்விற்கும் பழந்தமிழரின் அறிவுப் புலத்தை அறிந்துகொள்ளவும் பேராசிரியரின் ஆய்வுகளை ஒட்டுமொத்தமாக வெளியடவேண்டும்.

தமிழை உலக அரங்கிற்குக் கொண்டு செல்லுதல், அண்மையில் தமிழக முதல்வர் அறிவித்த திசைதோறும் திராவிடம் என்பவை தமிழ் வளர்ச்சிக்கும் திராவிடவியல் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும். மலையாளம், கன்னடம், தெலுங்கு பேசுவோர் திராவிடக் கோட்பாட்டின் அருமையை உணர்வதைவிடத் தமிழ் பேசுவோர் அதிகம் உணரவேண்டும். தமிழரே திராவிடத்தின் தலைமை மாந்தர்.

தமிழ் நூல்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்ப்பதைப் போன்று திராவிட மொழியியல் தொடர்பாக நூற்றுக்கணக்காக வெளிவந்துள்ள நூல்களையும் கட்டுரைகளையும் மறுபதிப்பாகக் கொண்டுவரவேண்டும். பேராசிரியர்கள் டி.பர்ரோ, எம்.பி.எமனோ தொகுத்து வெளியிட்டுள்ள *A Dravidian Etymological Dictionary,* அவர்களின் திராவிட மொழிகள் தொடர்பான ஆய்வு நூல்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையம் வெளியிட்டுள்ள நூல்கள், கேரளப் பல்கலைக்கழகவழி வெளியிடப்பட்டவை, பூனா டெக்கான் கல்லூரிவழி வெளியிடப்பட்டவை எனப் பல நூல்கள் முதற்பதிப்போடு நின்றுவிட்டன.

திராவிட மொழியியல் தொடர்பாக வெளிவந்து மறுபதிப்பைக் காணாதவை எல்லாம் தமிழ் ஆய்விற்குப் பெரிதும் உதவும். இவற்றை எல்லாம் தேடித் தொகுத்து வெளியிட்டால் மேலும் தமிழ் வளர்ச்சி அடையும். தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் போன்றவற்றைப் பிற துறை சார்ந்த புரிதலோடு படிக்கும்போதுதான் தமிழர்தம் அறிவுப்புலம் புராணம், இதிகாசம் சார்ந்தது அன்று; வாழ்வியலோடு தொடர்புடையது என்பதை அறியமுடியும். மொழியியல், தொல்லியல், மானுடவியல், சமுதாயவியல், வரலாறு போன்ற துறைகளின் கோட்பாடுகள் தமிழரின் தொன்மையை அறிய மேலும் உதவும்.

தமிழக அரசு வழங்கிய கம்பர் விருது, ஒன்றிய அரசு வழங்கிய தொல்காப்பியர் விருது போன்றவை பேராசிரியரின் தமிழ்ப் பணிக்குக் கிடைத்த மகுடங்களாகும்.

பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்களின் தமிழ்ப் பணியை அறிந்தபோது மறுபதிப்பிற்கு வராத தமிழ்-திராவிடக் களஞ்சியங்கள் எல்லாம் நினைவிற்கு வந்தன. தமிழக அரசு இதனையும் கவனத்தில் எடுத்துக்கொண்டால் பேராசிரியர் செ.வை.சண்முகம் போன்ற ஆன்றவிந்து அடங்கிய சான்றோரின் தமிழ்ப் பணிக்கு மேலும் மகுடம் சூட்டுவது போலாகும்.

●